DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker
Joy H Selvanayagam, Broker
Homelife/Future Realty Inc., Brokerage

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
Ragu Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam, Broker
RE/MAX
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam, Sales Representative
RE/MAX Community

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel: 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்
சிந்திக்கும் தமிழ் உலகின் உலகில் எதிர்க்கும் கதிர் இது
$1.00
416-752-1524
416-752-6703
உதயம் 1300
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday March 5, 2021

# கனடா 'உதயன்' பத்திரிகை நடத்திய வெள்ளி விழா ஞாபகார்த்த மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி இரண்டு நாட்கள் சிறப்பாக நடைபெற்றது



கனடா உதயன் பத்திரிகையின் வெள்ளி விழா ஆண்டாகத் திகழும் 2021 ம் ஆண்டின் இறுதி வரையிலும் மாதாந்தம் ஒரு நிகழ்வையென்றாலும் இணையவழி ஊடாக நடத்த வேண்டும் என்ற தீர்மானத்தின் படி ஏற்பாடு செய்யப்பெற்ற உலகளாவிய மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி 27-02-2021 சனிக்கிழமையும் 28-02-2021 ஞாயிற்றுக்கிழமையும் கனடிய நேரம் : காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்றது.

போட்டிக்குரிய அனைத்து ஏற்பாடுகளையும், உதயன் பத்திரிகையின் நிறுவனரும் பிரதம ஆசிரியருமான லோகன் லோகேந்திரலிங்கம் அவர்கள் தனது குழுவினரோடு இணைந்து செய்திருந்தார்..

இங்கே காணப்படும் படத்தில் பேச்சுப்போட்டியில் பங்கெடுத்த 45 போட்டியாளர்களில் முதற்பரிசைத் தட்டிக் கொண்ட தமிழ்நாடு கோயமுத்தூர் நகரைச் சேர்ந்த செல்வி சினேகா பாலமுருகனின் படம் இங்கு காணப்படுகின்றது. செய்திருந்தார். *(உள்ளே விபரமான செய்தி 7ம் பக்கத்தில்)*

# கனடா-ரொரன்ரோ மனிய நேயக் குரல் அமைப்பின் அனுசரனையில் கிளிநொச்சி அழகாபுரிப் பாடசாலையில் பரிசளிப்பு விழா!





கனடாவில் இயங்கிவரும் ரொரன்ரோ மனிய நேயக் குரல் அமைப்பின் அனுசரனையில் கிளிநொச்சி மாவட்டத்தின் அழகாபுரிக் கிராமத்தில் உள்ள அழகாபுரி வித்தியாலயத்தில் புலமைப் பரிசில் பரிசளிப்பு விழா வெகு சிறப்பாக 25.02.2021 அன்று இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய கிராமங்களில் ஒன்றான அழகாபுரியில் அமைந்திருக்கும் கிளிநொச்சி அழகாபுரி வித்தியாலயத்தில் 106 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் இயங்கும் இப் பாடசாலை மாணவர்களுக்கு ரொன்ரோ மனித நேய அமைப்பு கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளது.

இந்த திட்டத்திற்கு கனடாவில், ரொரன்ரொ மனித நேயக்குரல் அமைப்பின் சார்பாக விடுக்கப்பெற்ற வேண்டுகோளை ஏற்று நிதி அன்பளிப்புக்களை வழங்கிய வர்த்தகப் பிரமுகர்கள் திரு கணேசன் சுகுமார், பராராஜசிங்கம் செல்வநாயகம் மற்றும் ஒன்றாரியோ அரச திணைக்களத்தின் அதிகாரி திரு ந. கதிர்காமநாதன் ஆகியோருக்கு ரொரன்ரோ மனித நேயக் குரல் அமைப்பின் இயக்குனர் சபை நன்றி தெரிவிக்கின்றது.

*(உள்ளே விபரமான செய்தி 9பக்கத்தில்)*

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX Realtron Team

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404


THE GUARDIAN
HOME REALTY INC.,BROKERAGE
Where life begins...
வீடு வாங்க
விற்க அல்லது
அது தொடர்பான
விடயங்களை அறியவும்,
இலவச ஆலோசனைகளை
பெற்றுக்கொள்ளவும்
முன்னணி நிறுவனமான
The Guardian
Home Realty
நிறுவனத்தை
நாடுங்கள்
REAL ESTATE முகவராக விரும்பும் அன்பர்களே
Join our team!
Discover how our results producing motivation, coaching, marketing, and technical support will maximize your income as a
sales professional.
Email us at info@theguardianhomes.com
for more details.
80 Nashdene Rd, unit# F119 Scarborough, ON M1V 5E4
416 090 6565 | www.theguardianhomes.com

## உதயன் கதிரோட்டம்

# வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழ்த் தேசியத்தை சிதைக்க பெரும்பான்மை அரசியல்வாதிகளோடு கைகோர்த்து நிற்கும் இளைய தலைமுறை அரசியல் வாதிகள்

கிழக்கு மாகாணத்தில், தற்போதைய அரசியல் கருத்துப் பரிமாற்றங்கள், மற்றும் தென்னிலங்கை அரசியல் கட்சிகள் பக்கம் தாவியுள்ள சில இளைய தலைமுறை அரசியல் செயற்பாட்டாளர்களால் கிழக்கில் தமிழர்களின் இயல்பு வாழ்க்கை சீர் குலைக்கப்பட்டு, அங்கு தமிழ் முஸ்லிம் பிரிவினை வாதம் மேலும் அதிகரிப்பதற்குரிய சிறு பிள்ளைத் தனமான கருத்துக்களை பரப்பப்பட்டு வருவதை அவதானிக்கும் போது, சாதாரண மக்களிடத்தே உள்ள ஒற்றுமை மற்றும் சகோதர உறவுகள் ஆகியன பாதிக்கப்படும் என்பதை நாம் ஒரு எச்சரிக்கையாக குறிப்பிட விரும்புகின்றோம்.

கிழக்குத் தமிழர்களைவிட முஸ்லிம் மக்களே கிழக்கில் பெருமளிவில் பாதிக்கப்பட்டவர்கள் என்பது உண்மை. கிழக்கும் முஸ்லிம்களை தலைமை தாங்கிய முஸ்லிம் அரசியல்வாதிகள் கொழும்புத் தலைமைகளாகவே இருந்தார்கள். அவர்களுக்கு வாக்கு வங்கிகளாகவே கிழக்கின் முஸ்லிம் மக்கள் இருந்தார்களே தவிர, அரசியல்வாதிகளால் பயனடையவில்லை.

இந்நிலையில், அஸ்ரப் போன்ற கிழக்கு மண்ணிலிருந்த எழுந்த அரசியல்வாதிகள் சிலரும் கொழும்புத் தலைமைகளால் கொல்லப்பட்டார்கள் என்பது இதற்கு சான்றாகும்.

இவ்வாறான நிலையில் தமிழ் மக்கள் இழந்த உரிமைகளையும் சலுகைகளையும் குறிப்பாக கிழக்கு மாகாண சபையின் அதிகாரத்தையும் மகிந்தா தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மூலம் பெற்றுத் தருவதாகவும், அதற்காக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகளை தமிழ் மக்கள் ஓதுக்க வேண்டும் எனவும் சிறுபான்மையின மக்களின் ஏகோபித்த வாக்குகளால் கிழக்கு மாகாண சபையை கைப்பற்றி இழந்த அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தயாராக இருக்கின்றது. என்றும் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் கூறுகின்ற விடயங்கள் அபாயச் சங்கு போலவே எமது காதுகளில் ஒலிக்கின்றன. அத்துடன் அவை, இரண்டு விடயங்களுக்கு பாதகமாகவும் அமையவுள்ளன என்பதையும் கூறிவைக்க விரும்புகின்றோம்.

தமிழர்களின் அபிலாசைகளை தென்னிலங்கை கட்சிகளுகளின் கால்களுக்குள் கொண்டு செல்வது ஒன்றாகும். மற்றைய பாதிப்பு வடக்கும் கிழக்கும் நிர்வாக ரீதியாக பிரிக்கப்பட்டிருந்தாலும், மொழியும் கலாச்சாரமும் கலந்த ஒரு தமிழ்த் தேசியத்திற்கு எதிராக விதைக்கப்பட்ட 'குண்டுகள்' மீண்டும் பலமாக வெடித்தெழும்பும் போது தற்போது வந்துள்ள இந்த இளைய தலைமுறை அரசியல் செயற்பாட்டாளர்களும் சேர்ந்து இல்லாமல் ஆக்கப்படுவார்கள். இதுவே நாம் இன்னும் சில ஆண்டுகளில் காணப்போகின்ற மோசமான மாற்றங்களாகும்.

# கிழக்கில் தமிழ் மக்கள் இழந்த உரிமைகளை மகிந்தா மூலம் பெற்றுத் தருவதாகக் கூறும் பொதுஜன பெரமுன அமைப்பாளர்?

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் இழந்த உரிமைகளையும் சலுகைகளையும் குறிப்பாக கிழக்கு மாகாண சபையின் அதிகாரத்தையும் மகிந்தா தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மூலம் பெற்றுத் தருவதாகவும், அதற்காக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகளை தமிழ் மக்கள் ஓதுக்க வேண்டும் எனவும் சிறுபான்மையின மக்களின் ஏகோபித்த வாக்குகளால் கிழக்கு மாகாண சபையை கைப்பற்றி இழந்த அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தயாராக இருக்கின்றது. என்றும் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் ப.சந்திரகுமார் தெரிவித்தார்.

மேற்படி கட்சியின் அலுவலகத்தில் வைத்து இவ்வாறு தெரிவித்தாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக எமது செய்தியாளர் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில், கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் ப.சந்திரகுமார் கிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்களிடையே குழப்பங்களை ஏற்படுத்த முயலுகின்றார் என்றும் குறிப்பிட்டுள்ளார். அதற்கு சான்றாக ப. சந்திரகுமார் அங்கு ஆற்றிய உரையின் சில பகுதிகளையும் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றால் இப்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக அறிவித்துள்ள சாணக்கியன் சிறுபான்மையின முஸ்லிம் மக்களின் வாக்குகளினால் முதலமைச்சராவார் என்பது நடைபெறாது. கிழக்கு மாகாண சபைத்தேர்தல் நடைபெற்றால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி சிறுபான்மையின மக்களின் ஏகோபித்த வாக்குகளினால் கிழக்கு மாகாண சபையை கைப்பற்றி இழந்த அபிவிருத்தியை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி மேற்கொள்வதற்கு தயாராக இருக்கின்றது.தமிழர்களின் பூர்வீக பிரதேசம், பூர்வீக சொத்துக்களை,தமிழர்களின் அடிப்படை உரிமைகளை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஊடாக பாதுகாப்பதுதான் கிழக்கு தமிழர்களுக்கு நிரந்தர இருப்பாக இருக்கும்.

தமிழ்தேசிய தலைமைகள் கிழக்கு தமிழர்களின் தலைமைத்துவ இருப்பை பாதுகாக்காத காரணத்திலும், கிழக்கு பிரதேசத்தை சகோதர இனங்களுக்கு தாரைவார்த்து கொடுத்ததனாலும் கடந்த கிழக்கு மாகாண ஆட்சி தமிழர்களின் இருப்பு கேள்விக் குறியாகி இருந்தது.

இதனை ஆட்சிக்கு வந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி கிழக்கு தமிழர்களின் இருப்பை பாதுகாத்தது என தெரிவித்தார்.

தமிழர்களால் உருவாக்கப்பட்ட கிழக்கு மாகாண சபையின் ஆட்சி அதிகாரங்கள் தமிழர்களின் கைகளில் இருந்து பறிக்கப்பட்டு சிறுபான்மையின மக்களினதும்,அரசியல்வாதிகளின் கைகளுக்கு சென்று கொண்டிருக்கையில் ஆட்சிக்கு வந்த எமது பொதுஜன பெரமுன அரசாங்கம் அதிர்'டவசமாக ஆட்சி அதிகாரங்களை பற்றிக் கொண்டது. இதனால் கிழக்கு மாகாண தமிழ் மக்கள் காப்பாற்றப்பட்டார்கள்.

இவ்வாறு சந்திரகுமார் குறிப்பிட்டுள்ளமை மீண்டும் கிழக்கில் வடக்கு எதிர்ப்பு கோசங்கள் எழுவதற்கும் இஸ்லாமியர்களுக்கு எதிரான பிரச்சாரங்களை தமிழ் அரசியல்வாதிகளை வைத்தே இனவாத அரசு செய்யும் நிலை ஏற்பட்டு அது, வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழ்த் தேசியத்திற்கு எதிரான வடிவத்தை உருவாக்கும் என்றும் எமது செய்தியாளர் எச்சரித்துள்ளார்.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# மாவை. சேனாதிராஜாவிற்கு தலைவர் பதவி தேவைப்பட்டபோது விடுதலைப் புலிகளைப் பயன்படுத்தி பெற்றுக் கொண்டார்

### *- ஆனந்தசங்கரி தெரிவிப்பு*



2004ம் ஆண்டு மாவை. சேனாதிராஜாவிற்கு ஒரு கட்சியும் தலைவர் பதவியும் தேவைப்பட்டது. அந்த நேரத்தில் விடுதலைப் புலிகளைப் பயன்படுத்தி அதனைப் பெற்றுக் கொண்டார். விடுதலைப் புலிகளின் முழு ஒத்துழைப்புடன் தேர்தல் ஜனநாயக விதிமுறைகளை முற்று முழுதாக மீறி, ஜனநாயகத்தை குழி தோண்டி புதைத்தவர்கள் இன்று வெவ்வேறு கட்சிகளாக பிரிந்து ஒரு புதிய கட்டமைப்பை உருவாக்குவதற்கு மதத்தலைவர்களை பயன்படுத்துவதை நான் வன்மையாக கண்டிக்கின்றேன். இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

"தற்போது, தமிழ் தேசிய பரப்பில் இருந்து செயற்படுவதாக கூறிக்கொள்ளும் அரசியல் கட்சிகளும், மதத்தலைவர்களும், சிவில் அமைப்பின் பிரதிநிதிகளும் வவுனியாவில் ஒன்று கூடி கலந்துரையாடல் மேற்கொண்டதாக ஊடகங்களில் வந்த செய்தி எனக்கு வியப்பை ஏற்படுத்தியது. மதத்தலைவர்கள் எல்லோரும் ஒன்று கூடி இதற்கு ஆதரவு தெரிவித்தமை ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று" எனவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்து பேசிய அவர்,
2004ம் ஆண்டு மதத்தலைவர்கள் எல்லோரும் ஒன்று கூடி அன்று நடந்த ஜனநாயக விரோத செயலை கண்டிக்காதது ஏன்? அந்த அரசியல் கட்சியில் உள்ள எவருக்கும் ஜனநாயகத்தைப்பற்றி பேசும் அருகதை இல்லை. முழுக்க முழுக்க ஜனநாயகத்தை குழிதோண்டி புதைத்து விட்டு, 2004ம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்து செயற்பட்டவர்களின் அணியே அது. பதவியை கொடுத்த அதே விடுதலைப் புலிகளை கூண்டோடு அழித்ததாக கூறிய சரத்பொன்சேகாவை ஜனாதிபதித் தேர்தலில் ஆதரித்து நன்றியை தெரிவித்துக் கொண்டார்கள்.

யுத்தம் முடிந்த பின்னராவது இவ்வாறு ஒரு கட்டமைப்பை உருவாக்கி செயற்படவில்லை, 2010ம் ஆண்டு தேர்தலுக்கு பின்பு இவ்வாறு ஒரு கட்டமைப்பை உருவாக்கவில்லை அது ஏன்? எல்லாவற்றிற்கும் மேலாக 2015ம் ஆண்டு தேசிய அரசாங்கம் என்ற போர்வையில் நல்லிணக்க ஆட்சிக் காலத்தில், மதத்தலைவர்களை அழைத்து இவ்வாறானதொரு கட்டமைப்பை உருவாக்கியிருந்தால், வெகு இலகுவாக எமது மக்களின் பிரச்சினைகளை தீர்த்திருக்கலாம். ஏன் அவ்வாறு செய்யவில்லை? அந்த நேரத்தில் பதவி மோகம் கொண்ட ஒரு சிலருக்கு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பதவி சுகம் கிடைத்த படியால் ஒரு கட்டமைப்பு தேவை ஏற்படவில்லை.

2020ம் ஆண்டு மாவை. சேனாதிராஜா அவர்களின் பதவி பறிபோய்விட்டது. மீண்டும் முதலமைச்சர் பதவிக்கு வருவதற்கு ஒரு கட்டமைப்பு தேவைப்படுகிறது. அதனால் மதத்தலைவர்களின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. இந்த நபர்களுக்கு மதத்தலைவர்கள் ஒத்துழைப்பு கொடுத்தால் தமிழ் மக்களுக்கான அரசியல் வாதிகளின் வரலாற்றுத் தவறுகளில் இதுவும் ஒன்றாக அமைந்துவிடும். 2004ம் ஆண்டு தமிழரசுக் கட்சி 22 ஆசனங்களைப் பெற்ற மர்மம் இன்று வரை எவராலும் வெளிக்கொண்டுவரப்படவில்லை அது ஏன் எதற்காக என்பதையும் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்றார்.

LOYAL PEST CONTROL
Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.
Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice
RANJAN: (416) 464-2415

BASEMENT for RENT
2 bedroom basement with separate entrance மற்றும் எல்லா வித வசதிகளுடனும் வாடகைக்கு உண்டு.
குடும்பம் விரும்பதக்கது.
Call: (416) 821-2181

COMPUTER REPAIR
Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.
VARUNAN: (416) 894-6244

# மன்னார் மாவட்டத்தில் இன்னல்களுக்கு உள்ளான 56 குடும்பங்களுக்கு நஸ்டஈடு வழங்கிவைப்பு

மன்னார் மாவட்டத்தில் இன்னல்களுக்கு உள்ளான மக்களுக்கான நஸ்ட ஈடு இன்றைய தினம் புதன் கிழமை மாலை 4 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இழப்பிட்டுக்கான அலுவலகத்தின் ஏற்பாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தலைமையில் மன்னார் மாவட்டத்தில் இன்னல்களுக்கு உள்ளான 56 குடும்பங்களுக்கு முதல் கட்டமாக நஸ்ட ஈடு வழங்கி வைக்கப்பட்டது.

இரண்டு மில்லியன் 62 ஆயிரத்து 431 ரூபாய் இவ்வாறு 56 குடும்பங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. மேலும் பாதிப்புக்குள்ளான 3 இந்து ஆலயங்களுக்கும் நஸ்ட ஈடாக சுமார் 7 லட்சத்து 2500 ரூபாவும் உத்தியோக பூர்வமாக வழங்கப்பட்டது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கமைப்பு குழு தலைவருமான காதர் மஸ்தான் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரும் இணை தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி மேல் உள்ளிட்ட இழப்புக்கான அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள் உட்பட 56 பொது மக்கள் மற்றும் 3 இந்து ஆலயங்களில் தர்மகர்த்தாக்கள் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு காசோலையை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர் (3-03-2021)

# யாழ்/தாவளை சைவத்தமிழ் வித்தியாலயத்தின் மாணவர்களுக்கான கௌரவிப்பு





யா/தாவளை சைவத்தமிழ் வித்தியாலயத்தின் தரம் 5 புலமைப் பரிசு பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு 25.02.2021 வியாழக்கிழமை மேற்படி வித்தியாலய மண்டபத்தில் வகுப்பாசிரியர் திருமதி ச. புவீந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்த வைபவத்தில் லயன் ஆ. தவகுமாரன், லயன் மு. அருணகிரிநாதன், திருமதி. த. ஜயந்தினி, திருமதி மு. மகிழ்ராஜன், திரு. வே. முத்துலிங்கம் ஆகியோர் பரிசில்களை வழங்கி மாணவர்களை கௌரவித்து சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வுக்கு இங்கிலாந்து இரத்தினம் அறக்கட்டளை நிறுவனத்தினரும், கனடா சித்தன்கேணி ஒன்றியத்தினரும் நிதிப்பங்களிப்பு வழங்கி இருந்ததமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# மக்களின் கடும் எதிர்பை மீறி சடலங்களை புதைப்பதற்கான ஏற்பாடு

## இரணை தீவில் இரண்டு இடங்களில் மக்கள் போராட்டம்









"கொரோனா" தொற்றால் உயிர் இழந்தவர்களின் உடல்களை இரணை தீவு பகுதியில் புதைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றைய தினம் புதன்கிழமை (3) இரணை மாதா நகர் பகுதியில் மக்கள் மற்றும் பங்குத்தந்தையர்கள் இணைந்து போராட்டம் மேற்கொண்ட போதிலும் தொடர்சியாக இரணை தீவு பகுதியில் உடல்களை புதைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து இன்றைய தினம் வியாழக்கிழமை (4) இரணை தீவு பகுதியில் இரண்டு இடங்களின் மக்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இரணை தீவு பிரதான இறங்கு துறை மற்றும் உடல்களை அடக்கம் செய்வதற்கு குழிகள் தோண்டப்பட்ட இடம் ஆகியவற்றில் மக்கள் இன்றைய தினம் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்றைய தினம் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு மற்றும் மீன்பிடி நீர்வள அபிவிருத்தி அமைச்சர் உட்பட பல தரப்பட்ட தரப்பினர்க்கு இரணை தீவு மக்களால் நேரடியாக சென்று எதிர்ப்பு மகஜர் வழங்கி வைக்கப்பட்ட போதிலும் இதுவரை சடலங்களை அடக்கம் செய்வதற்கான மாற்று இடம் தெரிவு செய்யப்படவோ அல்லது இரனை தீவு பகுதியிலே மேற்கொள்ளப்பட்டு வரும் சடலங்களை அடக்கம் செய்யும் பணிகளோ நிறுத்தப்படாத நிலையில் மக்கள் இன்றைய தினம் மேற்படி போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

அதே நேரத்தில் இரணை தீவு பகுதிக்கு செல்லும் மக்களிடன் கடற்படையினர் அச்சுறுத்தும் விதமாக செயற்படுவதாகவும் தீவு பகுதியில் வசிக்கும் மக்கள் தீவுக்கு செல்வதற்கு முன் அடையாள அட்டையை கடற்படையினரிடம் ஒப்படைத்து செல்ல வேண்டும் என பணிக்கப்படுவதாகவும் பொது மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

- மன்னார் நிருபர் (04-03-2021)



# தமிழ் தேசிய புலிகள் கட்சியின் மாநில மாநாடு 9 ஆம் தேதி நடைபெறுமென்கிறார் மன்சூர் அலிகான்

தமிழ் தேசிய புலிகள் கட்சியின் முதல் மாநில மாநாடு வரும் மார்ச் 9 ஆம் தேதி சென்னையில் நடைபெற உள்ளது. இது குறித்து கட்சியின் நிறுவனர் தலைவர் மன்சூரலிகான் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

அன்புடையீர் வணக்கம், தமிழ் தேசிய புலிகள் கட்சியின் முதல் மாநில மாநாடு வரும் மார்ச் 9 ஆம் தேதி, சென்னை, 100 அடி சாலையில் உள்ள தியாகி அஞ்சலையம்மாள் மண்டபத்தில் நடைபெற உள்ளது. மாநாட்டின் போது, நூற்றுக்கணக்கான தமிழ் அமைப்புகள், இஸ்லாமிய தொண்டு தன்னார்வ அமைப்புகள், இயக்கத்தில் இணைய உள்ளனர். அனைத்து மாவட்டங்களுக்கும், செயலாளர்கள் அறிவிக்கப்பட உள்ளனர். அந்நேரம் தமிழ் தேசிய புலிகளின் கொள்கைகள் வெளியிடப்படும். தமிழர் வேலை வாய்ப்பை மீட்பது, தமிழர் நிலங்களை கார்ப்பரேட் தனியார் முதலாளிகளிடமிருந்து மீட்பது, தமிழர் மண்ணை நோக்கி வரும் பேராபத்தில் இருந்து மீட்க, ஒத்தக்கருத்துள்ள அனைத்து இயக்கங்களும் தமிழ் தேசிய புலிகள் கட்சியில் இணைய இருக்கின்றன. வரும் தேர்தலில் எந்தந்த தொகுதியில் போட்டியிடுவது, யாருடன் கூட்டணி என்றும் முடிவு செய்யப்படும்.

மக்கள் தொடர்பு: கோவிந்தராஜ்

# தினமலர் முன்னாள் ஆசிரியர் ஆர். கிருஷ்ணமூர்த்தி மறைவுக்கு சென்னை பத்திரிகையாளர் மன்றம் இரங்கல்



தினமலர் நாளிதழின் முன்னாள் ஆசிரியர் முனைவர் இரா. கிருஷ்ணமூர்த்தி மிகச்சிறந்த பத்திரிகையாளர் மற்றும் நாணயவியல் அறிஞர். சுமார் 40 ஆண்டுகளாக தினமலர் நாளிதழின் ஆசிரியராக சிறப்புடன் பணியாற்றியவர்.

சங்க காலத்தில் பழந்தமிழ் மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களை கண்டுபிடிப்பதில் முக்கிய காரணமாக இருந்த திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நாளிதழில் தமிழ் எழுத்து சீர்திருத்தத்தை முதன் முதலில் நடைமுறைப்படுத்தியவர். மேலும் கணினியில் தமிழ் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் எழுத்துருக்களை உருவாக்கியவர் என்ற பெருமையையும் கொண்டவர்.

தமிழ் செம்மொழி என்ற தகுதியை பெற, இவரது நாணயவியல் கண்டுபிடிப்புகளை தமிழக அரசு முக்கிய வரலாற்று ஆதாரமாக சமர்ப்பித்தது குறிப்பிடத்தக்கது. தமிழ் அச்சு மொழி வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பு செய்தவர், கணினிக்கு ஏற்றவகையில், தமிழ் எழுத்துக்களை நவீனப்படுத்தி, தெளிவு மிக்க தமிழ் எழுத்துருக்களை உருவாக்கிய மூத்த பத்திரிகையாளர் முனைவர் இரா. கிருஷ்ணமூர்த்தி 88 வயதில் மூப்பு மற்றும் உடல்நலக்குறைவு காரணமாக இயற்கை எய்தினார்.

பெரியவர் முனைவர் இரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் மறைவு தமிழ் இதழியலுக்கு மாபெரும் இழப்பு. அன்னாரின் மறைவுக்கு சென்னை பத்திரிகையாளர் மன்றம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. என மன்றத்தின் இணைச் செயலாளர் பாரதிதமிழன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

# ஒன்ராறியோ அரசாங்கம் 150 மில்லியன் டொலர்களை மாகாணத்தின் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மேலதிக வழங்குகின்றது



கோவிட்-19 தொற்றுநோயின் நிதிச் செலவுகளுக்கான தீர்வுக்கென நகராட்சி போக்குவரத்துத் துறைகளுக்கு உதவ ஒன்ராறியோ அரசாங்கம் 150 மில்லியன் டொலர்களை மேலதிக நிதியத்தினூடாக வழங்குகின்றது. இந்த நிதி, ஒன்ராறியோ அரசும் மத்திய அரசும் முன்னர் பாதுகாப்பான மீள்தொடக்க ஒப்பந்தத்தின் மூலம் வாக்களித்த 2 பில்லியனை விடமேலும் கூடுதலான நிதியாக உள்ளதுடன், நகராட்சிகள் முக்கியமான போக்குவரத்து சேவைகளை தொடர்ந்தும் வழங்க உதவியாக அமையும்.

மாகாண நிதியில் மேலதிகமான 150 மில்லியன் டொலர்களுடன் பார்க்கும்போது எதிர்வரும் டிசம்பர் 31, 2021 வரை நகராட்சிகளுக்கு கிடைக்கும் தொகை மொத்தம் 650 மில்லியன் டொலர்கள். அத்துடன், இந்த நிதியம் தேவையின் அடிப்படையில் டிசம்பர் 2022 வரையும் நீட்டிப்புச் செய்யப்படலாம்.

பாதுகாப்பான மீள்தொடக்க ஒப்பந்த நிதியுதவியின் ஒரு பகுதியாக, கோவிட்-19 நோய்த்தொற்றின்போதும் அதற்குப் பின்பும் உள்ளக போக்குவரத்தானது பாதுகாப்புத் தன்மை, நிலைத் தன்மை, குறைவான கட்டணம், ஒருங்கிணைந்த தன்மை போன்றவற்றை உள்ளடக்கியதாக உள்ளதா என்பதை உறுதி செய்வதை ஆராய்வதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் மாகாண அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற வேண்டும். என்றும் கேட்கப்பட்டுள்ளது.

# ஒன்றாரியாவில் மாணவர்களுக்கானள 2021 கோடை கால அரச வேலைவாய்ப்புகள் பற்றிய அறிவித்தல்



"2021ஆம் ஆண்டு கோடைகாலத்துக்கான மாணவர்கள் வேலைவாய்ப்புத் திட்ட ஆரம்பத்தினை அறிவிப்பதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்."

இவ்வாறு தெரிவித்துள்ள ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதிக்கான மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம் அவர்கள் மாகாண அரசு வழங்கவுள்ள கோடை கால விடுமுறையின் போது பெற்றுக் கொள்ளக் கூடிய வேலை வாய்ப்புகள் தொடர்பாக மேலும், பின்வருமாறு கூறுகின்றார்.

"நீங்கள் கோடைகாலத்துக்கான வேலையைத் தேடும் மாணவராகவோ அல்லது அண்மையில் படிப்பை நிறைவுசெய்து வெளியேறிய பட்டதாரியாகவோ இருந்தால், ஒன்ராறியோவில் உள்ள ஆயிரக்கணக்கான வேலைகளுக்கு நாம் உங்களைப் பணியமர்த்துவதற்கு தயாராக உள்ளோம். அறிவியல், தொழில்நுட்பம், வணிகம், சுற்றுச்சூழல் போன்ற 70 இற்கும் மேற்பட்ட பல்வேறு துறைகளில் நாம் வேலைவாய்ப்புகளை வழங்குகிறோம்.

ஒன்ராறியோ முழுவதுமுள்ள 5,000 வரையான மாணவர்கள் ஒன்ராறியோ பொது சேவையுடன் கோடைகால வேலைவாய்ப்புகளைக் கண்டறிய மேற்படி கோடைகாலத்துக்கான வேலைவாய்ப்புத் திட்டம் உதவியாக அமையும்.

இவற்றுக்கான விண்ணப்பங்கள் பின்வரும் இணையத்தளமூடாக இப்போது ஏற்கப்படுகின்றன: Ontario.ca/SummerStudents.

**இங்ஙனம்:**
**விஜய் தணிகாசலம், மாகாண சட்டமன்ற உறுப்பினர்.**
**ஸ்காபரோ - றூஜ் பார்க்.**

# கனடிய சிறைச்சாலைகளில் அதிகளவு பழங்குடி சார்ந்த குற்றவாளிகளும் கறுப்பினத்தைச் சேர்ந்த குற்றவாளிகளுமே தண்டனையை அனுபவிக்கின்றார்கள்



கனடிய சிறைச்சாலைகளில் அதிகளவு பழங்குடி சார்ந்த குற்றவாளிகளும் கறுப்பினத்தைச் சேர்ந்த குற்றவாளிகளுமே தண்டனையை அனுபவிக்கின்றார்கள் என்ற உண்மையை அண்மையில் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கையின் மூலம் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளதாகவும் நீதித் துறை சார்ந்த சில நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன

இதில் ஆச்சரியம் என்னவென்றால், கனேடிய மக்கள்தொகையில் ஐந்து சதவீதத்தை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்துகின்ற , பழங்குடியினத்தைச் சார்ந்த வயதில் அதிகரித்தவர்கள் கனடாவின் மொத்த சிறைக் கைதிகள் தொகையில் 30 சதவீதத்தினராக உள்ளனர். அதே நேரத்தில் கனடிய மக்கள் தொகையில் வெறம் மூன்று வீதத்தை மட்டுமே கொண்டுள்ள கறுப்பினத்தைச் சார்நத வயதில் அதிகரித்தவர்கள் கனடிய சிறைச்சாலைகளில் உள்ள குற்றவாளிகளில் ஏழு சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் என்றும் கணிப்பிடப்டுகின்றது.

இந்த முரண்பாட்டையும் இதில் உள்ள சிக்கல்களையும் அத்துடன் உண்மைத் தன்மையை கண்டு கொள்ளவும் கொண்டு வரப்பட்டுள்ள கனடிய மத்திய அரசின் குற்றவியல் நீதி சீர்திருத்த மசோதா பொதுவாக நீதி அமைப்பில் பழங்குடி மற்றும் கறுப்பின மக்களை அதிகமாக பாதிக்கப்படுவதை தடுக்க என்ன செய்ய வேண்டும் என்று ஆராய்ந்து சில முடிவுகளை எடுக்கும் வகையில் அமைந்துள்ளது. இதற்காகவே முன்வைக்கப்பட்ட மசோதா சி -22 வில் உள்ள குறைபாடுகளையும் இந்த விசாரணைக் குழு ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்துள்ளது

இந்த மசோதா அனைத்து போதைப்பொருள் குற்றங்களுக்கும் சில துப்பாக்கி ஏந்திய குற்றங்களுக்கும் கட்டாய குறைந்தபட்ச அபராதங்களை ரத்து செய்யும் வகையிலுமம் குற்றவாளிகளுக்கு, வீட்டுக் காவல் போன்ற நிபந்தனை விதிக்கப்பட்ட தண்டனைகள வழங்கும் வகையிலும், மேலும் போதைப்பொருள் வைத்திருக்கும் வழக்குகளை நீதி அமைப்பிலிருந்து விலக்கி ஆ வேறு நீதி மையங்களில் விசாரித்து தண்டனை வழங்குவகையில் காவல்துறையினரையும் வழக்குரைஞர்களையும் பயன்படுத்தி தீர்வைக் காணும் வகையில் மாற்றங்களை சிபார்சு செய்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது

பழங்குடி மற்றும் கறுப்பின மக்களை சிறையில் அடைப்பதை உண்மையிலேயே எதிர்த்துப் போராடுவதற்கு, அனைத்து கட்டாய குறைந்தபட்ச அபராதங்களும் அகற்றப்பட வேண்டும் அல்லது அவற்றின் பயன்பாடு கணிசமாகக் குறைக்கப்பட வேண்டும் என்றும் நிபுணர்கள் குழு பரிந்துரை செய்துள்ளது.

ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளபட்ட சட்ட விதிகளுக்கு அமைய தற்போதைய மசோதா "நம்பமுடியாத அளவிற்கு பயமுறுத்தும் அணுகுமுறையாக உள்ளது நீதித்துறை சார்ந்த ஒரு பிரமுகர் தெரிவித்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது இந்நிலையில் நியமிக்கப்படட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் 2015 இறுதி அறிக்கையிலிருந்து நடவடிக்கைக்கான அழைப்புகளில் ஒன்று - பழங்குடி மக்கள் மீது சமூகம் சார்ந்த பாடசாலைகள் மூலமான பலன்கள் பற்றி ஆய்வு செய்தது -

இதேவேளை "இந்த குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்த தனது அரசாங்கம் உறுதிபூண்டிருப்பதாக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஏற்கெவே கூறியிருந்தார்.

"இன்னும் கட்டாய குறைந்தபட்ச தண்டனைகளை அகற்றுவதற்கான ஒரு நடவடிக்கையை நாங்கள் நிச்சயமாக ஆதரிப்போம், ஆனால் அந்த திசையில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்ற நடவடிக்கையை எடுத்ததற்காக நாம் அரசாங்கத்தை பாராட்டுகிறோம்" என்று கடந்த ஆண்டு லமேட்டிக்கு எழுதிய குற்றவியல் வழக்கறிஞர்கள் சங்கத்தின் துணைத் தலைவர் டேனியல் பிரவுன் கூறினார். எனவே மிக விரைவில் பழங்குடி மக்கள் மற்றும் கறுப்பின மக்கள் சார்ந்த குற்றச் செயல்களுக்கு வழங்கப்படும் தண்டனைகளில் மாற்றங்கள் வரும் என எதிர்பார்க்கப்படுவதாக பேசப்படுகின்றது.

# ஓன்றாரியோ பாடசாலைகளில் அதிகளவு கோவிட் சோதனைகளைச் செய்வதற்கான வளங்கள் இருந்தும் மிகக் குறைவாகவே அவை பயன்படுத்தப்படுகின்றனவாம்

ஓன்றாரியோ பாடசாலைகளில் அதிகளவு கோவிட் சோதனைகளைச் செய்வதற்கான வளங்கள் இருந்தும் மிகக் குறைவான எண்ணிக்கையே செய்யப்படுகின்றன தற்போது உள்ளது, ஆனால் அந்த திறனின் பெரும்பகுதி பயன்படுத்தப்படாமல் உள்ளது.

ஒன்ராறியோ அரசின் நிர்வாகத்தில் இயங்கிவரும் பாடசாலைகளில் பயிலும் மாணவர்கள் மற்றும் கல்வியாளர்களிடையே நிச்சயத் தன்மையற்ற கொரோனா வைரஸ் சோதனைக்கான திட்டம் தொடர்பாக ஒன்ராறியோ கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெஸ்சே நேற்று முன்தினம் புதன்கிழமை குயின்ஸ் பார்க் மாகாணப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளிடமிருந்து பல கேள்விகளை எதிர்கொண்டார்.

ஒரு வாரத்தில் பள்ளிகளில் சுமார் 50,000 சோதனைகளைச் செய்வதற்கான திறன் தற்போது உள்ளது, ஆனால் அந்த திறனின் பெரும்பகுதி பயன்படுத்தப்படாமல் உள்ளது.

ஒன்ராறியோ என்டிபி கல்வித்துறை சார்ந்த விமர்சகர் மரிட் ஸ்டைல்ஸ் கேள்விக் காலத்தில் கூறினார்: "பள்ளிகளில் அறிகுறியற்ற சோதனையின் அடிப்படையில் அவை மிகவும் மெதுவாக உள்ளன என்பதில் உண்மைத் தன்மை இருக்கிறது."

இந்நிலையில் ஸ்கார்பாரோ நகரில் உள்ள , டான்வுட் பார்க் பாடசாலையில் கடந்த திங்கட்கிழமையன்று, ஆறு பாடசாலை மாணவர்கள் கொரோனா வைரஸுக்கு சாதகமாக சோதனை செய்ததைத் தொடர்ந்து பாடசாலையை மூட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அந்த மாணவர்களில் நான்கு பேர் கவலைக்குரியதான பெறுபேற்றை கண்டார்கள் காணப்பட்டன,

இதற்கு பதிலளித்த கல்வி அமைச்சர் □சவால்கள் நிறைந்த சூழலில் உள்ள அனைத்து மாணவர்களையும் கல்வியாளர்களையும் பாதுகாக்க வே அரசாங்கம் தன்னால் முடிந்ததைச் செய்து வருவதாகவும், ஆனால் தனிநபர்கள் மீது சோதனைகளை கட்டாயப்படுத்த முடியாது என்றும் கூறினார்.



மேலும் படிக்க: வரும் வாரங்களில் பாடசாலைகளில் , மற்றும் சில பணியிடங்களில் விரைவான சோதனையை அதிகரிக்க ஒன்ராறியோ அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

"கேள்வி நேரத்தில் அரசாங்கத்தின் பதில் அடிப்படையில் பெற்றோரையும் குடும்பத்தினரையும் அரசாங்கம் குற்றம் சாட்டுவதாக நான் கண்டு அதிர்ச்சியடைந்தேன், பெற்றோர்களும் குடும்பங்களும் தான் இங்கே பாதிக்கப்படுகின்றார்கள் என்று என்டிபி தலைவர் ஆண்ட்ரியா ஹார்வத் பிற்பகுதியில் செய்தியாளர்களிடம் கூறினார்.

ஒன்ராறியோவில் 18 வயதிற்குட்பட்ட இளைஞர்களுக்காக பிப்ரவரி 22 வாரத்தில் 17,835 சோதனைகள் நிறைவடைந்ததாக கல்வி அமைச்சின் அதிகாரிகள் குறிப்பிட்ட போதிலும், அந்த எண்ணிக்கை சமூகத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் அடிப்படையில் அமைந்துள்ளது என்றும் பாடசாலைகளுக்குரிய சோதனையின் ஒரு பகுதியாக இல்லை. என்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வாதிட்டார்கள்.

# மியன்மார் மக்கள் மீண்டும் இராணுவ சர்வாதிகார ஆட்சியின் பிடிக்குள் சிக்குண்டுள்ளார்கள்!






- கனடா நக்கீரன்

கடந்த 10 ஆண்டுகளில் 40 க்கும் மேற்பட்ட நாடுகளின் இராணுவம் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. இதில் இராணுவப் புரட்சி செய்ய முனைந்து தோல்வியடைந்த நாடுகளும் உண்டு.

நைசீரியாவில் 18 பெப்ரவரி 2010 இல் புரட்சி மூலம் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. அதற்கு முன்னரும் நைசீரியாவில் இராணுவம் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றி ஆட்சி செய்து வந்திருக்கிறது. முதல் இராணுவப் புரட்சி 04 சனவரி 1966 இல் இடம்பெற்றது. இதன் பின்னர் 1993 வரை ஏழுமுறை இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றி ஆண்டுவந்தது. 1999 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மக்களாட்சி ஆட்சி நடைபெற்று வருகிறது.

இப்போது 01 பெப்ரவரி, 2021 இல் மியன்மாரில் புரட்சி மூலம் இராணுவம் ஆட்சியை கைப்பற்றியுள்ளது. இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது இது முதல் தடவையல்ல.1962 இல் முதல் இராணுவப் புரட்சி நடந்தேறியது. அதன் பின்னர் 26 ஆண்டுகள் சோசலீச நிகழ்ச்சி நிரல் கட்சி என்ற பெயரில் இராணுவ சர்வாதிகார ஆட்சி நடைபெற்று வந்தது. 2011 இல் இராணுவ ஆட்சி உத்தியோகபூர்வமாகக் கலைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நடந்து பொதுத் தேர்தலில் மக்களாட்சி அரசாங்கம் நிறுவப்பட்டது.

மியன்மார் இராணுவம் அரசியலமைப்பு உருவாக்கத்தின் போது தேசிய விவகாரங்களில் தனது மேலாதிக்கத்தினை உறுதி செய்யும் வகையில் சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. அரசியலமைப்பு விதிகளின் படி நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் 25 விழுக்காடு இடங்கள் இராணுவத்திற்கு ஒதுக்கப்பட வேண்டும் எனவும் அதனைவிட மேலதிகமாக 25 விழுக்காடு இடங்களைக் கைப்பற்றுவதற்கு தேர்தலில் போட்டியிடுவதற்கு ஓர் அரசியல் கட்சி மூலம் முனையலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



இராணுவப் புரட்சியை அடுத்து ஆங் சான் சூ கி **(Aung San Suu Kyi )** தலைமையில் ஆண்டு கொண்டிருந்த சனநாயகத்துக்கான தேசிய லீக்கின் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சனாதிபதி வின் மைண்ட் **(Win Myint)** மற்றும் மாநில ஆலோசகர் ஆங் சான் சூகி ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த னொவெம்பர் 08 இல் 2020 நடைபெற்ற தேர்தலில் நாடாளுதமன்றத்தின் கீழ்ச் சபையிலும் மேல் சபையிலும் சூகி தலைமை தாங்கிய சனநாயகத்துக்கான தேசிய லீக் 476 இடங்களில் 396 இடங்களை கைப்பற்றி மகத்தான வெற்றி ஈட்டியது. 2020 தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் மியான்மர் நாடாளுமன்றம் சத்தியம் செய்யவிருந்ததற்கு முந்தைய நாள் ஆட்சிக் கவிழ்ப்பு நிகழ்ந்தது,

அமைச்சர்கள், துணை அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சனாதிபதி வின் மைண்ட் மற்றும் ஆங் சான் சூகி ஆகியோர் இரண்டு வாரங்களுக்குத் தடுத்து வைக்கப்பட்டனர்.

இராணுவம் நொவெம்பர் 2020 இல் நடந்த பொதுத் தேர்தலின் முடிவுகள் செல்லாது என்று அறிவித்ததுடன், அவசரகாலத்தின் முடிவில் ஒரு புதிய தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடு செய்யப்படும் எனவும் கூறியது.

பெப்ரவரி 3, 2021 அன்று, இயற்கைப் பேரழிவு மேலாண்மை சட்டத்தின் 25 வது பிரிவின் கீழ் பரப்புரை வழிகாட்டுதல்கள் மற்றும் **COVID**-19 தொற்று கட்டுப்பாடுகளை மீறியதற்காக வின் மைன்ட் மீது குற்றம் சாட்டப்பட்டது. அவசரகால **COVID**-19 சட்டங்களை மீறியதற்காகவும், வானொலி மற்றும் தகவல்தொடர்பு சாதனங்களை சட்டவிரோதமாக இறக்குமதி செய்ததற்காகவும், குறிப்பாக அவரது பாதுகாப்புக் குழுவிலிருந்து ஆறு **ICOM** சாதனங்கள் மற்றும் ஒரு வாக்கி-டாக்கி, மியன்மாரில் தடைசெய்யப்பட்டவை மற்றும் இராணுவம் தொடர்பான அனுமதி தேவை என்பதற்காகவும் ஆங் சான் சூகி மீது குற்றம் சாட்டப்பட்டது. பிப்ரவரி 16 அன்று, தேசியப் பேரிடர் சட்டத்தை மீறியதற்காக சூகி மீது கூடுதல் குற்றவியல் குற்றச்சாட்டு போடப்பட்டது.

பர்மா என்று முன்னர் அழைக்கப்பட்ட மியான்மர் 1948 இல் பிரிட்டனில் இருந்து சுதந்திரம் பெற்றது. அன்றிலிருந்து அரசியல் உறுதியின்மைக்கு அது ஆளாகிவருகிறது. 1958 மற்றும் 1960 க்கு இடையில், நாட்டின் சனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதம மந்திரி யு நுவின் வேண்டுகோளுக்கு இணங்க இராணுவம் ஒரு தற்காலிக காப்பந்து அரசாங்கத்தை அமைத்தது. பர்மிய பொதுத் தேர்தலை நடத்திய பின்னர் இராணுவம் தானாக முன்வந்து மக்களாட்சி அரசை மீளமைத்தது. ஆனால் இரண்டு ஆண்டுகள் நிறைவடையு முன்னர் 1962 இல் இராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றியது, இதனால் நே வின் (நே றுவை) தலைமையில் 26 ஆண்டுகால இராணுவ ஆட்சி நீடித்தது.

1988 ஆம் ஆண்டில் நாட்டில் நாடு தழுவிய போராட்டங்கள் வெடித்தன. ‘8888 எழுச்சி’ என அழைக்கப்பட்ட இந்தப் போராட்டம் உள்நாட்டு அமைதியின்மை பொருளாதார முறைகேடுகளால் தூண்டப்பட்டது, இதனால் நே வின் பதவி விலகினார். 01 செப்டம்பர் 1988 இல், இராணுவத்தின் உயர்மட்டத் தலைவர்கள் மாநில சட்டம் ஒழுங்கு மறுசீரமைப்பு சபையை **(SLORC)** உருவாக்கினர். உருவாக்கிய பின்னர் இராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றியது. ஆங் சான் சூகி நாட்டின் நவீன நிறுவனர் என அழைக்கப்படும் ஆங் சானின் மகள் ஆவர். இந்தக் காலகட்டத்தில் ஆங் சான் சூகி குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய சனநாயக சார்பு ஆர்வலராக இருந்தார். 1990 ஆம் ஆண்டில் இராணுவத்துக்கு மக்களது ஆதரவு இருக்கிறது என்ற அனுமானத்தின் கீழ் இராணுவம் சுதந்திரமான தேர்தல் வைப்பதை அனுமதித்தது. இறுதியில், தேர்தல் முடிவுகள் ஆங் சான் சூ கி கட்சியின் சனநாயகத்திற்கான தேசிய லீக்கிற்கு மகத்தான வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது. இருப்பினும், இராணுவம் அதிகாரத்தைக் கைவிட மறுத்து. அவரை வீட்டுக் காவலில் வைத்தது.

2020 இல் நடந்த தேர்தலில் வாக்கு மோசடி நிகழ்ந்தது என்று கூறி இராணுவம் முடிவுகளை ஏற்க மறுத்தது. ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி இடம் பெறுப் போவதாக பல நாட்கள் வதந்தி உலாவியது. இதனைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற மேற்கத்திய நாடுகள் கவலை தெரிவித்து அறிக்கைவிட்டன.

மனித உரிமைகள் பாதுகாவலர்கள், ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சாதாரண மக்களைக் கைது செய்வதற்கும் தடுத்து நிறுத்துவதற்கும், வழக்குத் தொடுப்பதற்கும் மியன்மார் இராணுவம் தொடர்ந்து பரந்த மற்றும் தெளிவற்ற சொற்களைப் பயன்படுத்துகின்றது.

இந்த இடத்தில் மியன்மார் பற்றிய முக்கிய தரவுகளைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

பெயர் - மியன்மார்


(தொடர்ச்சி 7ம் பக்கம்)



# கனடா ‘உதயன்’ பத்திரிகை நடத்திய வெள்ளி விழா ஞாபகார்த்த மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி இரண்டு நாட்கள் சிறப்பாக நடைபெற்றது



சினேகா பாலமுருகன்



நிவேதிகா கோகுலன்



கண்ணதாசன் லம்போதரன்



சுபநிதி சுப்பிரமணி



தர்ஷன் அகிலன்



அப்ரின் பானு



அய்ஸ்னவி துர்க்காதரன்



பாலு ஆனந்த்



பூபதி. எம

கனடா உதயன் பத்திரிகையின் வெள்ளி விழா ஆண்டாகத் திகழும் 2021ம் ஆண்டின் இறுதி வரையிலும் மாதாந்தம் ஒரு நிகழ்வையென்றாலும் இணையவழி ஊடாக நடத்த வேண்டும் என்ற தீர்மானத்தின் படி ஏற்பாடு செய்யப்பெற்ற உலக-ளாவிய மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி 27-02-2021 சனிக்கிழமையும் 28-02-2021 ஞாயிற்றுக்கிழமையும் கனடிய நேரம் காலை 9:00 மணிக்கு ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்றது.

போட்டிக்குரிய அனைத்து ஏற்பாடுகளையும், உதயன் பத்திரிகையின் நி-றுவனரும் பிரதம ஆசிரியருமான லோகன் லோகேந்திரலிங்கம் அவர்கள் தனது குழுவினரோடு இணைந்து செய்திருந்தார்.

இதுவரை ‘நான் விரும்பும் அரசியல் தலைவர்’ என்னும் தலைப்பில் தமிழ் பேசும் மக்கள் மத்தியில்? குறிப்பாக மாணவர்கள் மத்தியில் இவ்வாறான பேச்சுப் போட்டியொன்றை எவரும் நடத்தவில்லை என்ற பாராட்டுக்கள் குவிந்து வரும் இந்த வேளையில் இந்த போட்டிக்கு முதன்மை அனுசரணை வழங்கி வர்த்தகப் பிரமுகர் நல்லதம்பி அவர்களுக்கும் இணை அனுசரணைகள் வழங்கிய கனடா தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் திரு சாந்தா பஞ்சலிங்கம், கெம்சோனிக்ஸ் பாதுகாப்பு கெமரா நிறுவனத்தின் அதிபர் திரு ரஜீவ் செபராசா, மொன்றியால் மாநகர் புருட்ஸ் ஹெபி நிறுவன அதிபர் திரு சண் ஸ்ரீ, வீடு விற்பனை முகவர் திரு கைலன் தில்லைநாதன் மற்றும் அவரது சகோதரர் ரகு தில்லைநாதன், வீடு விற்பனை முகவர் திரு பாஸ்கரன் சின்னத்துரை ஆகியோருக்கு கனடா உதயன் நிறுவனம் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றது.

மேற்படி பேச்சுப் போட்டிக்கான நடுவர்களாக பின்வரும் பெரியோர்கள் பணியாற்றினார்கள்: பேராசிரியர் சங்கரநாராயணன் (தமிழ்நாடு), வழக்கறிஞர் ராமகிருஸ்ணன் (தமிழ்நாடு), குயின்றஸ் துரைசிங்கம் (கனடா), நிமால் விநாயகமூர்த்தி (கனடா), திரு வீணைமைந்தன் சண்முகராஜா (கனடா) ஆகி-யோர்.

போட்டியில் பங்கு பற்றுவதற்காக விண்ணப்பித்த 50க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் இலங்கை, இந்தியா, மலேசியா, சுவிற்சலாந்து, கனடா ஆகிய நாடுகளிலிருந்து இணையவழி ஊடாக தங்கள் உரைகளை வழங்கினார்கள். பேச்சுப் போட்டிக்கு கொடுக்கப்பட்டிருந்த தலைப்பு ‘நான் விரும்பும் அரசியல் தலைவர்’ என்பதாகும்.

‘கனடா உதயன்’ நடத்தும் வெள்ளிவிழா பேச்சுப் போட்டிக்கு விண்ணப்பித்து கடந்த 27ம் 28ம் திகதிகளில் இணையவழி ஊடாக பங்குபற்றிய அனைத்து மாணவ மாணவியர்கள் மற்றும் போட்டியில் வெற்றி பெற்று பணப்பரிசுகளைத் தட்டிக்கொண்ட அனைத்து தம்பி தங்கையர்க்கும் நன்றி.

மேற்படி போட்டிக்காக கனடா உதயன் பத்திரிகை அறிவித்த பரிசுத் தொகையிலும் மேலாக, பேச்சுப் போட்டியின் நடுவர்களில் ஒருவரும், கணக்காளருமான திரு நிமால் விநாயகமூர்த்தி அன்பளிப்பாக வழங்கிய தலா 50 கனடிய டாலர்கள் போட்டியில் பங்கு பற்றிய அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் வங்கிக் கணக்குகள் மூலமாக அனுப்பபட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் 28ம் திகதி போட்டி நிறைவுற்ற பின்னர் நடுவர்களின் ஆலோசனையின் பின்னர் முடிவுகள் அறிவிக்கப்பெற்றன. முதல் மூன்று பணப் பரிசுக-ளோடு ஏழு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்பெற்றன. இங்கே காணப்படும் படங்களில் உலகளாவிய பேச்சுப் போட்டியில் முதற்பரிசு பெற்ற தமிழ்நாட்டின் கோயமுத்தூர் நகரைச் சேர்ந்த செல்வி சினே-கா பாலமுருகன், இரண்டாம் பரிசைப் பெற்ற கனடா - ரொரன்ரோ நகரைச் சேர்ந்த செல்வி நிவேதிகா கோகுலன் மற்றும் மூன்றாம் பரிசைப் பெற்ற வட - இலங்கை கிளிநொச்சி நகரைச் சேர்ந்த கண்ணதாசன் லம்போதரன் ஆகியோர் காணப்படுகின்றனர். அத்துடன் 7 ஆறுதல் பர-சுகளைத் தட்டிக் கொண்டவர்களின் பெயர்கள் பின்வருமாறு:

சுபநிதி சுப்பிரமணி (தமிழ்நாடு), தர்ஷன் அகிலன் (மலேசியா), பூபதி. எம் (தமிழ்நாடு), பாலு ஆனந்த் (தமிழ்நாடு), நாராயணகோவிந்தன் முத்துப் பழனியப்பன் (தமிழ்நாடு), அய்ஸ்னவி துர்க்காதரன் (கனடா), அப்ரின் பானு (தமிழ்நாடு) பரிசு பெற்ற அனைவருக்கும் கனடா உதயன் நிறுவனம் மற்றும் போட்டி நடுவர்கள் ஆகியோரின் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

*(6ம் பக்கம் தொடர்ச்சி)*

பரப்பளவு - 653, 080 ச.கிமீ
கரையோரம் - 1,930 கிமீ
மக்கள் தொகை - 57,069,099 (யூலை 2020 மதிப்பீடு)
எல்லைகள் - பங்காளதேசம் 271 கிமீ, சீனா - 2129, இந்தியா 1468 கிமீ, லாவோஸ்-238 கிமீ, தாய்லாந்து - 2416 கிமீ
இனக்குழுக்கள் - பர்மன் (பாமர்) 68மூ, சாண் 9மூ, கரன் 7மூ
மொழிகள் - பர்மீஸ் (உத்தியோக மொழி)
மதங்கள் - பவுத்தம் 87.9மூ, கிறிஸ்தவர் 6.2 7மூ, முஸ்லிம் 4.37மூ, இந்து 0.57மூ
இயற்கை வளங்கள் - பெட்ரோலியம், மரம், தகரம், ஆண்டிமனி, துத்தநாகம், தாமிரம், டங்ஸ்டன், ஈயம், நிலக்கரி, பளிங்கு, சுண்ணாம்பு, விலைமதிப்பற்ற கற்கள், இயற்கை எரிவாயு, நீர் சக்தி, விளைநிலங்கள்
தனியொருவரின் மொத்த வருமானம் - அ.டொலர் 1,408 (2019)

மியன்மார் என்றால் ரோஹிங்யா முஸ்லிம் ஏதிலிகள் நினைவுக்கு வருவார்கள். அவர்களுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் பல ஒற்றுமை உண்டு. இருசாரருமே பவுத்த தீவிரவாதத்துக்கு இலக்காகி வருபவர்கள்.

15 ஆம் நூற்றாண்டுகளில் இருந்தே மியன்மாரில் ரோஹிங்யா முஸ்லிம்கள் வாழ்ந்து வந்துள்ளார்கள். 2017 ஆம் ஆண்டு முதல் ரோஹிங்யா முஸ்லிம்கள் மீது மியன்மார் இராணுவம் மேற்கொண்ட தாக்குதல் காரணமா சமார் 700,000 இலட்சம் மக்கள் அண்டை நாடான பங்காளதேசத்துக்கு இடம்பெயர்ந்தார்கள்.

2012 தொடக்கம் பவத்தர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் நடைபெறும் தாக்குதல்காரணமாக 1,20,000 ரோஹிங்யா முஸ்லிம்கள் பங்காள தேசம் உட்பட அயல்நாடுகளில் அகதி முகாம்களில் அடிப்படை வசதிகள் இன்றி அவர்கள் தவித்துவருகிறார்கள்.

ரோஹிங்யா முஸ்லிம்கள் பவுத்தத்தை மதிக்காதவர்கள், அவர்கள் இம்மண்ணில் வாழத் தகுதியற்றவர்கள் என்று அறைகூவல் விடுப்பதன் மூலம் பவுத்த பேரினவாதம் அவர்களைத் தரம் பிரித்து முற்றாக அழித்தொழிக்கும் செயற்திட்டத்தை 969 பவுத்த தீவிரவாத இயக்கம் நடத்தி வருகிறது. அதன் தலைவர்
அசின் விராது தேரர் என்பவர் மியன்மாரில் பவுத்த மதத்தை பாதுகாக்க வேண்டுமென்ற கூச்சலோடு செயற்பட்டு வருகிறார்.

மியன்மாரில் இராணுவ ஆட்சியைத் தோல்வியடையச் செய்ய ஐ.நா சபையால் எவற்றையெல்லாம் செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் செய்வோம் என ஐ.நா சபையின் பொதுச் செயலாளர் அன்டொனியோ குட்ரெஸ் தெரிவித்துள்ளார்.

“மியன்மாரில் அரசியலமைப்புச் சட்டம் மீண்டும் நிறுவப்பட வேண்டும். சர்வதேச சமூகத்தில் இருக்கும் முக்கிய நாடுகள் மூலம் மியன்மார் மீது கடுமையான அழுத்தம் கொடுக்கப்படும். மியன்மார் மக்களின் மனதையும், தேர்தல் முடிவுகளையும் மறுப்பது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. நாட்டை இப்படி நடத்தக் கூடாது. இப்படி முன்னெடுத்துச் செல்லக் கூடாது என்பதை மியன்மார் இராணுவத்துக்குப் புரிய வைக்க முடியும் என நம்புகிறேன்” எனக் குட்ரெஸ் கூறினார்.

ஐ.நா பாதுகாப்புச் சபையில் வீட்டோ பலம் கொண்ட சீனா, மியன்மார் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பைக் கண்டிக்க மறுத்துவிட்டது. இதனால் பாதுகாப்புச் சபையில் ஒரு பொது நிலைப்பாட்டை எட்ட முடியாதுள்ளது. சீனா பல சகாப்தங்களாக மியன்மார் இராணுவ ஆட்சியாளரோடு நெருக்கமான உறவைப் பேணி வந்திருக்கிறது

கடந்த பல ஆண்டுகளாக மியன்மாரை, சீனா சர்வதேச விசாரணையிலிருந்து பாதுகாத்துக் கொண்டிருப்பதும் இங்கு நினைவு கூறத்தக்கது. ரோஹிங்யா முஸ்லிம்கள் சிக்கலில் சீனா, உருசியாவோடு இணைந்து மியன்மாரை சர்வதேச விமர்சனங்களிலிருந்து பாதுகாத்து வருகின்றது.

மியன்மார் இராணுவ ஆட்சிக்கு எதிராக மக்கள் அமைதியான முறையில் போராடி வருகிறார்கள். இருந்தும் பொலீஸ் சுட்டதில் 50 க்கும் மேலான ஆர்ப்பாட்டக்காரர்கள் இதுவரை இறந்துள்ளார்கள். பொதுப் பேரணிகளின் பொருட்டு, மக்கள் ஒன்று கூடுவதற்குத் தடை விதிக்கப்பட்டு இன்றுடன் நான்காவது நாளாகின்ற போதிலும் எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் அங்கு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சனநாயக அறிவுறுத்தல்கள் செயற்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை வன்முறைகளை நிராகரிப்பதாகவும் மனித உரி-மைகள் மதிக்கப்பட வேண்டும் எனவும் அடிப்படை மனித சுதந்திரத்திற்கு இடமளிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது. கைது செய்யப்பட்டுள்ள ஆங் சாங் சூ கி உள்ளிட்டவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதுடன், சனநாயகம் மீண்டும் நிலைநாட்டப்பட வேண்டும் என அமெரிக்கா, சீனா உள்ளிட்ட உறுப்பின நாடுகள் பாதுகாப்பு பேரவையினூடாக மியன்மார் இராணுவத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளன.


மேலும் மியான்மாரின் இறையாண்மை, அரசியல் சுதந்திரம், பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் ஒற்றுமை ஆகியவற்றில் தங்கள் வலுவான உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளன.

மியான்மார் மக்கள் பாவப்பட்டவர்கள். அவர்கள் மீண்டும் இராணுவ சர்வாதிகார ஆட்சியின் பிடிக்குள் சிக்குண்டுள்ளார்கள்!

சனநாயக ஆட்சிமுறைமை வழங்கும் சுதந்திரம், சமத்துவம், நீதி மற்றும் அடிப்படை மனித உரிமைகளை முழுதாக அனுபவிக்க முடியாதபடித் தள்ளப்பட்டுள்ளார்கள்.

# அகழ்வாராய்ச்சி எனும் பெயரில் கபளீகரம் செய்யப்படும் தமிழர் நிலங்கள்

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)


பற்றுச்சீட்டு
பெயர் ............ கிராம அலுவலர் ............
முகவரி ............
"வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் முரண்பாடுகளுக்கும் ...
... இந்த அலுவலகத்தில் கிடைக்கப்பெற்றுள்ளது ...
... பதிவு இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது ...
... தீர்வு காணுவதற்கு எதிர்காலத்தில் ...
... தொடர்பாகத் தேவையான ... தயார்படுத்தி ...
... தங்களிடம் வைத்துக்கொண்டு, தங்களை அழைக்கும் சந்தர்ப்பத்தில் ...
... விசாரணைகள் மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் ...
... மேலும் கேட்டுக்கொள்கின்றேன்.
பிரச்சினையை பதிவு செய்துள்ள இலக்கம் ............
திகதி 06-08-2014
பிரதேச செயலாளர்

இலங்கையின் வடக்கே போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருக்கும் தமிழர்களுக்கு சொந்தமான செழுமையான விளைநிலங்கள் திட்டமிட்ட வகையில் தொல்லியல் அகழ்வாராய்ச்சி எனும் பெயரில் தொடர்ந்து அபகரிக்கப்படுகின்றன.

ஐ நா விசாரணையில் சிக்கித் தவிக்கும் இலங்கை வெளிநாடுகளுக்கு ஒரு முகமும் உள்நாட்டுக்கு தனது மற்றொரு கோர முகத்தையும் காட்டி ஏமாற்றி வருகிறது.



தொல்லியல் அகழ்வாராய்ச்சி என்று கபளீகரம் செய்யப்படும் தமிழர்களின் நிலங்களில் இலங்கை இராணுவம் நிலைகொள்வதும் அங்கு பௌத்த விகாரைகள் அமைப்பதும் சர்வ சாதாரணமாகியுள்ளது.

சொந்த காணிகளை துப்பரவு செய்யும் பணிகள் கூட இப்போது தடுக்கப்படுகின்றன. இப்படியான செயல்களுக்கு பிக்குகளும் உடந்தையாக உள்ளனர்.

அண்மையில் முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு கிராமத்தில் போர் சூழல் காரணமாக கைவிடப்பட்ட தனது காணியை துப்பரவு செய்து எல்லையிட்டு விவசாய நடவடிக்கை மேற்கொள்ளும் நோக்கோடு வேலைகளில் ஈடுபட்டிருந்த முதியவர் ஒருவரை பௌத்த தேரர் தலைமையிலான தொல்லியல் திணைக்கள குழுவினர் அச்சுறுத்தி பொலிஸார் மற்றும் வன வள திணைக்களத்தினரை ஏவி விட்டு வேலைகளுக்கு தடைவிதித்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.



தண்ணிமுறிப்பு கிராம சேவகர் பிரிவில் குமுளமுனை தண்ணிமுறிப்பு குள வீதிக்கு அருகாமையிலுள்ள தனது சொந்த விவசாய நிலத்தை நிலத்தினை துப்பரவு செய்து கொண்டிருந்த முதியவர் இயந்திரம் மூலம் சமப்படுத்தும் ஈடுபட்டிருந்தவேளை அங்கு வந்த அதிகாரிகளும் குறித்த பிக்குவும் அந்தக் காணியைச் சுற்றியுள்ள 500 ஏக்கர் நிலங்கள் அனைத்தும் குருந்தூர்மலைக்கு சொந்தமான தொல்லியல் புராதன பூமி என்று கூறி அங்கு யாரும் எந்த வேலைகளிலும் ஈடுபடமுடியாது என்று அச்சுறுத்தியுள்ளனர்.

சொந்த காணிக்கு அந்த முதியவர் செல்வதை தடுத்தோடு மட்டுமின்றி அங்கு எவருக்கும் நிலங்கள் இல்லை என தெரிவித்து அவரை முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துள்ளனர்.




இந்த சம்பவம் குறித்து உள்ளூர் கிராம மக்கள் செய்தியாளர்களை தொடர்பு கொண்டு விடயத்தை தெரிவித்தனர். உடனடியாக அங்கு சென்ற செய்தியாளர்களும் அதிகாரிகளால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

தேசிய அடையாள அட்டை மற்றும் ஊடக அடையாள அட்டையை பரிசோதிக்கும் உரிமை பொலிசாருக்கு மட்டுமே இருக்கும் நிலையில், வனத்துறை அதிகாரிகள் அங்கு சென்ற செய்தியாளர் ஒருவரின் அடையாள அட்டையை வலிந்து பெற்று அதிலிருந்து விவரங்களை பதிவு செய்துள்ளார்.



ஊடகச் சுதந்திரத்தில் இலங்கை மிகவும் கீழ் நிலையிலுள்ளது என்பதற்கு இப்படியானச் சம்பவங்கள் தொடர்ந்து சான்றாக உள்ளன.

தண்ணிமுறிப்பு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள அந்தப் பிரதேசம் தமிழ் மக்கள் பல ஆண்டு காலமாக குடியிருந்து விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்ட பகுதியாகும். மேலும் போருக்கு பின்னர் மீண்டும் தற்போது அப்பகுதியில் உள்ள தமது காணிகளை துப்பரவு செய்து விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இந்த காணிகளில் மா, பலா, தென்னை, போன்ற மரங்கள் இன்றும் கூட நிற்பதை காணமுடிகின்றது. இந்த நிலையில் கடந்த மாதம் தொடக்கம் குருந்தூர் மலையில் இராணுவம, தொல்லியல் திணைக்களம் இணைந்து ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் நிலையில் தற்போது அதனை அண்டிய தமிழ் மக்களுக்கு சொந்தமான குடியிருந்த நிலங்கள், விவசாய நிலங்கள் என்பனவற்றை அபகரிக்கும் நோக்கமாக கருதப்படும் இந்த கிராம மக்கள் மத்தியில் அச்சத்தை தோற்றுவித்துள்ளது.

இதேவேளை குருந்தூர் பகுதியிலுள்ள ஆறுமுகத்தான்குளத்தையும் இலங்கைப் படையினர் வலிந்து தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளனர். அங்கு பல தலைமுறையாக பாரம்பரிய முறையில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த தமிழ் மீனவர்கள் விரட்டியடிக்கப்பட்டு அங்கு வெளியாட்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அந்தக் குளத்திலிருக்கும் "ஜப்பான் மீன்களை" தடை செய்யப்பட்ட வலை கொண்டு "வெளியிலிருந்து வந்தவர்கள்" பிடித்து இராணுவத்தின் பயன்பாட்டுக்கு அளிக்கின்றனர் எனும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

ராஜபக்ச அரசாங்கம் தொடர்ந்து தமிழர்களின் நிலங்கைப் பறிப்பதும், தமிழ் மக்களின் வாழ்வாதாரங்களை நசுக்குவதிலும் திட்டமிட்ட வகையில் ஈடுபடுகிறது என்று பன்னாட்டு அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

எனினும் அண்மையில் வெளியான ஐநா மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கை நில அபகரிப்பு மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயங்களில் பாதிக்கப்பட்டோர் பக்கம் நிற்காமல் அரசின் பக்கமே நின்றுள்ளது என்று தமிழ் மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.


TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

| | |
|---|---|
| எல்லாவிதமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி, | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி, | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடாய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# கனடா-ரொரன்ரோ மனிய நேயக் குரல் அமைப்பின் அனுசரனையில் கிளிநொச்சி அழகாபுரிப் பாடசாலையில் பரிசளிப்பு விழா!





கனடாவில் இயங்கிவரும் ரொரன்ரோ மனிய நேயக் குரல் அமைப்பின் அனுசரனையில் கிளிநொச்சி மாவட்டத்தின் அழகாபுரிக் கிராமத்தில் உள்ள அழகாபுரி வித்தியாலயத்தில் புலமைப் பரிசில் பரிசளிப்பு விழா வெகு சிறப்பாக 25.02.2021 அன்று இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய கிராமங்களில் ஒன்றான அழகாபுரியில் அமைந்திருக்கும் கிளிநொச்சி அழகாபுரி வித்தியாலயத்தில் 106 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் இயங்கும் இப் பாடசாலை மாணவர்களுக்கு ரொன்ரோ மனித நேய அமைப்பு கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளது.

அத்துடன் நேற்றைய தினம் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் புலமைப் பரிசில் பரீட்சையில் அதிக புள்ளிகளை பெற்ற மாணவர்களுக்கு ரொரன்ரோ மனித நேயக்குரல் அமைப்பின் ஏற்பாட்டில் பரிசில்கள் வழங்கப்பட்டன. அத்துடன் பாடசாலையில் கல்வி பயிலும் 106 மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மிகவும் பின்தங்கிய பிரதேசத்தை சேர்ந்த இப் பாடசாலை மாணவர்கள், நேற்றைய பரிசளிப்பு விழாவை தமது ஆற்றல் மிகுந்த கலை நிகழ்ச்சிகளாலும் வரவேற்பினாலும் வண்ண மயப்படுத்தினர். மாணவர்களின் பல்வேறு விதமான கலை நிகழ்ச்சிகளும் இதன்போது இடம்பெற்றன.

இந்த திட்டத்திற்கு கனடாவில், ரொரன்ரொ மனித நேயக்குரல் அமைப்பின் சார்பாக விடுக்கப்பெற்ற வேண்டுகோளை ஏற்று நிதி அன்பளிப்புக்களை வழங்கிய வர்த்தகப் பிரமுகர்கள் திரு கணேசன் சுகுமார், பராராஜசிங்கம் செல்வநாயகம் மற்றும் ஒன்றாரியோ அரச திணைக்களத்தின் அதிகாரி திரு ந. கதிர்காமநாதன் ஆகியோருக்கு ரொரன்ரோ மனித நேயக் குரல் அமைப்பின் இயக்குனர் சபை நன்றி தெரிவிக்கின்றது.

இந்த அமைப்போடு தொடர்பு கொண்டு மேலும் நற்பணிகளுக்கு உதவும் எண்ணம் கொண்டவர்கள் பின்வரும் இயக்குனர் சபை உறுப்பினர்களோடு தொடர்பு கொள்ளவும்

சுங்கர் நல்லதம்பி:- 416 270 4343
மரியாம்பிள்ளை மரியராசா:- 416 669 6437
ஆர். என். லோகேந்திரலிங்கம்:-
416-732 1608




MONEY PROBLEMS?™
ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்

உங்களைக் கேளுங்கள்?



- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta™ credit

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்

Scarborough / Downtown Toronto: 416-489-2000
Mississauga / Brampton: 416-650-5400



Scarborough
201-4433 Sheppard Ave. E
Scarborough, ON, M1S 1V3

Toronto/Downtown
800-120 Eglinton Ave. E
Toronto, ON, M4P 1E2

North York
306-1280 Finch Ave. W
North York, ON, M3J 3K6

Mississauga
110-93 Dundas Street E.
Mississauga, ON, L5A 1W7

Brampton
201-7990 Kennedy Rd. South,
Brampton, Ontario, L6W 0B3

Mark Shamly
Tamil Consultant

Proudly Served over 15,000 clients since 2004
Visit : GtaCredit.Com



Ajay Oberoi
Experienced Credit Counsellor

# ஜெனிவா மைய அரசியல்



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

46 ஆவது கூட்டத்தொடர் தொடங்கிவிட்டது. அதற்கு முன்னும் பின்னுமாக தாயகத்திலும் டயஸ்போராவிலும் போராட்டங்கள் தொடங்கிவிட்டன. ஜெனிவாவை மையமாகக் கொண்டு ஒரு போராட்டச் சூழல் தாயகத்திலும் டயஸ்போராவிலும் சிறிதளவுக்கு தமிழகத்திலும் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதேசமயம் அரசியல்வாதிகள் தங்களுக்கிடையே கூடிக் கதைத்து புதிய கூட்டணிகளை உருவாக்குவது பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். இது எல்லாவற்றையும் ஊடகங்கள் உருப்பெருக்கி சூடாக்கி விற்றுக் கொண்டிருக்கின்றன. மொத்தத்தில் ஜெனிவாவை நோக்கி ஒரு கொதி-நிலை உருவாக்கப்படுகிறது. தமிழ்ச் சமூகத்தின் கூட்டு உளவியல் ஜெனிவாவை நோக்கி குவிமையப்படுத்தப்பட்டிருக்கிறது.

இது தொடர்பில் இக்கட்டுரை பின்வரும் அடிப்படைக் கேள்விகளை எழுப்புகிறது. முதலாவது கேள்வி - தமிழ் மக்களின் அரசியலை ஜெனிவாவை நோக்கி குவிப்பது சரியா? இதை இன்னும் கூர்மையாக கேட்டால் ஜெனிவாவுக்காகக் காத்திருப்பது அல்லது ஜெனிவாவில் தீர்வு கிடைக்கும் என்று நம்புவது அல்லது வெளியாருக்காகக் காத்திருப்பது என்பது சரியா?

இரண்டாவது கேள்வி - ஜெனிவா எனப்படுவது மார்ச் மாதத்தில் நடக்கும் கூட்டத்தொடர் மட்டும்தானா? அதற்கு முன்னும் பின்னும் கிடையாதா? ஐநா மன்றம் போன்ற உலக பொது மன்றங்கள் இப்படிப்பட்ட கூட்டத்தொடர் குறித்து மார்ச் மாதத்துக்கு சற்று முன்னதாகத்தான் முடிவுகளை எடுக்கின்றனவா? அல்லது ஆண்டு முழுவதும் அதற்கான தயாரிப்புகளும் ஏற்பாடுகளும் நடக்கின்றனவா?

மூன்றாவது கேள்வி - இவ்வாறு ஜெனிவாவை நோக்கி கவனத்தைக் குவிப்பது யார்? ஒரு சமூகத்தின் கூட்டு உளவியலை ஜெனிவாவை நோக்கி குவிமையப்படுத்துவது யார்?

இம்மூன்று கேள்விகளுக்கும் விடை-களை இனிக் காணலாம். முதலாவது ஜெனீவா அரசியல் அல்லது வெளியாருக்காகக் காத்திருத்தல். தமிழ் மக்கள் இப்பொழுதுதான் வெளியாருக்காகக் காத்திருக்கிறார்கள் என்பதல்ல. கடந்த பல தசாப்தங்களாக தமிழ் அரசியல் ஏதோ ஒரு விகிதமளவுக்கு வெளியாருக்காகக் காத்திருப்பதாகவே இருந்துவருகிறது. ஆயுதப் போராட்டத்திற்கு முன்னரும் இந்தப் போக்கு இருந்தது. குறிப்பாக இந்தியா ஆயுதப் போராட்டத்தில் நேரடியாக தலையிட தொடங்கியதிலிருந்து இந்த வெளியாருக்காகக் காத்திருக்கும் அரசியல் தீவிரமான ஒரு நிலை-யை அடைந்தது. 1987ஆம் ஆண்டு வரையிலும் அது இந்தியாவுக்காக காத்திருப்பதாக இருந்தது. ஆனால் இந்திய இலங்கை உடன்படிக்கைக்குப் பின் அக்காத்திருப்பு ஒரு போரில் முடிவடைந்தது. முடிவில் ஈழத்தமிழர்கள் "நீயுமா இந்தியா?" என்று கேட்கும் ஒரு நிலைமை தோன்றியது.

அதன்பின் ஈழத்தமிழர்களின் அரசி-யல் பெருமளவுக்கு ஐரோப்பிய மையமாக மா-றியது. பலம் பொருந்திய தமிழ் டயஸ்போரா அதற்கு பின்புலமாக இருந்தது. இந்த ஐரோப்பிய மைய அரசியல் கிட்டத்தட்ட 1990 களில் இருந்து தீவிரமடைந்தது. இதன் இறுதிக் கட்டம் எங்கே வருகிறது என்றால் கடைசிக் கட்டப்போரில்தான். கடைசிக் கட்டப்போரில் வணங்காமண் கப்பல் வரும் ஐநா வரும் என்று காத்திருப்பதில் வந்து நின்றது. ஆனால் அங்கேயும் வெளியாருக்காகக் காத்திருத்தல் இனப்படுகொலையிலேயே முடிந்தது. வணங்காமண் கப்பல் வரவில்லை. ஐநாவும் வரவில்லை. காத்திருந்த மக்களுக்கு கைகளை உயரத்தூக்கியபடி நிர்வாணமாக வட்டுவாகல் பாலத்தைக் கடந்து சரண் அடைவதை தவிர வேறு தெரிவுகள் இருக்கவில்லை.

இப்படியாக வெளியாருக்காகக் காத்திருக்கும் அரசியலின் இரண்டாம் பாகம் தோல்வியில் இனப்படுகொலையில் முடிந்தது. அதன்பின் மூன்றாவது பாகம். அதுவும் மேற்கை நோக்கிய காத்திருப்புத்தான். அதுதான் ஜெனிவா மைய அரசியல். கடந்த பன்னிரண்டு ஆண்டுகால ஜெனிவா அரசியல் எனப்படுவது தமிழ் மக்களை எங்கே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது? இது தொடர்பில் தொகுக்கப்பட்ட ஆய்வு எதும் தமிழ் மக்கள் மத்தியில் உண்டா? இது தொடர்பில் தொகுக்கப்பட்ட ஓர் ஆய்வை யார் செய்வது? அல்லது தமிழ் அரசியலை குறித்து நீண்ட கால அடிப்படையில் திட்டமிடுவதுதீர்மானிப்பது முடிவு-களை எடுப்பது யார்? இக்கேள்வியை மேலும் கூராகக் கேட்டால் தமிழ் மக்களுக்கு யார் பொறுப்பு? இது முதலாவது கேள்வி தொடர்பான விவாதம்.

இனி இரண்டாவது கேள்விக்கு வரலாம். அதாவது ஜெனிவா கூட்டத்தொடர் எனப்படுவது மார்ச் மாதந்தான் தொடங்கும் ஒரு செயற்பாட்டல்ல. ஐநா போன்ற உலகப் பொது மன்றங்களில் நிகழ்ச்சி நிரல்கள் பெரும்பாலும் ஆண்டுக்கணக்கில் திட்டமிடப்படும். அதன்படி ஜெனிவா கூட்டத் தொடருக்கான தயாரிப்புக்கள் பல மாதங்களுக்கு முன்னரே தொடங்கிவிடும். அதை இன்னும் சரியாகச் சொன்னால் ஒவ்வொரு ஜெனிவாக் கூட்டத்தொடரின் முடிவிலும் அடுத்த ஜெனிவாக் கூட்டத்தொடருக்கான நிகழ்ச்சித் திட்டங்களும் கால அட்டவணையும் முடிவெடுக்கப்பட்டுவிடும். அக்கால அட்டவணையின் பிரகாரமே காரியங்கள் நடக்கும். எனவே ஜெனிவா தீர்மானம் எனப்படுவது மார்ச் மாதம்தான் தீர்மானிக்கப்படும் என்று இல்லை. அதற்குரிய வேலைகள் அதற்கு முன்னரே தொடங்கிவிடும். ஜெனிவா தீர்மானம் எவ்வாறு அமையவேண்டும் என்று இறுதி செய்யும் சந்திப்புகளும் கலந்துரையாடல்களும் மார்ச் மாதத்தையொட்டி நடக்கலாம். ஆனால் அதற்குரிய அடிப்படைத் தயாரிப்புகள் கடந்த கூட்டத் தொடரின் முடிவில் தொடங்கிவிடும். இந்த நிகழ்ச்சி நிரலை மார்ச் மார்ச் மாதத்தையொட்டிய தமிழ்மக்களின் போராட்டங்கள் எந்த அளவுக்கு மாற்றக்கூடும்?

அது மட்டுமல்ல ஜெனிவா தீர்மானம் எனப்படுவது நாடுகளின் தீர்மானம். நாடுக-ளின் தீர்மானங்கள் ஒரு கூட்டத் தொடரை ஒட்டி உடனடியாக எடுக்கப்படுகின்றவை அல்ல. அவை அந்தந்த நாடுகளில் வெ-ளியுறவு கொள்கைகளின் பிரகாரம் ஏற்கனவே எடுக்கப்பட்டிருக்கும். ஏனெனில் நாடுகளுக்கு இடையிலான உறவுகள் கட்டமைப்பு ரீதியிலா-னவை. கட்டமைப்புசார் உறவுகளின் அடிப்படையில் வெளியுறவு கட்டமைப்புகள் தீர்மானங்களை எடுக்கின்றன.அவ்வாறு கட்டமைப்புகளுக்கு ஊடாக எடுக்கப்பட்ட தீர்மானங்களில்படி நிகழ்ச்சி நிரல்கள் தயாரிக்கப்படும். இவ்வாறு ஏற்கனவே தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்களை சில சமயம் பிந்திய நடப்புக்கள் குழப்பலாம். எனினும் நாடுகளுக்கிடையிலான கட்டமைப்பு சார் உறவுக-ளின் படி ஏற்கனவே தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிர-லை அனேகமாக குழப்பாமல் இருக்கும் ஒரு நிலை-லமையே காணப்படும்.

இந்த அடிப்படையில் சிந்தித்தால் ஜெனிவா தீர்மானத்துக்காக வேலை செய்வது என்பது ஜெனிவாவை நோக்கி அல்ல மாறாக உறுப்பு நாடுகளின் தலைநகரங்களை நோக்கியே வேலை செய்யப்பட வேண்டும். இது தனிய தாயகத்தில் நிகழும் போராட்டமாக மட்டும் இருக்கக்கூடாது. தாயகத்தில் நிகழும் போராட்டங்கள் தமிழ் மக்களை ஒரு திரளாக கூட்டிக் கட்டும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதற்கும் அப்பால் உறுப்பு நாடுகளின் தலை நகரங்களை நோக்கி லொபி செய்யவேண்டும். ஜெனிவாவுக்கு வரும் ராஜ்ய பிரதிநிதிகள் முடிவுகளை எடுக்கும் அதிகா-ரம் மிக்கவர்கள் அல்ல. முடிவுகள் அந்தந்த நாடுக-ளின் வெளியுறவுக் கொள்கை வகுப்பாளர்களால் அதற்குரிய கட்டமைப்புகளால் ஏற்கனவே அந்த நாடுகளின் தலைநகரங்களில் எடுக்கப்படுகின்றன. அவ்வாறு எடுக்கப்படும் முடிவுகளைத்தான் இந்த பிரதிநிதிகள் ஒப்புவிப்பார்கள். இதில் அவர்கள் தூதுவர்கள் மட்டுமே. தீர்மானிப்பவர்கள் அல்ல. எனவே தமிழ் மக்கள் லொபி செய்ய வேண்டியது முடிவுகளை எடுக்கும் வெளியுறவு கட்டமைப்புகளை நோக்கித்தான். அந்த லொபியை மார்ச் மாதத்தையொட்டித் தொடங்குவது என்பதே மிகத் தவறான அணுகுமுறை. அந்த லொபி தொடர்ச்சியாக நடக்கவேண்டும். அது ஜெனிவாவை மட்டும் மையப்படுத்தியதாக இருக்கக்கூடாது. அது நாடுகளை நோக்கியதாக இருக்கவேண்டும். அதில் ஜெனிவா ஒரு பகுதி மட்டுமே.

அவ்வாறு தொடர்ச்சியாக நடப்பது என்றால் அதற்கு ஒரு வினைத்திறன் மிக்க கட்டமைப்பு வேண்டும். அரசுகளிடம் இருப்பது போல ஒரு பலமான வளம் பொருந்திய கட்டமைப்பு இருந்தால்தான் அது நிகழ்வுகளை மையமாகக் கொண்டு சிந்திக்காமல் நீண்டகால நோக்கில் சிந்தித்து முடிவுகளை எடுக்கும். எனவே ஜெனிவாக் கூட்டத்தொடரையொட்டி குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் ஏற்பாடு செய்யப்படும் போராட்டங்கள் தமிழ் கூட்டு உளவியலை நொதிக்க வைக்க உதவும் என்பதற்கும் அப்பால் ஐநா தீர்மானங்களில் பெரிய விளைவுகளை ஏற்படுத்துமா? இது இரண்டாவது கேள்வி.

மூன்றாவது கேள்வி - இவ்வாறு மார்ச் மாதத்தையொட்டி போராட்டங்களை ஏற்பாடு செய்வது யார்? இதுதான் பிரச்சினை. எல்லாருமே செய்கிறார்கள். டயஸ்போரா செய்கிறது. தாயகத்தில் கட்சிகள் செய்கின்றன. டயஸ்போராவிலிருந்து தாயகத்தின் மீது செல்வாக்குச் செலுத்த விளையும் தரப்புக்கள் ஏற்பாடு செய்கின்றன. சில சமயங்களில் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் முகவர்களும் செய்கிறார்கள். ஆனால் இவ்வாறு தமிழ் மக்கள் தொடர்பில் முடிவுகளை எடுத்து போராட்டங்களை நடத்துபவர்கள் தங்களுக்கிடையே ஏதும் ஒருங்கிணைப்பை கொண்டிருக்கிறார்களா என்று பார்த்தால் அப்படி எதுவும் இல்லை என்று தெரிகிறது. மாணவர்கள் போராட-த் தொடங்கும் பொழுது அதில் போய் கட்சிகளும் குந்தியிருக்கும். அல்லது சிவில் சமூகங்கள் போராடத் தொடங்கும் பொழுது அதில் கட்சிகள் இணைந்து கொள்ளும்.கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக நிலைமை அப்படித்தான் காணப்படுகிறது. இதுவிடயத்தில் நீண்டகால அடிப்படையில் சிந்தித்து தமிழ் மக்களின் தலைவ-தியை தீர்மானிக்கும் விதத்தில் விவகாரங்களை திட்டமிடவும் முடிவெடுக்கவும் வல்ல ஒரு பொதுக்கட்டமைப்பு தமிழ் மக்கள் மத்தியில் கிடையாது.

இவ்வாறான ஒரு பொது கட்டமைப்பை உருவாக்க தமிழ் கட்சிகள் தயாரில்லை. தமிழ் டயஸ்பொராவிலும் செயற்படும் அமைப்புக்கள் மத்தியில் ஒரு பொதுக்கட்டமைப்போ பொது வேலைத் திட்டமோ கிடையாது. டயஸ்பொராவிலும் தாயகத்திலும் தமிழகத்திலும் இயங்கும் செயற்பாட்டாளர்களுக்கு இடையில் ஒரு பொதுக்கட்டமைப்பு கிடையாது. அப்படி ஒரு பொது கட்டமைப்பை கடந்த பத்தாண்டுகளில் உருவாக்க முடியவில்லை. இதுதான் பிரச்சினை தமிழ் மக்களை முழுவதுமாக பொறுப்பேற்று தமிழ்மக்களின் தலைவிதியை நீண்டகால அடிப்படையில் திட்டமிட்டு ஒரு தேசத்தை கட்டியெழுப்பும் நிகழ்ச்சி நிரலுடன் தமிழ் மக்கள் மத்தியில் எந்த ஒரு பொது கட்டமைப்பும் கிடையாது. அவ்வாறு ஒரு பொதுக்கட்டமைப்பு இல்லாத வெற்றிடத்தில்தான் ஒவ்வொருவரும் ஒவ்வொரு அமைப்பும் அவரவர் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப அல்லது அவரை இயக்கும் எஜமானர்களின் உத்தரவுக்கமைய அல்லது தன்னார்வமாக எதையாவது சீசனுக்கு சீசன் ஏற்பாடு செய்கிறார்கள்.

இந்த ஏற்பாடுகளில் இருக்கும் பிரதான நன்மையாவது அது தமிழ் மக்களை ஒரு தேசமா-கத் திரட்டுவதற்குரிய ஒரு பொது உளவியலை உருவாக்குகிறது என்பதுதான். ஆனால் அதில் இருக்கும் தீமைகள் வருமாறு.

முதலாவது தீமை - வெளியாருக்காக காத்திருக்கும் ஓர் அரசியல் எனபடுவது ஜெனீவா என்ற மாயையை நோக்கி தமிழ் நம்பிக்கைகளை குவிக்கக்கூடியது.

இரண்டாவது தீமை - இந்த அரசியலைக் குறித்து சரியான மதிப்பீடும் சரியான திட்டமிடலும் இல்லாத வெற்றிடத்தில் வெளியாருக்காக காத்திருப்பது என்பது சில தமிழ்த் தரப்புகளை வெளியாரின் முகவர்களாகவே மாற்றிவிடும். அது ஏற்கனவே தமிழ் டயஸ்போராவில் கடந்த ஐந்து ஆண்டுகளில் வளர்ச்சி பெற்று வருகிறது. ஜெனிவாவில் முடிவுகளை எடுக்கும் கருக்குழு நாடுகளில் வாழும் தமிழ் அமைப்புகளை அந்தந்த நாடுகளின் அரசாங்கங்கள் தமது நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப வளைக்க முயல்வதாக ஒரு குற்றச்சாட்டு உண்டு.

மூன்றாவது தீமை - நிகழ்வுகளை மையமாகக் கொண்டு மாதங்களை மையமாகக்கொண்டு சீசனுக்கு சீசன் தமிழ் மக்களின் கூட்டு உளவி-யலை நொதிக்கச் செய்வது என்பது சோடாக் காஸைப் போல திடீரென்று பொங்கி திடீரென்று அடங்கி விடும் ஆபத்தும் உண்டு இது நீண்டகால நோக்கிலான போராட்டங்களை உருவாக விடாது.

நாலாவது தீமை - இவ்வாறு மையப்படுத்தப்படாத செயற்பாடுகளில் எதிர் தரப்பின் முகவர்களும் உள்நுழைந்து விடுவார்கள். தமிழ் செயற்பாட்டாளர்களை சிதறடித்து தமிழ் மக்களின் உளவியலை நீண்ட எதிர்காலத்தில் சோர்ந்து போகச் செய்து விடுவார்கள்.

மேற்கண்டவற்றை தொகுத்துப் பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது. தமிழ் மக்கள் தங்களுடைய அரசியலை தங்களுடைய நோக்கு நிலைகளில் இருந்து நீண்டகால அடிப்படையில் திட்டமிட வேண்டும். அதாவது ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவது என்ற அடிப்படையில் திட்டமிட வேண்டும். ஜெனிவாவை கையாள்வது என்பதும் அவ்வாறு ஒரு தேசத்தை கட்டியெழுப்பும் நிகழ்ச்சி நிரலில் ஒரு பகுதியாகவே இருக்கவேண்டும். அது தன்பலமின்றி வெளியாருக்காக காத்திருக்கும் ஓர் அரசியலாக மாறிவிடக்கூடாது. அதற்கு முதலில் தாயகத்தில் தமிழ்த்தரப்பு ஒரே தரப்பாகத் திரளவேண்டும். கட்சிகளைக் கட்டியெழுப்புவதற்கு பதிலாக தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். அப்பொழுதுதான் வெளியாருக்காக காத்திருப்பது என்பது வெளியாரை கையாளும் ஒரு பொருத்தமான வளர்ச்சியைப் பெறும்.

# அதிமுகவில் சாமானியர்களுக்கு 'சீட்' கிடைக்குமா? ஜெ. பாணியில் வேட்பாளர் தேர்வு நடக்குமா? எதிர்பார்ப்பும்; கள நிலவரமும்

திமுகவில் ஒவ்வொரு சட்டப்பேரவைத் தொகுதிளிலும் போட்டியிடக்கூடிய வேட்பாளர்களை எளிதாக கணித்துவிடலாம். அந்தளவுக்கு முன்னாள் அமைச்சர்கள், சிட்டிங் எம்எல்ஏக்கள், மாவட்டச் செயலாளர்கள், முக்கிய நிர்வாகிகள் மற்றும் அவர்கள் வாரிசுகளுக்கு வேட்பாளர் பட்டியலில் முன்னுரிமை கிடைக்கும்.மிக அரிதாகவே சாதாரண நிர்வாகிகள் வேட்பாளராக்கப்படுவார்கள். ஆனால், அதிமுகவில் வேட்பாளர் தேர்வு அதற்கு தலைகீழாக இருக்கும். வேட்பாளர் பட்டியல் வெளியாகுவதற்கு கடைசி நிமிடங்கள் முன்வரை அமைச்சர்கள், எம்எல்ஏக்கள் மற்றும் முக்கிய நிர்வாகிகள் கூட தங்களுக்கு மீணடும் 'சீட்' கிடைக்குமா என்பதும், இந்த தொகுதியில்தான் நாம் போட்டியிடுவோமா என்றும் அவர்களால் கணிக்க முடியாது.

கடைசி வரை அவர்களை ஜெயலலிதா பதற்றத்திலேயே வைத்து இருப்பார். அதுபோலவே, சாமானிய நிர்வாகிகள் கூட திடீரென்று வேட்பாளராகிவிடுவார்கள்.அதோடு வெற்றிபெற்றால் அவர் அமைச்சர்களாகி கட்சியில் தவிர்க்க முடியாத சக்தியாகிவிடுவார்கள். ஆனால், ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு நடந்த கடந்த மக்களவைத் தேர்தல், உள்ளாட்சித் தேர்தலில் திமுகவைப் போலவே அதிமுகவிலும் வாரிசுகள், முக்கிய நிர்வாகிகள், பணபலம் படைத்தவர்களுக்கே பெரும்பான்மையாக 'சீட்' வழங்கப்பட்டது.

அதனால், இந்த சட்டப்பேரவைத் தேர்தலிலும் அதிமுகவில் அதேநிலையில்தான் வேட்பாளர்கள் தேர்வு இருக்குமா? அல்லது ஜெயலலிதா பாணியில் வேட்பாளர் தேர்வு இருக்குமா? என்ற எதிர்பார்ப்பு கட்சி நிர்வகிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.அந்தந்த மாவட்ட அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், தங்களுக்கும், தாங்கள் கை காட்டும் நபர்களுக்கே 'சீட்' வழங்கப்படும் என்று கூறுவதாக நிர்வாகிகள் ஆதங்கமடைந்துள்ளனர். அவர்கள் கூறுவது போலவே, தமிழகம் முழுவதும் அதிமுகவில் இந்த



சட்டப்பேரவைத் தேர்தலில் அமைச்சர்கள், சிட்டிங் எம்எல்ஏக்கள், முக்கிய நிர்வாகிகள் பலர், தற்போதே தங்களுக்குதான் தொகுதி ஒதுக்கப்பட்டது போல் தேர்தல் பணிகளைத் தொடங்கிவிட்டனர்.குறிப்பாக மதுரையில் சென்றமுறை வடக்கு சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற முன்னாள் மேயரும், மதுரை புறநகர் கிழக்கு மாவட்டச் செயலாளருமான விவி.ராஜன் செல்லப்பா எம்எல்ஏ, இந்த முறை திருப்பரங்குன்றத்தில் போட்டியிடப் போவதாக கூறப்படுகிறது. இவர் வேட்பாளர் போல் 'பூத்'வாரியாக நிர்வாகிகளை நியமித்து தேர்தல் பணிகளை தொடங்கிவிட்டார்.

அதுபோல, கூட்டுறவுத்துறை அமைச்சரும், மாநகரச் செயலாளருமான செல்லூர் கே.ராஜூ, தான் தற்போது எம்எல்ஏவாக உள்ள மதுரை மேற்கு சட்டப்பேரவைத் தொகுதியில் மீண்டும் போட்டியிடுவதாகக் கூறப்படுகிறது. வேட்பாளர் போல் இவரும் தேர்தல் பணிகளை இந்தத் தொகுதியில் தொடங்கிவிட்டார். திருமங்கலம் சட்டப்பேரவைத் தொகுதியில் தற்போது எம்எல்ஏவாக உள்ள வருவாய்துறை அமைச்சர் ஆர்பி.உதயகுமார், தேர்தல் பணிகளை கடந்த சில மாதத்திற்கு முன்பே தொடங்கிவிட்டார். அதுபோல், கிழக்கு தொகுதியில் கிழக்கு மாவட்ட எம்ஜிஆர் மன்ற இளைஞர் அணி செயலாளர் வழக்கறிஞர் ரமேஷ், தெற்கு தொகுதியில் 'சிட்டிங்' எம்எல்ஏ சரவணன், சோழவந்தானில் 'சிட்டிங்' எம்எல்ஏ மாணிக்கம் உள்ளிட்டோர் தங்களே மீண்டும் வேட்பாளராக போட்டியிடுவோம் என்ற நம்பிக்கையில் தேர்தல் பணிகளை சத்தமில்லாமல் செய்து வருகின்றனர். இதே நிலைதான் தமிழகம் முழுவதும் இருப்பதாக நிர்வாகிகள் ஆதங்கமடைந்துள்ளனர்.

தேர்தலில் 'சீட்' கிடைக்காவிட்டால் வேட்பாளர் கணவில் வலம் வரும் முக்கிய நிர்வாகிகள், கட்சி அறிவிக்கும் வேட்பாளர்களுக்கு எதிராக உள்ளடி வேலைபார்க்கும் வாய்ப்புள்ளது. அதனால், அமைச்சர்கள் பெரும்பாலானவர்களுக்கு மீண்டும் 'சீட்' கொடுக்கும் முடிவிலேயே கட்சி மேலிடம் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஜெயலலிதா இருந்தபோது உளவுத்துறை, மாவட்டச்செயலாளர்கள் பரிந்துரைக்கும் பட்டியல், விருப்பமனு பட்டியல் உள்ளிட்டவற்றை பரிசீலனை செய்து ஜெயலலிதா யாரை வேண்டுமென்றாலும் வேட்பாளராக்கும் நிலை அதிமுகவில் இருந்தது.ஏன் சில சமயம், முக்கிய நிர்வாகிகளைக் கூட அவர்களே எதிர்பார்க்காத தொகுதியில் போட்டியிட வைப்பார்.

அப்படிதான் சென்ற ஆட்சியில் முக்கிய அதிகார மையமாக வலம் வந்த முன்னாள் அமைச்சர்கள் நத்தம் விஸ்வநாதன், கே.பி.முனுசாமி ஆகியோர் வேறு தொகுதியில் போட்டியிட வைத்து அவ்ரகள் தோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது. ஆனால், தற்போது அதுபோன்ற நிலை ஏற்பட வாய்ப்பே இல்லாததால் திமுகவைபோல் அதிமுகவிலும் வேட்பாளர் பட்டியல் வெளியாவதற்கு முன்பே கணிக்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. அதனால், போட்டியிட விருப்பமனு கொடுத்து காத்திருக்கும் நிர்வாகிகள், சாதாரண பணபலமில்லாத அடிமட்ட நிர்வாகிகள் ஏமாற்றமடைந்துள்ளனர்.இதையும், தாண்டி முதல்வர் பழனிசாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஜெயலலிதா பாணியில் வேட்பாளர் பட்டிலை வெளியிடுவார்களா? என்ற நப்பாசையில் நிர்வாகிகள் காத்திருக்கின்றனர்.

# 'எங்கு நின்றாலும் தொண்டர்கள் ஜெயிக்க வைப்பார்கள்' விஜயகாந்த் மகன் விஜய பிரபாகரன் விருப்ப மனு தாக்கல்



தேமுதிக சார்பில் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட விஜயகாந்த் மகன் விஜய பிரபாகரன் இன்று கோயம்பேட்டில் விருப்ப மனு தாக்கல் செய்துள்ளார்.தமிழகத்திற்கு ஏப். 6ம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலுக்கு இன்னும் ஒருமாத காலமே உள்ள நிலையில், அதிமுக கூட்டணியில் பாமகவுக்கு மட்டும் 23 தொகுதிகள் இறுதி செய்யப்பட்டு, பிப். 27 அன்று ஒப்பந்தம் கையெழுத்தானது. பாஜக, தேமுதிக ஆகிய கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வரும் நிலையில் எத்தனை தொகுதிகள் என்பது இன்னும் இறுதி செய்யப்படவில்லை. இதற்கிடையே விருகம்பாக்கம் தொகுதிக்கு விஜயகாந்தும் தொகுதி குறிப்பிடாமல் தேமுதிக பொருளாளர் பிரேமலதாவும் விருப்ப மனுத் தாக்கல் செய்துள்ளனர்.இந்நிலையில், தேமுதிக சார்பில் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட விஜயகாந்த் மகன் விஜய பிரபாகரன் இன்று கோயம்பேட்டில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் விருப்ப மனு தாக்கல் செய்தார். தொகுதிப் பங்கீடு நிறைவடையாத நிலையில், எந்தத் தொகுதியில் போட்டியிட உள்ளார் என்பதை விருப்ப மனுவில் குறிப்பிடவில்லை.அதைத் தொடர்ந்து செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த விஜய பிரபாகரன், ''தொண்டர்கள் ஆசைப்பட்டதால் மனு தாக்கல் செய்துள்ளேன். இதுதொடர்பாக விஜயகாந்த், 'சென்று வா, வெற்றி நமதே!' என்று தெரிவித்தார். எந்தத் தொகுதியில் நான் நின்றாலும் என்னைத் தொண்டர்கள் ஜெயிக்க வைப்பார்கள்.கூட்டணிப் பேச்சுவார்த்தையைக் கட்சியின் மூத்த நிர்வாகிகள் முடிவு செய்வார்கள். நான் வேட்பு மனு தாக்கல் செய்ய மட்டுமே வந்துள்ளேன்'' என்று விஜய பிரபாகரன் தெரிவித்தார்.தேமுதிக சார்பாகப் போட்டியிட விருப்ப மனு அளித்தவர்களிடம் வரும் 6ம் தேதி முதல் 8ம் தேதி வரை அக்கட்சியின் தலைவர் விஜயகாந்த் நேர்காணல் நடத்த உள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஜெ. பாணியில் வேட்பாளர்களை தேர்வு செய்யும் ஸ்டாலின்



திமுகவில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பாணியில் வேட்பாளர்களை தேர்ந்தெடுக்க மு.க.ஸ்டாலின் திட்டமிட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.இது தொடர்பாக நேர்காணலில் பங்கேற்ற கட்சி நிர்வாகிகள் சிலர் கூறியதாவது: திமுகவுக்கு ஆலோசனை வழங்கி வரும்ஐபேக் நிறுவனம் ஆய்வு செய்து தரும்பட்டியலில் இடம்பெற்ற பெரும்பாலானோருக்கு மட்டுமே தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கிடைக்கும் என கருதுகிறோம்.

புதுச்சேரியில் திமுக எம்எல்ஏ ராஜினாமா செய்து, காங்கிரஸ் ஆட்சி கவிழ அவரும் ஒரு காரணமாக இருந்ததை தலைவர் ஸ்டாலினால் ஜீரணிக்க முடியவில்லை. திமுகவின் வெற்றி பிரகாசமாக உள்ளது. ஸ்டாலின் கடந்த 2006ம் ஆண்டுமுதல் முதல்வர் பதவிக்காக காத்துக்கொண்டிருக்கிறார். இந்த தேர்தலை அதற்கான சிறந்த வாய்ப்பாக கருதுகிறார். அதனால் பாஜக சார்பில் ஆபரேஷன் தாமரை திட்டத்தை செயல்படுத்தினாலும் அதற்கு வளைந்து கொடுக்காத வேட்பாளர்களை நிறுத்துவதில் ஸ்டாலின் உறுதியாக உள்ளார்.

அதற்காக, பெரிய வழக்குகளில் சிக்காத, அமலாக்கத்துறை, வருமான வரித்துறை, சிபிஐ உள்ளிட்டவற்றிடம் சிக்க வாய்ப்பில்லாத, இணை நோய்கள் இல்லாத, எந்த சூழலிலும் மாற்று கட்சியை சிந்திக்காத, கட்சி கொள்கையில் பிடிப்புள்ளவர்களுக்கே தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்குவது என ஸ்டாலின் முடிவெடுத்திருப்பதாக அறிகிறோம்.குறிப்பாக, ஜெயலலிதா பாணியில், தொகுதியில் பிரபலம் இல்லாவிட்டாலும், பண பலம் இல்லாவிட்டாலும், சொல்வதை தட்டாமல் கேட்கும் நிர்வாகிகளை நிறுத்தவும் அதிக வாய்ப்புகள் உள்ளன.

ஸ்டாலினின் இந்த முடிவால் கட்சியின் முக்கிய நிர்வாகிகள், வாரிசுகளை களமிறக்கும் திட்டத்தில் இருக்கும் நிர்வாகிகள் அதிர்ச்சிக்குள்ளாகி உள்ளனர். கட்சியில் பல ஆண்டுகளாக உழைத்துக்கொண்டு கீழ் மட்டத்திலேயே இருக்கும் தொண்டர்கள் பலருக்கு இது நல்ல வாய்ப்பாக இருக்கும் என்றனர்.

### அரசு வழங்கிய பரிசுத் தொகையைப் பள்ளிக்கே வழங்கிய ஆசிரியர்

சிறந்த அறிவியல் ஆசிரியர் எனப் பாராட்டி தமிழக அரசு வழங்கிய தொகையை, தான் பணிபுரியும் பள்ளிக்கே அந்த ஆசிரியர் வழங்கியது நெகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.தமிழகத்தில் அறிவியல் துறையில் சிறந்து விளங்குவோருக்கு மாநில அளவில் விருது வழங்கும் விழா சென்னையில் கடந்த வாரம் நடைபெற்றது. அரசு முதன்மைச் செயலாளர் ராஜேஸ் லக்கானி கலந்துகொண்டு விருதுகளை வழங்கினார். இதில், புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி முதுநிலை விலங்கியல் துறை ஆசிரியர் கே.ஆர்.ரமேஷிக்கு விருது வழங்கப்பட்டது. அதோடு, ரூ.25,000 ரொக்கமும் வழங்கப்பட்டது. இதற்கிடையே தனக்குக் கிடைத்த தொகையைப் பள்ளியின் வளர்ச்சிக்காக ஆசிரியர் ரமேஷ் கொடுத்துள்ளார். இது குறித்து ஆசிரியர் ரரமேஷ் கூறியபோது, ''நான் அதே பள்ளியில் படித்து, அதே பள்ளியில் ஆசிரியராக பணிபுரிகிறேன்.

எனவே, முன்னாள் மாணவர் என்கிற அடிப்படையில் பள்ளின் வளர்ச்சிக்காக அரசு வழங்கிய ரூ.25,000 ரொக்கத்தைப் பள்ளித் தலைமை ஆசிரியர் முருகனிடம் கொடுத்துள்ளேன்'' என்றார்.அரசு வழங்கிய பரிசுத் தொகையை தான் பணியாற்றும் அரசுப் பள்ளிக்கே ஆசிரியர் ரமேஷ் கொடுத்தது அனைவரையும் நெகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.

# தமிழர்களுக்கு அழிவுகள் மாத்திரமே பரிசா?

**- கனடா உதயனுக்காக கிளிநொச்சியிலிருந்து தீபச்செல்வன்**

இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் எதற்காக ஆயுதம் ஏந்திப் போராடத் துவங்கினார்கள்? இனத்திற்கான உரிமைகள் மறுக்கப்பட்டு, ஒடுக்குமுறைகள் பரிசளிக்கப்பட்டபோதே ஈழத் தமிழ் மக்கள் தமது தேச இறைமையை கோரிய போராட்டத்தை முன்னெடுத்தார்கள். அந்த வகையில் முதலில் அகிம்சை வழியிலும் பின்னர் ஆயுத வழியிலும் போராட்டத்தை முன்னெடுத்தார்கள். தமிழர் தம் இறைமையை கோரிய போராட்டம் என்பது இப்போது அறுபந்தைந்து வருடங்கள் கடந்த நிலையில் தொடர்கின்றது. ஆனாலும் இன்றும் ஸ்ரீலங்கா அரசு பாரபட்சங்களின் உச்ச வடிவிலான ஒர அரசாகவே காணப்படுகின்றது என்பதை மீண்டும் உணரத் தலைப்பட்டுள்ளோம்.




கொரோனா நோய் தொற்றுக்கு உள்ளாகி இறக்கின்ற இலங்கை முஸ்லீம் மக்களின் சடலங்களை அந்த மக்களின் மத நம்பிக்கைக்கு மாறாக எரியூட்டி தகனம் செய்கின்ற முறையை ஸ்ரீலங்கா அரசாங்கம் முன்னெடுத்தது. இதற்கு உலகம் முழுவதும் இருந்து பலத்த எதிர்ப்பு கிளம்பியது. தமிழ் மக்களும் இந்த விடயத்தில் முஸ்லீம் மக்களுக்காக ஆதரவுக் குரல் எழுப்பினார்கள். அண்மையில் ஈழத்தின் கிழக்கே பொத்துவிலில் தொடங்கப்பட்ட பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான போராட்டத்தில் கூட இந்த விடயத்தை ஒரு முன்னிலை கோரிக்கையாக போராட்டத் தரப்பினர் முன்வைத்தனர்.

அது மாத்திரமின்றி சர்வதேச நாடுகளும் முஸ்லீம் மக்களின் ஜனாஜா எதிர்ப்பு விடயத்தில் கவனம் செலுத்தின. கொரோனா நோய் தொற்றுக் காலத்தில் நோயினை பயன்படுத்தி அடக்குமுறைகள் மேற்கொள்ளப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவை ஆணையாளர் குற்றம் சுமத்தியிருந்தார். அடக்குமுறைகளால் கொரோனா தொற்று நோய்களை ஒழித்துவிட முடியாது என்று அவர் கூறினார். இந்த விடயம் ஏனைய நாடுகளைவிடவும் ஸ்ரீலங்கா அரசுக்கே மிகவும் பொருத்தமானது எனலாம். இதில் ஒன்றாகவே முஸ்லீம்கள் மீதான அணுகுமுறை அமைந்தது.

அத்துடன் வந்த பாகிஸ்தான் நாட்டுப் பிரதமர் இம்ரான் கான் கூட முஸ்லீம்களின் ஜனாஸா விடயத்தில் இலங்கை அரசு சாதகமான முடிவு எடுக்கும் என்று நம்பிக்கை வெளியிட்டார். அத்துடன் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைப் பேரவையில் ஸ்ரீலங்காவுக்கு ஆதரவு சேர்ப்பதற்காக முஸ்லீம் நாடுகளை தன் பக்கம் இழுப்பதற்காக ஸ்ரீலங்கா அரசாங்கம் முஸ்லீம்களின் சடலங்களை அவர்களின் மத நம்பிக்கைப்படி புதைக்க அனுமதிக்கப் போவதாக அறிவித்தது. இதனையடுத்து அண்மையில் இலங்கை வந்த பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானும் அதற்கு நம்பிக்கை தெரிவித்து உரையாற்றியிருந்தார்.

என்றாலும் இதனை வைத்தும் தமிழர்களின் பிரதேசத்தை ஒடுக்கவும் தமிழ் பேசும் மக்களிடையே முரண்பாடுகளை ஏற்படுத்தவும் ஸ்ரீலங்கா அரசு திட்டமிட்டு இருப்பதே தற்போது அதிர்ச்சியான விடயம். அந்த வகையில் வடக்கில் இரணைதீவில் முகொரோனாவால் இறக்கும் முஸ்லீம்களின் சடலங்களை அடக்கம் செய்யப் போவதாக ஸ்ரீலங்கா அரசாங்கம் அறிவித்துள்ளது. இதற்கு ஸ்ரீலங்காவின் பிரதான எதிர்கட்சியே கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. இது தமிழ் மக்களிடையே பெரும் எதிர்ப்பையும் தேவையற்ற சலசலப்பையும் ஏற்படுத்தும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

இனங்களுக்கு இடையே பிளவுகளை ஏற்படுத்தவே ஸ்ரீலங்கா அரசாங்கம் இத்தகைய முயற்சிகளை மேற்கொள்ளுவதாக எதிர்கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறுகின்றனர். அத்துடன் தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகளும் இதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். இங்கே ஒன்று மாத்திரம் நன்றாகப் புலப்படுகின்றது. ஸ்ரீலங்காவில் நல்ல திட்டங்களும் அபிவிருத்திகளும் முன்னெடுக்கப்படுகின்ற போது அதில் தமிழ் மக்களுக்கு எந்த முன்னிடங்களும் வழங்கப்படுவதில்லை. அதைப்போல உயர் பதவிகள், அமைச்சுக்கள், உரிமைகள் என்று எதற்குமே முன்னுரிமையில்லை.

ஆனால் அழிவுகள் என்று வருகின்ற போது மாத்திரம் ஸ்ரீலங்கா அரசாங்கம் வடக்கு கிழக்கிற்கு முன்னுரிமை அளிக்கின்றது. கொரோனா தொற்று ஏற்பட்டவுடன் அதிகமான கொரோனா தடுப்பு நிலையங்களையும் தனிமைப்படுத்தல் மையங்களையும் வடக்கு கிழக்கில் தான் ஸ்ரீலங்கா அரசாங்கம் அமைத்தது. கொரோனா வைத்திய சாலைகளையும் தனிமைப்படுத்தல் மையங்களையும் வடக்கு கிழக்கில் அமைப்பதில் தவறில்லை. ஆனால் வடக்கு கிழக்கில் மாத்திரம் அவற்றை அதிகமாக ஏன் நிரப்ப வேண்டும் என்பதே சந்தேகத்திற்கு உரியது.

யுத்தத்தையும் பேரழிவுகளைளும் வடக்கு கிழக்கிற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் முப்பதாண்டுகளாக பரிசளித்தது. ஸ்ரீலங்கா அரசின் பொருளாதாரத்தில் பெருமளவு நிதியை வடக்கு கிழக்கு மக்கள் மீது கொட்டுகின்ற குண்டுகளுக்கும் ஆயுதங்களுக்கும் செலவு செய்தது அரசாங்கம். அதே தொகையை உணவுக்கும் மருந்துக்கும் ஸ்ரீலங்கா அரசு ஒதுக்கியிருக்கவில்லை. மாறாக உணவையும் மருந்தையும் தடுத்துக் கொண்டு குண்டுகளை மாத்திரமே தமிழ் மக்களுக்கு பரிசளிப்பதில் ஸ்ரீலங்கா அரசு மிகுந்த அக்கறை கொண்டிருந்தது. இதுவே ஸ்ரீலங்காவின் துயர நிலைக்கான பாரபட்ச அணுகுமுறையாகும்.


அதிலும் இரணைதீவை தேர்வு செய்வது என்பது தமிழ் மக்களை பொருத்த வரையில் பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாகும். இரணை தீவில் இருந்து 28 வருடங்களாக அகதிகளாக அலைந்த அக் கிராம மக்கள் கடந்த 2019 ஆம் ஆண்டில்தான் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டனர். இந்த மக்கள் ஈழத்தில் நடந்த தொடர்ச்சியான போரால் பாதிக்கப்பட்டவர்கள். 1997இல் நடந்த போர் பின்னர், 2009இல் நடந்த போர் என மாறி மாறி வந்த யுத்தங்களால் இப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக அலைந்தனர்.

அத்துடன் கடந்த காலத்தில் இக் கிராமத்தில் மக்களை மீள்குடியேற அனுமதிக்காமல் ஸ்ரீலங்கா அரசாங்கம் தடுத்தது. இரணைதீவு பெருந்தீவு மற்றும் சிறுதீவு என இரண்டு பகுதிகளைக் கொண்டது. கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேச சபைக்கு உட்பட்ட இந்தக் கிராமத்தில் மீன் பிடித் தொழிலை அடிப்படை வாழ்வாதாரமாக கொண்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர். பச்சைப் பசேல் என்ற இக் கிராமத்தின் வனப்பும் பேரழகை தரும். பெரும் போராட்டத்தின் பின்னர், தவத்தின் பின்னர் இக் கிராம மக்கள் கடந்த 2019ஆம் ஆண்டு இங்கே தாமாகவே மீள்குடியேறிக் கொண்டனர்.

பாடசாலை, வைத்தியசாலை, நூலகங்கள், தபால் நிலையங்கள் என சகல வசதிகளையும் கொண்ட இந்தக் கிராமத்தில் சுமார் 500 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. பெருளாதாரத்தை பெருக்கும் கடல் வளம் இத் தீவை சூழ்ந்து இருப்பதால், இங்கே தொழிலில் ஈடுபட மக்கள் விரும்புகின்றனர். அது இந்த மக்களின் வாழ்வாதாரத்தை மாத்திரமின்றி இத் தேசத்தின் பொருளாதாரத்தையும் பெருக்கவே செய்யும். ஆனால் தமிழ் மக்கள் தமது பொருளாதாரத்தில் உயர்வது ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கு ஒருபோதும் உவப்பானதில்லை. இதனால் இக் கிராமத்தை தற்போது குறி வைத்திருப்பதாக மக்கள் கருதுகின்றனர்.

கொரோனாவில் இறக்கும் எந்த மனிதர்களையும் இவர்களின் பிரதேசங்களில் உள்ள அவர்களின் பூர்வீகமான மயானங்களில் தகனம் செய்வதே சரியானதாக இருக்கும். வடக்கு கிழக்கில் கொரோனாவால் இறந்தவர்களின் சடலங்களை தென்னிலங்கையில் புதைக்க முடியுமா? அதற்கான அவசியமும் பாரபட்சமும் தேவையில்லை. அத்துடன் முஸ்லீம் மக்கள் கோரியது, வடக்கில் தமிழ் மக்களின் பிரதேசத்தில் சடலங்களை புதைக்கின்ற விடயத்தையல்ல. தமது மத முறைப்படி புதைக்கவே. அதனை அவர்களின் பிரதேசங்களிலேயே செய்ய வேண்டும். அதுவே அவர்களின் கோரிக்கையும் நியாயமும் ஆகும்.

எனவே எந்த விடயத்திலும் வடக்கு கிழக்கை அழிக்கின்ற, வடக்கு கிழக்கு தமிழ் மக்களை பாதிக்கின்ற வகையில் காய்களை நகர்த்துவதை ஸ்ரீலங்கா அரசாங்கம் கைவிட வேண்டும். எல்லாவற்றிலும் எப்போதுமே இனவழிப்பு என்கின்ற திட்டத்தை ஸ்ரீலங்கா அமுல்படுத்த நினைப்பதே இங்கு வெளிப்படுகின்றது.



Toronto சிட்டி கவுன்சிலர்

PAUL AINSLIE

WARD 24, SCARBOROUGH-GUILDWOOD

HELP IS AVAILABLE

வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| குறைந்த கட்டனத்தில் வீட்டுவசதி | Ontario Works |
| விலங்கு சேவைகள் | வாகனத் தரிப்பிடங்கள் |
| உயர்மாடி கட்டட சட்டங்கள் | பூங்காக்கள் |
| கட்டட அனுமதி பத்திரங்கள் | காவல் துறை |
| பிள்ளை பராமரிப்பு சலுகை | பொதுச் சுகாதாரம் |
| அவசர வீட்டு வசதிகள் | வீதிகள் |
| தீயணைப்பு சேவைகள் | ஆதன வரிகள் |
| கழிவுப் பொருட்கள் சேவை | பொதுப் போக்குவரத்து |
| நூலகச் சேவை | மீள் சுழற்சியும் பசுமை திட்டமும் |
| மாநகரத் தேர்தல் | மரங்கள் |
| மாநகர அனுமதியும் சட்டங்களும் | நீர் விநியோகம் |

நியமன அலுவலகம்
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca www.paulainslie.com
Ward 24 Scarborough-Guildwood @Ainslie_Ward24
@cllrainslie Paul Ainslie (City of Toronto)

www.paulainslie.com 416-396-7222


சமூக ஒன்றுகூடல்கள்
பயங்கரமான
விளைவுகளை
ஏற்படுத்தலாம்.
COVID-19 பரவுவதைத் தடுக்க
வீட்டில் தங்கியிருங்கள்.
ontario.ca/covid-19 மூலம் மேலும்
அறியுங்கள்
ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது
Ontario

Carefirst
SENIORS & COMMUNITY SERVICES ASSOCIATION

# தென்கிழக்கு மார்க்கம் பகுதிக்கு கோவிட் - 19 சம்பந்தமான அதிமுக்கியத்துவமான சமூகச் செயற்பாடுகள்

நீங்கள் கோவிட் - 19 நோயினால் பாதிக்கப்பட்டிருந்து, உங்களுக்குச் சமூக ஆதரவு தேவைப்பட்டால் எங்களை அழையுங்கள்.

**Carefirst** இனது சமூக ஆதரவு சேவைகள் உள்வாங்கல் தொடர்பு எண்:

**416 646 5108** (திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை, முற்பகல் **9. 00** மணியிலிருந்து பிற்பகல் **5. 00** மணிவரை)

எமது பணியாளர்களால் கீழ்வரும் மொழிகளில் உங்களுக்கு உதவ முடியும்:
ஆங்கிலம், கன்ரனீஸ், மன்டறின், ஹிந்தி, பஞ்சாபி, தமிழ், உருது

## கிடைக்கக்கூடிய சேவைகள்:

- உணவுப் பாதுகாப்பு
- போக்குவரத்து
- மளிகைப் பொருள் கொள்வனவு
- குழந்தைப் பராமரிப்பு, தன்னார்வத் தனிமைப்படுத்தல் மையம், தங்குமிடம், வருமான உதவி ஆகியவற்றிற்கான சமூக வளங்கள்
- உளரீதியான ஆதரவு, ஆதரவுக்கான ஆலோசனை (மெய்நிகர் வழியாக)
- மருந்து / அத்தியாவசியப் பொருள் விநியோகம்
- பராமரிப்பு ஒருங்கிணைப்பு

***தகுதியானவர்களுக்கு மானியங்கள் கிடைக்கின்றன**.

## ஏனைய வளங்கள்:

**ஒன்ராரியோ தொலைபேசிச் சுகாதார சேவை உங்களுக்கு நோய்க்குரிய அறிகுறிகள்** காணப்பட்டால் அழைக்க வேண்டியது:
Tel: 1-866-797-0000

**ஒன்ராரியோ 211 / சமூகம் மற்றும் சமூக சேவைகள் உதவித் தொடர்பு:**
211ontario.ca

யோர்க் பிராந்திய கோவிட் - 19 தன்னார்வத் தனிமைப்படுத்தல் நிலையம்
**York Region COVID-19 Voluntary Isolation Centre**
1-877-464-9675
york.ca/isolationcentre

**யோர்க் பிராந்தியப் பொதுச் சுகாதாரப் பிரிவு**
1-800-361-5653

Carefirst **முதியோர், சமூக சேவை இணையம் மற்றும் கீழ்வரும் சேவைப் பங்காளர்களினால் இது எடுத்துவரப்படுகிறது**:

Carefirst Family Health Team
Centre for Immigrant and Community Services
Community & Home Assistance to Seniors (CHATS)
City of Markham
EYRND Ontario Health Team
Health Common Solutions
Health for All Family Health Team
Hong Fook Mental Health Association
Islamic Society of Markham - Jam'e Masjid Markham
Markham Chinese Presbyterian Church
Markham Stouffville Hospital
Markham Wesley Centre
Social Services Network
Tamil Civic Action
The Cross-cultural Community Services Association
YMCA of Greater Toronto (Markham)
York Region Community and Health Services
York Region Public Health
105 Gibson Centre
360° Kids Support Services

**Funded by: Ontario Health and Central LHIN**

Updated on February 5, 2021

# இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பை தடுப்பதற்கு உரிமையாளர்களின் திசை திருப்பும் நடவடிக்கையா?




கடந்த பல வருடங்களாக இலங்கையில் உள்ள தேயிலை மற்றும் றப்பர் மரத்தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் சம்பளத்தை ஆயிரம் ரூபாயாக அதிகரிக்கும் வகையில் பல போராட்டங்கள் பல தொழிற்சங்களினால் நடத்தப்பெற்று வந்தன. ஆனால் அவை தொடர்ந்தும் இழுபறி நிலையிலேயே இருந்தன.

தற்போதைய அரசாங்கம் அண்மையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு கட்டாயம் ஆயிரம் ரூபாய் சம்பளம் உடனடியாக வழங்கப்பெற வேண்டும் என்று உத்தரவை பிறப்பித்தது. அதனால் மலையக தொழிற்சங்கங்களும் அதற்கு வரவேற்பைத் தெரிவித்தன.

ஆனாலும் பெருந்தோட்டங்களின் உரிமையாளர்களாக பல அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளமையால் அவர்கள் இந்த சம்பள உயர்வை விரும்பவில்லை. இதனால் அவர்கள் காலத்தைக் கடத்தும் காரியங்களில் ஈடுபட்டு வருகின்றார்கள் என்று அறியப்படுகின்றது.

இந்த நிலையில் பெருந்தோட்டப்பகுதிகளில் பணியாற்றும் முகாமையாளர்கள் உட்பட தோட்ட அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியும், ஓல்டன் சம்பவத்துக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டும் ஹற்றன், மல்லியப்பு சந்தியில் நேற்று 3ம் திகதி கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்திற்கு பின்பாக தோட்ட முதலாளிமார் சம்மேளனத்திற்கு தொடர்பு உள்ளது என சில தொழிற்சங்கத் தலைவர்கள் தெரவித்துள்ளனர் என அறியப்படுகின்றது.

முதல் தடைவையாக தோட்ட முகாமையாளர்கள் நேற்று புதன்கிழமை ஹற்றன் மல்லியப்பு சந்தியில் இரு மருங்கிலும் பதாதைகளை காட்சிபடுத்தியவாறு சுகாதார விதிமுறைகளுக்கமைய அமைதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் ஈடுப்பட்டனர்.

சுமார் 300இற்கும் மேற்பட்டோர் அமைதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தோட்ட துரைமார் சங்கத்தினாலேயே இந்த எதிர்ப்பு போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆர்ப்பாட்டத்தில் சகல பெருந்தோட்ட முகாமையாளர்களும் கலந்துகொண்டனர்.

தொழிலாளர் அராஜகம் ஒழிக, தோட்ட அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துக, தோட்டங்களில் அரசியல் மயமாக்கலை நிறுத்து, முகாமைத்துவத்துக்கு எதிரான வன்முறையைக் கண்டிக்கின்றோம் என்றெல்லாம் கவனயீர்ப்பு போராட்டத்தில் பங்கேற்றவர்கள் பதாதைகளை ஏந்தியிருந்தனர். கைகளில் கறுப்பு பட்டிகளையும் அணிந்திருந்தனர்.

பெருந் தோட்டப் பகுதிகளில் தோட்ட அதிகாரிகளுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளன. அண்மையில் ஒல்டன் தோட்ட முகாமையாளரை வீடு தேடி சென்று கொடூரமாக தாக்குதல் நடத்தியுள்ளனர். எனவே, தோட்ட அதிகாரிகளின் பாதுகாப்பை பலப்படுத்துவது, உறுதிப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஆகியோர் கவனம் செலுத்த வேண்டும். என்ற கோரிக்கையும் இதன்போது முன்வைக்கப்பட்டது.

நாட்டில் பொருளாதார வளர்ச்சிக்கு தோட்ட அதிகாரிகளும் பெரும் பங்களிப்பை வழங்குகின்றனர். எனவே, எமக்கு எதிரான வன்முறை சம்பவங்களைக் கண்டிக்கின்றோம். நீதி கிடைக்க வேண்டும். இப்பிரச்சினையை சர்வதேசம் வரை கொண்டு செல்வோம் என்று தோட்ட துரைமார் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். எனினும் இவர்களது குற்றச்சாட்டுக்களை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் சதித்திட்டம் தான் இதுவென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

*கொழும்பிலிருந்து ராஜபுத்ரன்*

Carefirst SENIORS & COMMUNITY SERVICES ASSOCIATION

கோவிட் -19
POP-UP சோதனை

உங்களுக்கு ஏதேனும் அறிகுறிகள் இருந்தால், அல்லது நீங்கள் COVID-19 உடன் தொடர்பு கொண்டிருக்கலாம் என்று நினைத்தால், தயவுசெய்து ஒரு சந்திப்பை பதிவு செய்து சோதனை செய்யுங்கள்.

எல்லாம் வரவேற்கத்தக்கது, வயது வரம்பு இல்லை. உங்கள் OHIP சுகாதார அட்டையை கொண்டு வாருங்கள். உங்களிடம் OHIP அட்டை இல்லையென்றால், தயவுசெய்து 1 துண்டு ஐடியைக் கொண்டு வாருங்கள்.

* தயவுசெய்து கவனிக்கவும், சர்வதேச பயண அனுமதிக்கு COVID-19 சோதனை கோரும் நபர்கள் பொதுவில் நிதியளிக்கப்பட்ட COVID-19 சோதனைக்கு தகுதியற்றவர்கள்

**Carefirst One-Stop Multi-Services Centre**
300 Silver Star Blvd, Scarborough ON M1V 0G2 (Midland & McNicoll)
ஒவ்வொரு வியாழக்கிழமை. தொடக்க தேதி: ஜனவரி 14 — 2:00 p.m. - 6:30 p.m.

**YMCA**
101 YMCA Blvd, Markham ON L6G 0A1 (Kennedy & Hwy 407)
ஒவ்வொரு புதன் & வெள்ளி. தொடக்க தேதி: ஜனவரி 30 — 9:30 a.m. - 2:30 p.m.

**Markham Chinese Presbyterian Church**
2250 Denison St, Markham ON L3S 1E9 (McCowan & Denison)
ஒவ்வொரு செவ்வாய் & புதன். தொடக்க திகதி: பிப்ரவரி 2 — 9:30 a.m. - 2:30 p.m.

உங்கள் சோதனை சந்திப்பை முன்பதிவு செய்யுங்கள்
**www.carefirstontario.ca**
Walk-In ஆனால் காத்திருப்பு நேரம் மாறுபடலாம்

மேலும் தகவலுக்கு, தயவுசெய்து பார்வையிடவும் **www.carefirstontario.ca** அல்லது அழைக்கவும் **416-646-5108**

**உங்களிடம் கொண்டு வரப்பட்டது: Carefirst Seniors and Community Services Association**
Carefirst Family Health Team
Health for All Family Health Team
Markham Chinese Presbyterian Church
Markham Stouffville Hospital
YMCA of Greater Toronto

Updated on January 27, 2021

# 1996-05-03 வெள்ளிக்கிழமை அன்று கனடா ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயத்தில் கனடா உதயன் முதலாவது இதழ் வெளியிடப்பெற்றது



1996ம் ஆண்டு ஆயல மாதம் 3ம் திகதி கனடா ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயத்தில் கனடா உதயன் முதலாவது இதழ் வெளியிடப்பெற்றதை கனடா உதயன் ஆசிரிய பீடத்திற்கு மகிழ்ச்சியோடு ஞாபகப்படுத்திய ஊடக நண்பர் தற்போதைய கனடா 102.7 FM பண்பலை வானொலி நிலையத்தின் அதிபர் நடா ராஜ்குமார் அவர்களுக்கு எமது ஆசிரிய பீடத்தின் நன்றி.

சில நாட்களுக்கு முன்னர் எமது உதயன் பிரதான அலுவலகத்திற்கு ஒரு கடித உறையை தற்போதை 102.7 FM பிரதிநிதியும் கலைஞருமான ஸ்ரீமுருகன் கொண்டு வந்து எம்மிடம் கையளித்தார். அதை ஆர்வத்துடன் திறந்தபோது இங்கே காணப்படும் ஒரு குறிப்பும் அன்பளிப்பு ஒன்றும் இருந்தது.

அதில்,

'அன்பு நண்ப!

உனது உழைப்பே வெற்றி. உதயன் பத்திரிகை 25வது ஆண்டை அடைந்ததை காணும் இந்த நேரம் அதன் முதற் பிரதியை அருள் மிகு துர்க்காதேவி அம்பாள் ஆலயத்தில் வைத்து பெற்றுக்கொண்ட நேரத்தை பெரு மகிழ்ச்சியுடன் நினைத்துப் பார்க்கின்றேன்.

வாழ்க!

எஇங்ஙனம் அன்புடன் - நடா ராஜ்குமார்'




என்று தனது கைப்பட எழுதியிருந்தார் நண்பர் நடா ராஜ்குமார்.

இதைப் பார்த்துப் படித்ததுடன் பல கடந்த கால நிகழ்வுகள்


ALL INSURANCE & FINANCIAL SERVICES
உதயன்
புலிகளின் தாக்குதலினால் தோப்பூர் பொலிஸ் நிலையம் நிர்மூலம்
INTERNET
ரி.வி. தமிழ் நிறுவனம் ஏ.ஈ. மனோகரனைக் கௌரவித்தது
முஸ்லிம்களுக்கு நேரே துப்பாக்கிகள் நீள்வதை புலிகள் தவிர்க்க வேண்டும்
AJB TRAVELS


FREE 5000 COPIES
LARGEST CIRCULATED TAMIL WEEKLY IN CANADA
3150 EGLINTON AVENUE EAST
சூரியன்
5TH ISSUE MAY 3, 1994
1983 ஜூலையில், வெலிக்கடையில் பலியானவர்களுக்கு நஷ்டஈடு
மீண்டும் முருங்கை மரத்தில் ஏறும் ஜனாதிபதி விஜேதுங்கா
தென் ஆபிரிக்காவின் முதல் கறுப்பின ஜனாதிபதியாக நெல்சன் மண்டேலா
SARAVANAS
WE MAKE DURABLE CUSTOM DESIGN FURNITURE

ஞாபகத்திற்கு வந்தன.

1999ம் ஆண்டு மே மாதம் கனடாவிற்கு அழைக்கப்பெற்றிருந்த கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் எமது உதயன் பிரதம ஆசிரியருக்கு 'நட்பின் நாயகன்' என்னும் பட்டத்தையும், நண்பர் நடா ராஜ்குமாருக்கு 'வெண்கலைக் குரலோன்' என்னும் பட்டத்தையும் 'தமிழன் வழிகாட்டி' செந்திலாதனுக்கு 'செயல்வீரன்' என்னும் பட்டத்தையும் வழங்கிவிட்டுச் சென்றார்.

'வெண்கலக் குரலோன்' நண்பர் ராஜ்குமார் தற்போது. அதாவது அந்தப் பட்டத்தைப் பெற்று 21 வருடங்களுக்குப் பின்னரும் 102.7 FM என்னும் பண்பலை வானொலியின் அதிபராக வெண்கலக் குரல் எழுப்பிய வண்ணம் புகழ் பெற்றவராக திகழ்கின்றார்.

இனி 1996ம் ஆண்டு ஆயல 3ம் திகதி ஒரு வெள்ளிக்கிழமை எவ்வாறு எமது கனடா உதயன் முதலாவது இதழ் வெளியிடப்பெற்றது என்பதைப் பார்ப்போம்.

அதற்கு முன்னர், 1993ம் ஆண்டு மே மாதத்தில் ஒரு நாள் கனடாவில் முதலாவது இலவச வாரப் பத்திரிகையாக 'சூரியன்' வெளியிடப்படுகின்றது. அதன் பங்காளியாக இல்லாமல், பிரதம ஆசிரியராக பதவியில் அமர்த்தப்படுகின்றார், தற்போது வெள்ளி ஆண்டில் தடம் பதித்துள்ள 'கனடா உதயன்' பிரதம ஆசிரியர் லோகன் லோகேந்திரலிங்கம் அவர்கள்.

'சூரியன்' பத்திரிகையின் பங்காளர்களான 'தமிழர் மத்தியில்' அதிபர் அமரர் நந்தகுமார், பற் புஸ்பகாந்தன், விவேகா அச்சகத்தின் நண்பர் ஸ்ரீதரன், மற்றும் கணக்காளர் குமார் இரத்தினம் ஆகியோர் ஒன்றாக அன்போடு அழைத்துச் சென்று 'சூரியன்' பத்திரிகையின் ஆசிரியராக லோகன் லோகேந்திரலிங்கம் அவர்களை நியமனம் செய்தார்கள்.

அந்த ஆரம்பமே சரியாக மூன்று வருடத்தின் பின்னர் 'கனடா உதயன்' வார இதழை எமது வாசகர்களுக்கு வழங்குவதற்கு காரணமாக அமைந்தது. 'சூரியன்' பத்திரிகை நிறுத்தப் பெற்று சில நாட்களுக்குள்ளாகவே, அதாவது 1996-05-03 வெள்ளிக்கிழமையன்று, நாம் முன்னரே திட்டமிட்ட படி, கனடாவின் ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள, 'துர்க்கேஸ்வரம்' ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயத்தில் வெளியிடப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பெற்றன.

அன்றைய தினம் அங்கு கூடியிருந்த கனடா உதயன் குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் மத்தியில் 'துர்க்கேஸ்வரம்' ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயத்தின் பிரதம குருவும் நிறுவனருமான சிவஸ்ரீ கணேச சுவாமிகள், தியாகராஜக் குருக்களிடமிருந்து நண்பர் நடா ராஜ்குமார் பத்திரிகையின் முதற் பிரதியை பெற்றுக்கொண்டார்.

இன்று சரியாக இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவுற்ற வேளையில் மகிழ்ச்சியானதும் பல அனுபவங்களைத் தேடித்தந்ததுமான பத்திரிகை வெளியிட்ட நாளை பக்தியுடனும் மகிழ்ச்சியுடன் நினைத்துக் கொள்கின்றோம். இந்த 25 வருட பத்திரிகைத் துறைப் பயணத்தில் பல வெற்றிகள், மகிழ்ச்சி, சவால்கள், தாக்குதல்கள், நஷ்டங்கள், பாதிப்புக்கள் விருதுகள், 'வெட்டுக்கள்' ஆகியவற்றை அனுபவித்துள்ளோம். நிச்சயமாக உலகில் கனடாவைத் தவிர வேறு எந்த நாட்டிலும் இந்த அனுபவங்களைப் பெற்றிருக்க முடியாது என்பதே எம் அனுபவப் பகிர்வாகும்.

இந்தப் பயணத்தில் நாம் வெளியிட்ட வெறும் கறுப்பு - சிவப்பு முதற் பக்கம், எமது 1000 வது இதழ், 1993ம் ஆண்டு வெளிவந்த 'சூரியன்' இதழ் ஆகியவற்றின் முன்பக்கங்கள் காணப்படுகின்றன.

*நன்றி – சத்தியன்*

# உதயன் வெள்ளிவிழா ஞாபகார்த்த உலகளாவிய மாணவர்களுக்கான நாவன்மைப் போட்டி

பல்சுவைக் கலைவிழாக்களை ஆண்டுதோறும் வெற்றிகரமாக நடத்தி, பங்குபெறுவோரையும், பார்வையாளர்களையும், மகிழ்ச்சிப்படுத்தியும் பாராட்டுக்களை வழங்கியும் பெருமையுடைத்த கனடா 'உதயன்' பத்திரிகை நிறுவனம் தனது 25வருட வெள்ளி விழா ஞாபகார்த்த நிகழ்ச்சிகளை இந்த வருடத்தின் ஆரம்பத்திலிருந்து இடைவெளியின்றி நடத்தி வருகின்றது.

இந்த வரிசையில் நாவன்மைப் போட்டியொன்றை உலகளாவிய மாணவர்களுக்காக ஏற்பாடு செய்து, அவற்றுக்கான விண்ணப்பதாரிகளை உலகின் பல நாடுகளிலிருந்தும் பதிவு செய்து கடந்த பெப்ரவரி மாதம் 27ம் 28ம் திகதிகளில் இணையவழியாக நடத்தியது உதயன் பத்திரிகை நிறுவனம்.

தற்போது, உலகை அச்சுறுத்திவரும் 'கொரோனா' என்னும் நோய்த் தொற்றினால் பதறிப்போயுள்ளவர்கள் நிறைந்திருக்கும் உலகில், முதன் முதலாக தமிழர்களின் நிறைந்து வாழும், நாடுகளான இலங்கை, இந்தியாவின் தமிழ்நாடு, மலேசியா, சுவிஸ்லாந்து, கனடா ஆகியவற்றிலிருந்து இருபது வயதுக்கு உட்பட்டவர்களை கவரும் வண்ணம் நல்லதோர் தலைப்பைத் தேர்ந்தெடுத்து இந்த நாவன்மைப் போட்டியை உதயன் பத்திரிகை பிரதம ஆசிரியர் திட்டமிட்டு நடத்தியுள்ளார்.

இந்தவகையில் ஊடகத்துறையில் கனடா உதயன் பத்திரிகை நிறுவனம் ஒரு முத்திரை பதித்துள்ளது என்றே கூற வேண்டும். இணையவழி ஊடாக மேற்படி நாவன்மைப் போட்டியை பார்த்தும் கேட்டும் மகிழந்த பார்வையாளர்கள், பங்கெடுத்த போட்டியாளர்கள் ஆகியோர் மகிழ்ந்து பாராட்டும் வகையிலும் பாராட்டுக்களைப் பெறும் வகையிலும் இரண்டு நாட்களும் சிறப்பான முறையில் எற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

எதிர்காலத்திலும் இத்தகைய போட்டி நிகழ்ச்சிகளை வழங்கி இளைய தலைமுறைத் தமிழ்ச் செல்வங்களை ஊக்குவித்து, எமது இனிய மொழியில் பற்று மிகவைக்கும் வண்ணம் உற்சாகப்படுத்தினார்கள் பலர்.

'எல்லாப் புகழும் இறைவனுக்கே' என்ற கூற்றைப் போல, 'எல்லாப் புகழும் உதயனுக்கே' என்று உச்சரித்தும் நாம் மகிழலாம்.

'கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்' என்னும் வள்ளுப் பெருமானின் வாய்மொழிக்கமைய, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் தோழர் நல்லகண்ணு, மேதகு தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், தந்தை செல்வா, 'நாம் தமிழர' சீமான் ஆகிய பெரியோர்களைப் பற்றி 'நான் விரும்பும் அரசியல் தலைவர்' எனும் தலைப்பில் "சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச் சொல்லை, வெல்லும் சொல் இன்மை அறிந்து' –சொல்லப் போகின்ற சொல்லை விட இன்னொரு சொல் சிறந்ததாக இல்லாதபடி, சொற்களைப் தேர்ந்தெடுத்து பேசிய சுமார் நாற்பது பிள்ளைகளும், வள்ளுவப் பெருந்தகையின் கூற்றுக்கமைய .அவையறிந்து ஆற்றிய சொற்களும், 'சொல்லவல்லான் சோர்விலன் அஞ்சான் அவனை இகல்வெல்லல், யார்க்கும் அரிது' என யார்க்கும் அஞ்சாது பல மாணவ மாணவிகள், எமது தலைவர் பிரபாகரன் அவர்களின் தலைமைத்துவம் பற்றிப் பேசியது என்னை வியப்பில் ஆழ்த்தியது.

'நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி' என மக்கள் திலகம் திரையில் பாடயது போன்று நமது மாணவச் செல்வங்கள், நல்லக்கண்ணு ஐயா அவர்களது அறம் சார்ந்த பண்புகளையும் தலைமைத்துவ மாண்பினையும் உள்வாங்கிப் பேசிய பிள்ளைகளைப் பார்த்த ரோபது எதிர்கால அரசியல் உலகம் நல்ல தலைவர்களை உருவாக்கும் என்ற நம்பிக்கை பிறக்கிறது.



'உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்' என்னும் பாரதியின் வாக்கிற்கமைய நமது பிள்ளைகளின் களங்கமில்லாத உள்ளங்களில் தாய்மொழிப் பற்றையும், நல்ல தலைவர்களின் தலைவர்களின் தியாகத்தையும், சுயநலமற்ற போக்கையும், உணர்ந்தும் அறிந்தும் தேடல் செய்தும், செவிமடுப்பவர்களுக்கு அறியத்தந்த வண்ணம் நிறைவுற்ற இந்த பேச்சரங்கம் "தெள்ளுற்ற தமிழமுதின் சுவை காண வைத்தது என்றால் அது மிகையாகாது.

மேற்படி இரண்டு நாள் பேச்சரங்கில், கலந்து சிறப்பித்த மாணவ மணிகளுக்கும் நடுவர்களாக பணியாற்றியவர்களுக்கும், இந்த நிகழ்ச்சியை தொழில்நுட்ப ரீதியான செவ்வனே சமர்ப்பித்த உதயன் பணியாளர்கள் குழுவிற்கும் ஆதரவு நல்கிய பெருங்குடி மக்களுக்கும், எனது பாராட்டுக்களும் நன்றியும் உரித்தாகட்டும்.

*வீணைமைந்தன்- மொன்றியால்*

**தமிழக முற்போக்கு மக்கள் கட்சி**

**தலைமையகம்**
**40, வடக்கு மாட வீதி, நுங்கம்பாக்கம், சென்னை–600034.**
**: tmmkatchi@gmail.com www.tmmk.website**

நாள் : 27–02–2021

**உதயன் வார இதழுக்கும் திரு. லோகேந்திரலிங்கம் தமிழ்ப் பணிக்கும் வாழ்த்துக்கள்.**

**தமிழக முற்போக்கு மக்கள் கட்சித் தலைவர் சக்திவேல் வாழ்த்துரை**

தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் தமிழர்களுடைய கலையும் கலாச்சாரமும் சிந்தனையும் உயர்ந்த வேண்டும் நிலைத்திருக்க வேண்டும் பாதுகாக்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் கனடாவிலிருந்து வெளிவரும் உதயம் வார இதழ் 25 ஆண்டு காலமாக வந்து கொண்டிருப்பது பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது.

உதயம் வார இதழை வெளிக்கொணர்ந்து தொடர்ந்து கனடாவில் வாழ்ந்து வரும் தமிழர்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடிய இந்த செயல் பாராட்டுக்குரியது. அதுவும் கவிஞர், எழுத்தாளர் , பேச்சாளர் என்ற பரிமாணங்களைக் கொண்ட திரு. லோகேந்திரலிங்கம் அவர்களின் சிறப்புக்கள், அவர் எடுத்துக்கொண்ட வார இதழ் பணிக்கு பெரும் உதவிகரமாக இருந்திருக்கும் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. அதற்கு மேலாக, அவருடைய சிறப்புகள் இதழியல் பணிக்கு மெருகூட்டப்பட்டு இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். கனடா போன்ற நாடுகளில் வசதி குறைவான காலகட்டத்திலிருந்து மிகுந்த இன்னலுக்கிடையில் சிறந்த முறையில் தமிழர் ஒருங்கிணைப்பு பணியை செவ்வனே செய்த இதனுடைய ஆசிரியர் திரு. லோகேந்திரலிங்கம் அவர்களுடைய முயற்சி போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியது. எந்த ஒரு இனம் தன்னுடைய சிந்தனைவாதிகளையும் வரலாற்று ஆசிரியர்களையும் பாதுகாப்பதற்கு உரிய வழிமுறைகளை ஏற்படுத்தி வருகிறதோ அந்த இனம் தான் நிலைத்து இருக்கூடிய ஒரே இனமாக இருக்கும் என்ற அடிப்படையில் திரு. லோகேந்திரலிங்கம் அவர்களின் இதழியல் பணி, தமிழ் தேசிய இனத்தினுடைய உயர்வுக்கும் உன்னதமான நிலையை அடைவதற்கும் இந்த தேசிய இனத்தைச் சார்ந்த மக்களினுடைய பாதுகாப்பிற்கான பணி என்பதை எடுத்துரைத்து இந்த பணி மென்மேலும் சிறக்க வேண்டுமென தமிழக முற்போக்கு மக்கள் கட்சி சார்பாக வாழ்த்துகிறேன்.

க. சக்திவேல்

**க. சக்திவேல்,**
தலைவர்,
தமிழக முற்போக்கு மக்கள் கட்சி.

## வீணாவின் கவிக்கணை

வாழ்வும் சாவும் இரு
துருவங்களடா மனிதா!
வாழ்வில் ஜெயிப்பவன்
சாக நினைப்பதில்லையடா,
தோற்றவனோ என்றும்
வாழ விரும்புவதில்லையடா,
வாழ்க்கை வாழ்வது
கடினமடா!
அதைவிட கடினம் சாவதடா!
சாகும் துணிவே இருக்குமாயின்,
வாழும் துணிவு ஏன் இல்லையடா?
திரும்பத் திரும்ப எழுதுவதால்,
கூடுவது அறிவே தவிர,
அதில் இழக்க ஒன்றுமில்லையடா!
அதுபோல் நீ விழுந்து விழுந்து
எழுகையிலேயே நீ கற்கும்
பாடம் அதிகமடா!
விருந்து இலையில் அறுசுவை போல்,
வாழ்விலும் உள்ளதடா பல சுவைகள்,
எதிர்பார்த்து காத்துக்கிடக்க
ஒன்றுமில்லையடா ,
இங்கு எதிர் பாராமல் நடப்பது தான்
வாழ்க்கையடா!!!!!


மகளிர் தின வாழ்த்துக்கள்!




UTHAYAN உதயன்
Uthayan Canada's No.1 Tamil Newspaper
4062 Ellesmere Road Scarborough, ON M1C 1J2
T: 416.752.1524 F: 416.752.6703
www.uthayannews.ca
VJ-COLOMBO



PRECONSTRUCTION HOUSES & TOWNHOUSES!

RE/MAX®

Four Sixteen Whitby Condos
Universal City Condos 4
Chestnut Hill Developments
Old Colony Estates
Falconcrest Homes
U.C. Homes
Tribute Communities
Hillsborough
Andrin Homes
Cornell Rouge Homes
Forest Hill Homes Ltd.
Anchor Woods
Regal Crest Homes
On the Mark Towns
Anchor Woods By Andrin Homes
Andrin Homes
Angus Glen South Village Homes
Hometown Sharon Village
Victory Green Homes
Blue Sky
Fieldgate Homes
Nao Towns



Bala Logendralingam
REALTOR®
EXECUTIVE Award
100% Award

RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage
Office: 416-287-2222

647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9


தற்பொழுது நடைபெறுகிறது
Since 1986
சங்கர் அன் கோ
மாபெரும் மலிவு விற்பனை!
இறக்குமதியாளர்கள், மொத்த, சில்லறை விற்பனையாளர்கள்
அனைத்து வீட்டு உபயோகப் பொருட்களின் புதிய வரவுகள் !
இல்லத்தரசிகளின் சமையற் கலைக்கான தேர்வுகளுக்கு தன்னிகரற்ற இடம் !
SOWBAGHYA
Preethi
ULTRA
ASIA Kitchen Machines
PREETHI Premier Mixies
ULTRA Wet Grinder
SOWBAGHYA Wet Grinder
PREMIER Wet Grinder
மண் சட்டிகள்
மட் பானைகள்
மண் அடுப்புகள்
மண் கூசாக்கள்
மின் தேங்காய் துருவி
மண்வெட்டிகள்
சுவாமிப் படங்கள்
உணவுப் பொருட்கள்
பசுமையான மரக்கறி மற்றும் பழவகைகள்
பூசைப் பொருட்கள்
ஆலயத்திற்குத் தேவையான வழிபாட்டுப் பொருட்கள்
மங்கல நிகழ்வுகளான திருமணம், குடிமனைபுகுதல்
ஆயுர்வேத மருந்துகள்
விசேட கூந்தல் தைலங்கள்
அனைத்து மூலிகைப் பொருட்கள்....
அப்பச்சட்டி
குளிப்பணியாரச்சட்டி
சில்வர் பானைகள்
எவர் சில்வர் பாத்திரங்கள்
எவர்சில்வர் பேணிகள்
சாப்பாட்டுத் தட்டுகள்
அலுமினி/மண் பானைகள்
அடுக்குச் சட்டிகள்
பிட்டுக் குடம், பானைகள்
தோசைக் கல்லு, உரல்
தேங்காய் துருவிகள்
கத்தி, கரண்டிகள்
இன்னும் பல!
தைப்பொங்கல் புத்தாண்டு. மற்றும் ஆலய உற்சவங்கள். புதிய இல்லங்களின் கிரகப் பிரவேச வைபவங்கள். திருமணங்கள் மற்றும் விசேட வைபவங்கள் ஆகியவற்றுக்கு தேவையான அனைத்துப் பொருட்களும் சங்கர் அன் கோவில் தவறாமல் கிடைக்கும்.
தற்போது தமிழர் புத்தாண்டை முன்னிட்டு. இல்லங்களுக்குத் தேவையான. குறிப்பாக சமையல் அறைக்குத் தேவையான Rice Cookers. Grinding Machines, Rotty Makers and Sumeet, Preeti, Premier Chefmaster Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து விமானங்களின் மூலம் இறக்குமதி செய்யப்பெற்றுள்ளன.
இன்றே தொலைபேசியில் அழைத்து உங்கள் வருகையை உறுதி செய்த பின்னர் முகக் கவசம் அணிந்து செல்லுங்கள்...
தற்போது காலை 8.30 மணி தொடக்கம் இரவு 9.00 மணி வரை திறந்திருக்கின்றது
அனைத்து விதமான பசுமைமிகு பூக்கள்
மல்லிகை மொட்டு
கனகாம்பரம்
தாமரைப் பூ
சாமந்தி, அலரி
ரோஜாப்பூக்கள்
அல்லிப் பூ
கார்னேஷன் பூ
வாழை இலை
மாவிலை, அறுகு
வில்வம், துளசி, அரசிலை
பூச்சரம் எல்லா நாட்களும் கிடைக்கும்!
பிற்புறத்தில் தாராளமான வாகனத் தரிப்பிடமுண்டு
SHANKAR & Co.
2425 Eglinton Avenue East, Unit 6, Scarborough, ON M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916
(Kennedy & Eglinton)
வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்!
OPEN 7 Days a week

## அத்தியாயம் 1




### வந்தியத்தேவனின் கடம்பூர் பயணம்

'ஆதி அந்தம் இல்லாத கால வெள்ளத்தில் கற்பனை ஓடத்தில் ஏறி நம்முடன் சிறிதுநேரம் பிரயாணம் செய்யுமாறு நேயர்களை அழைக்கிறோம். வினாடிக்கு ஒரு நூற்றாண்டு வீதம் எளிதில் கடந்து இன்றைக்கு தொள்ளாயிரத்து எண்பத்திரண்டு ஆண்டுகளிற்கு முந்திய காலத்திற்கு செல்வோமாக!' என்கிறார் கல்கி. இது 1950ல் கல்கி எழுதிய 'பொன்னியின் செல்வன்' நூலின் தொடக்கமாகும்.

இந்தியாவின் தமிழ் நாட்டை அலங்கரிக்கும் ஆனந்த நீரோட்டம் வீர நாராயணன் ஏரி. இன்று வீராணன் ஏரி என்று அழைக்கப்படுகிறது. இது கி.பி 907-953 வரை இராஜாதித்த சோழர் என்னும் சோழ மன்னனால் வெட்டப்பட்டது. இவன் தந்தையான முதலாம் பராந்தக சோழனின் இயற் பெயர் வீரநாராயணன். அதனால் இந்த ஏரி வீரநாராயணன் என்ற பெயர் கொண்டது. இது தமிழ் நாட்டின் கடலுாரில் உள்ள இலால் பேட்டையில் தொடங்கி சேத்தியா தோட்டிலுள்ள பூதங்குடி கிராமத்தில் முடிவு பெற்றது. இந்த ஏரியை மன்னன் தன்னலத்திற்கு மட்டுமன்றி தன் மக்கள் நலத்திற்கும், அதையும் தாண்டி வாழையடி வாழையாகத் தொடர்ந்து வரும் தம் எதிர்கால சந்ததியினரும் பயன் கொள்ளும் விதமாக தொலைநோக்குப் பார்வையில் வெட்டினான். அதனால் இன்று விருட்சமாக அது வியாபித்து நிற்கிறது. விரிந்து பரந்து கிடக்கும் இந்த வீர நாராயண ஏரிக் கரைமீது கண்களை அள்ளிக் கொள்ளும் கம்பீர தோற்றமுடைய வாலிபன் ஒருவன் குதிரை மீது ஏறி பிரயாணம் செய்து கொண்டிருந்தான். இவன் தமிழகத்தில் வீர சரித்திரத்தில் புகழ் பெற்ற வாணர் குலத்தைச் சேர்ந்தவன். வல்லவராயன் வந்தியத்தேவன் என்பது அவன் பெயர். இவன் காஞ்சியிலிருந்து நீண்ட தூரம் பயணம் செய்தமையால் அவனும் அவன் குதிரையும் மிகவும் களைத்திருந்தது. ஆனாலும் வீரநாராயண ஏரியின் கண்கொள்ளாக் காட்சியும் அதன் பெருமையும் அவனை இன்புறச் செய்தது. அதனால் அவன் கண்களை அகல நீளமாகத் திறந்து பார்வையை பரந்து செலுத்தினான்.

வட காவேரியிலிருந்து பிரிந்து வடலாறு வீரநாராயணன் ஏரியில் கலக்கும் காட்சியும், பொங்கி வரும் வெள்ளத்தால் கரைகளைக் காக்க கருவேல மரங்களும், விளா மரங்களும் நட்டு வைத்த விதமும், கரையோர நாணல் அடர்த்தியாக வளர்ந்து அசைந்தாடும் அழகும், அந்த ஏரியின் 74 கணவாய்களின் வழியாகப் பாய்ந்து வரும் தண்ணீர் சுற்றுப் பாகத்தில் நெடிய துாரத்திற்கு நீர் வளத்தை அள்ளிக் கொடுக்கும் விந்தையும், அந்த நீரைப் பயன்படுத்தும் குடிமக்களின் புன்னகையின் பொலிவும், இசையின் இனிமையும் வந்தியத்தேனவனை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்திவிட்டது. 'யானை மேல்' துஞ்சிய தேவர் என்று அழைக்கப்படும் இராஜாதித்தரின் வீரத்தை மட்டுமன்றி, அறிவுத்திறனையும் கண்டு சோழ குலத்து மன்னர்கள் வீரத்தில், அறிவில், ஆற்றலில் யாவற்றிலும் திளைத்தவர்கள் அல்ல என்று எண்ணி மெய் சிலிர்த்தான். காவேரி நதி உற்பத்தியாகும் இடத்தில் இருந்து கடலில் சேரும் இடம் வரை 64 சிவாலயங்களைக் கட்டினான் ஆதித்த சோழன். இவர்கள் பக்தி மயமானவர்கள் கூட. அன்றைய நாள் ஆடித்திங்கள் பதினெட்டாம் நாள் என்பதால் பதினெட்டாம் திருவிழாவிற்கு வந்தவர்கள் குடும்பம் குடும்பமாக ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர் வயோதிபர்கள் என யாவரும் புதிய ஆடைகளை அணிந்து பல அலங்காரங்களுடன் ஏரிக் கரையோரமாக வந்து கொண்டிருந்தார்கள். சிறப்பாக பெண்கள் தங்கள் கூந்தலில் தாழம்பூ, செவ்வந்திப் பூ, மல்லிகை, முல்லை, இருவாட்டி, செண்பகம் முதலிய மலர்களை கொத்துக்கொத்தாக சூடி வலம் வந்தார்கள். மக்கள் யாவரும் ஒன்று கூடி உண்டு இளைப்பாறி இயற்கையோடு இணைந்து இன்புற்றனர். அங்கு நின்ற இன்னும் சிலர் மன்னர்களின் வீரப் புகழையும், மெய்க்க ீர்த்திகளையும் பாடி மகிழ்ந்தனர். இவற்றையெல்லாம் பார்த்தும், இனிய கானங்களைக் கேட்டும் வந்தியத்தேவன் தன் செவிகளுக்கு தேன் வார்த்தது போல் மதிமயங்கி நின்றான். மேலும் கம்பீரத் தோற்றம் கொண்ட வந்தியத்தேவனைப் பார்த்து பெண்கள் குசு குசுத்ததும் அவன் சொர்க்கமே சென்றுவிட்டான்.

சொர்க்கத்தில் நின்றுகொண்டிருந்த வந்தியத்தேவன் தென்மேற்குத் திசை வடலாற்று நீரோட்டத்தில் ஏழெட்டுப் பெரிய ஓடங்கள் ஏரிக் கரை நோக்கி வந்துகொண்டிருப்பதைக் கண்டான். அதில் ஒரு ஓடம் கரைக்கு விரைந்து வந்தது. அதிலுள்ள வேல் ஏந்திய வீரர்கள் அங்கு நின்ற மக்களை விரட்டுகின்றனர். வந்தியத்தேவன் ஏன் இவர்கள் மக்களை விரட்டுகின்றனர் என்ற கேள்விக்கு பதில் காண விரும்பி ஏரிக் கரையில் நின்ற ஒரு பெரியவரை வினவினான். அதற்கு அவர் 'அங்கே பார் பனைமரக் கொடியுடன் வருவதால் அது மாவீரர் பெரிய பழுவேட்டரையர் தான் பனை மரக் கொடியை யார் இங்கு உயர்த்தி வருவார்' என்றார். அப்பொழுது வந்தியத்தேவன், 'வீரப் புகழ் பெற்றது பழுவேடட்டரையர் குலம். அரச குல சிறப்புகள் யாவும் பெற்ற குலம். கொடி போட்டுக் கொள்ளும் உரிமை கொண்ட குலம். பெரியபழுவேட்டரையர் 24 போர்களில் ஈடு பட்டவர். 64 போர்க்காயங்களை தன் உடலில் கொண்டவர். சுந்தரசோழ மகாராஜாவிற்கு அடுத்து சோழ சாம்ராஜ்ஜியத்தில் வலிமையும், மகிமையும் கொண்டவர். இன்று அவர் சோழ நாட்டுத் தனாதிகாரி. தம்பி சின்னப்பழுவேட்டரையரோ தஞ்சைக் கோட்டைக் காவலன். இப்படிப்பட்ட பழுவேட்டரையர் குலம் வந்தவர்களைப் பார்க்க நான் என்ன பாய்க்கியம் செய்தேன்'. என்று எண்ணிக் குதுர்கலித்தான். அக்கணமே சோழநாட்டு இளவரசன் ஆதித்த கரிகாலன் தன் நண்பன் சுந்தரசோழனின் மூத்த மகன். பொன்னியின் செல்வனின் அண்ணனும் அவனே! அவன் கூறிய அந்தச் செய்தி ஞாபகத்திற்கு வந்தது. 'வந்தியத்தேவா நீ சுத்த வீரன் நல்ல அறிவாளி, அதனால் இந்த மாபெரும் பொறுப்பை நான் உன்னிடம் ஒப்படைக்கிறேன். நான் கொடுக்கும் இரு ஓலைகளில் ஒன்றை என் தந்தையிடமும், மற்றைய ஒன்றை என் சகோதரி இளையபிராட்டியிடமும் ஒப்படைக்க வேண்டும் நான் அனுப்பும் ஓலை பற்றி யாருக்கும் தெரியக் கூடாது நீ பயணம் செய்யும் வேளையில் யாரிடமும் சண்டை செய்யக் கூடாது, வலுச்சண்டை செய்ய வருபவர்களிடம் இருந்து விலகிவிடு முக்கியமாக பழுவேட்டரையரிடமும், என் சிறிய தந்தை மதுராந்தகரிடமும் மிக்க ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்' என ஆதித்தகரிகாலன் காஞ்சி நகரின் புதிய பொன் மாளிகையில் தன்னிடம் அந்தரங்கமாகச் சொன்ன செய்தி அவன் காதுகளில் ஒலித்தது சோழ ராஜ்ஜியத்தின் பட்டத்திற்குரிய வட திசைச் சைதன்யத்தின் மகா தண்ட நாயகருமான ஆதித்தகரிகாலன் எனக்கு நடந்துகொள்ள வேண்டிய விதங்களைப் பற்றியும் படித்துப் படித்துக் கூறியுள்ளார். இவையெல்லாம் அவன் எண்ணங்களில் சுழலவே, பழுவேட்டரையரைப் பார்த்து மகிழும் ஆவலை மூட்டை கட்டிவிட்டு, ஏரிக்கரையிலிருந்து கீழ் நோக்கி தென்திசை சென்ற பாதையில் குதிரையைச் செலுத்தினான். அப்பொழுது அவன் எண்ண அலைகள் அவனிடம் முட்டி மோதின.




*தொடரும்...*

---

Jenita.Jaffna@gmail.com
**தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை**
**மாதினி நிமலன**



# பங்காரு அடிகளாரின் 80வது ஐயந்தி தினம்




3-3-2021 புதன்கிழமை அன்னையின் ஜனன தினத் தையொட்டி ஆதிபராசக்தி குருமன்றத்தில் அமைதியான முறையில் சக்திகளின் தரிசனம் நடைபெற்று, 7-03-2021 ஞாயிற்றுக்கிழமை அம்மாவினர் தரிசனம் நடைபெறும். கோவிட் -19 காரணமாக அமைதியான முறையில் அன்னைக்கு வாழ்த்து தெரிவிக்கப்படும்.

சித்தர் பெருமக்கள் தங்கி வடிவங்களுக்குச் சக்தியைச் தருகின்ற ஆலயங்கள் அனைத்தும் சக்தி வாய்தவையாக இருக்கக் காணலாம். எல்லா விடயங்களிலும் இருக்கின்ற பரம்பொருள் ஒன்றுதான் என்றால் ஒவ்வொரு இடமாக ஓடி அலைவதன் நோக்கம் என்ன என்று தோன்றலாம். காசியில் விசாலாட்சி என்றும் காஞ்சியில் காமாட்சி. மதுரையில் மீனாட்சி சமயபுரத்தில் மாரியம்மன், மருவத்தூரில் ஆதிபராசக்தி என்றும் பற்பல பெயர்களைத் தாங்கி இருப்பதால் பல்வேறு தெய்வங்கள் உள்ளன என்று அறியாமை உடையவர்கள் கூறுகின்றார்கள் எங்கு சென்றாலும் நடப்பவை மூலம்பொருள் ஒன்றேதான். இச்சித்தர் பெருமக்கள் திடிரென்று ஏதாவது ஒரு கோவிலுக்குள் புகுந்து அந்த விக்கிரகத்தின் மூலம் தம் சக்தியை வெளிப்படுத்தத் தொடங்கியவுடன் அக்கோவில் பிரபலம் அடைகின்றது.






Contact Siva
at
416-706-8160



Flex Institute நிறுவனத்துடன் சேர்ந்து உங்கள்
கனடா செல்லும் கனவினை நனவாக்குங்கள்!

நீங்கள் கனடாவுக்குச் செல்வதைப் பற்றிய கவலையா? உங்கள் கனவை நாம் நனவாக்குகின்றோம். இலங்கையின் முன்னணி கனேடிய விசா ஆலோசனை நிறுவனங்களில் ஒன்றான நற்பெயரை Flex Institute நிறுவனம் கொண்டுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் கனடா செல்லும் விண்ணப்பதாரிகளுக்கு எமது சிறந்த சேவையினை வழங்கி அதன் மூலம் அவர்களின் விசா விண்ணப்பங்களின் வெற்றியை உறுதிப்படுத்துகிறோம். நாம் முக்கியமாக எமது கனடிய விண்ணப்ப நிலையத்தின் மூலம் **Student Visa, a Student- Dependent, Open Work Permit, Visitor Visa, Visa Refusals, Family Visit Visa, Business Visit, and Super Visa Facilities**. வழங்குகிறோம். இதற்கென்றே எமது அனுபவமிக்க தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்கள் உங்களுக்கான உதவிகளை செய்வதற்கு காத்திருக்கிறார்கள். எந்த விதமான தங்குதடையோ, தாமதமோ இன்றி உங்களுக்கான விசாவினை கூடிய விரைவில் பெற்றுத் தருவதில் உத்தரவாதமளிக்கின்றோம். இதற்கென்றே அமைந்ததுதான் எமது On The Spot Consultation சேவை. எமது வாடிக்கயாளர்களில் பலர் மாணவர் முதல் பிற பிரிவுகள் வரை அவர்களது விசா விண்ணப்பங்களை வெற்றிகரமாகப் பெற்றுள்ளனர். **University of Canada, West Algoma University, Fanshawege College, Centennial College, Seneca College, Georgian College, Cambrian College, ST. Laurence College, University of Saskatchewan, Lakehead University**. போன்ற கனடாவிலுள்ள முன்னணி பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் கல்வி கற்பதற்காக விசாவினைப் பெற்றுக் கொள்வதற்கான ஆலோசனைகளை நேருக்கு நேராக வழங்குவதுடன் விசாவினை பெற்றுத்தர உதவுவதுடன் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் கல்வி மற்றும் நிதி பின்னணி குறித்து கவனமாக அவதானித்து அவர்களின் விருப்பத்திற்கேற்ப கல்லூரிகளையும், பல்கலைக் கழகங்களையும் தேர்வு செய்ய நாம் உதவத் தயாராக உள்ளோம். எமது Flex Institute வாடிக்கையாளர், மாணவர்களின் மறுக்கப்பட்ட விசாக்களை பெற்றுத் தந்து அதன் மூலம் பலரது நன்மதிப்பையும் பெற்றுள்ளோம்.

ஆலோசனைகளை தவிர IELTS பயிற்சி நிலையம் ஒன்றினை அமைத்து ஆங்கில மொழியில் பரீட்சை **IELTS, Duolingo English Test, TOFEL and PTE (Academic)** பயிற்சி மற்றும் உதவிகளை செய்து தருகிறோம். ஒரு அனுபவமிக்க விசா நிறுவனமாக எம்மை நாம் உத்தரவாதம் அளிப்பதுடன் உங்கள் விசாவிற்கும் உத்தரவாதம் அளித்து உங்கள் கனடிய கனவு நனவாகும். என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

- இலவச ஆலோசனை
- புலமைப்பரிசில்கள்
- 1000க்கும் மேற்பட்ட கல்வித்திட்டங்கள்

Student Visa, Student Dependent, Business Visa, Family Visit Visa, Super Visa requirements சம்பந்தமான ஆலோசனைகள் வழங்கப்படும்.



Are You Looking For
Canada

- Student Visa
- Visit Visa
- Rejected visa
- Business visa
- Super Visa
- Tourist Visa

Call us on: 0777 761 346

flex Institute
Step Towards a Bright Future
6A, Parakumba Place, Colombo 06.
Hotline: 0777 761346
E-mail: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk YouTube
10 வருட கால நம்பிக்கையான சேவை

இலங்கையில் இருந்து
கனடா வருவதற்கான அனைத்து
வேலைகளும் நம்பிக்கையோடு
விரைவாக செய்து தருபவர்கள்...

Canada VISA

STUDENT VISA STUDY, WORK & SETTLE, SPOUSE, OPEN WORK PERMIT.

- பாடநெறி கட்டணம் ரூ.350,000 இருந்து
- சகல வசதிகளும் செய்து தரப்படும்
- O/L உடன் விண்ணப்பிக்கலாம்
- Without IELTS

VISIT VISA
பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா செல்வதற்கான சகல ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

REFUSED VISA
உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.

வயதெல்லை இன்றி VISA கிடைப்பதற்கான அனைத்தும் செய்து தரப்படும்.

VJ-COLOMBO

Congratulations!
Successful visa holders through our company for the year 2020, 2021



STUDENT VISA MANOJAN RAVIDU
STUDENT VISA VIKMA SAJANI
STUDENT VISA HARSHAN
STUDENT VISA SHACHILA THANUTH
STUDENT VISA SUMITHAN
OPEN WORK PERMIT, STUDENT VISA Mr. & Mrs. Navaneethan
STUDENT VISA INDEEWARA!
STUDENT VISA KETHESWARANS
STUDENT VISA NIRMANEE

# ஈழத்துத் திருக்கோவில்கள் 936



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## தம்பலகமம், ஆதிகோணநாயகர் கோயில்
### திருகோணமலை

"ஏகநாயகனை இமயவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வணற் கருளிப்
போன்னொடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநாயகனை மிகுதிரு வீழி
மிழலை விண்ணிழிசெழுங் கோயில்
யோகநாயகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே."

கந்தளாய் திருக்குளத்து வேள்வி செய்யும்பொழுது பல தொன்மையான மரபுகள் அன்றுதொட்டு இன்றுவரை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. திருக்குளத்து வேள்வியை அனுமன், கருடன் ஆகியோரது துணையோடு செய்யத் தொடங்குவதான ஐதீகமும் இங்கு காணப்படுகின்றது. வேள்வியன்று பொங்கல் சிறப்பாகநடைபெறும். அத்தினத்தில் காட்டுக்குச் சென்று மாடுபிடித்துப் பால்கறந்து, பொங்கல் செய்யவேண்டும் என்பதே விதியாக வகுக்கப்பட்டுள்ளது. மறிகாறர் எனப்படுவோர், மாடு பிடிப்பதற்கு உரிமையுடையவர்களாக விளங்குகின்றனர். மாடுபிடிக்கச்செல்லும் தினத்தன்று, கட்டாடியார் என்ற பூசாரியார் கயிறெடுத்துக் கொடுக்க, மந்திரங்கள் பல சொல்லி, வேண்டுதல்கள் பல செய்து, காட்டிற்குச் சென்று, குளுமாடுகளைப்பிடித்துப் பால் எடுத்துப் பொங்கலிடுவார்கள். இத்தினத்திலே ஆயிரம் வெற்றிலை, ஆயிரம் பாக்கு, ஆயிரம் பழம், ஆயிரம் பூ என்பனவற்றைப் பயபக்தியோடு படைத்து, மடை போடுவார்கள். "நன்னயஞ்சேர் பாகிலையும், பாலடிசில் திருவிளக்கும், நல்ல தூபம் சொன்னபடியே கொடுப்பர்" என்ற பாடல் வரிகள் திருக்குளத்து வேள்வியின் சிறப்பை எடுத்தியம்புவதாகக் காணப்படுகின்றது. எத்தனை இன்னல்கள் வந்தபோதிலும் வருடாவருடம் இவ்விழாவை நடத்தி வருகின்றனர்.

இவை தவிர சிறுதெய்வ வழிபாட்டோடு தொடர்புபட்ட வேறு சில மரபுகளையும் இவ்வாலயம் பின்பற்றிவருகின்றது. இந்தவகையிலே சுவாதிஅம்மன் எனக் குறிப்பிடப்படும் மூர்க்கமாதா என்ற தெய்வத்திற்குச் செய்யும் ஆலடி வேள்வியும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இவ்வாறே பத்தினி அம்மனுக்குச் செய்யும் ஐயனார் வேள்வி, அண்ணமார் வேள்வி எனப் பல்வேறுபட்ட வேள்விகள் இங்கு நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. இந்த வேள்வியின்போது பலவிதமான வரலாற்றுக் காவியங்களைப் பாடும் வழக்கமும் காணப்படுகின்றது. ஆகமமுறை தழுவிய கோவிலாக ஆதிகோணநாயகர் ஆலயம் காணப்பட்டபோதிலும், கிராமிய வழிபாட்டு மரபுகளும் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது.


தம்பலகமம் ஆதிகோணநாயகர் ஆலயத் திருப்பணிகள் பலவும், காலத்திற்குக் காலம் நடைபெற்று வருகின்றன. தம்பலகமம் ஆதிகோணநாயகர் ஆலய வளர்ச்சியில் பலருடைய பங்களிப்புக் காணப்படுகின்றது. இவ்வாலயம் பொறுப்புவாய்ந்த தர்மகர்த்தா சபையினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. அத்தோடு கங்காணம், அடப்பன், வயிராவி, காரியப்பர், புலவன், குருக்கள் எனப் பல பணியாளர்களைக் கொண்ட அறங்காவல் நிலையமாக இவ்வாலயம் விளங்கி, சிறப்பான வளர்ச்சியைக் கண்டுள்ளது. இவ்வாறு பணியாற்றுவோருக்கு மானியமாக, வயல்நிலங்கள் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அடப்பன், கங்காணம் ஆகிய சொற்கள் வேறு மதத்தவர்களிடமும் காணப்படுகின்றது. வெருகலம்பதி சித்திரவேலாயுதர் சுவாமி கோயில் நிர்வாகத்திலும், இப்பெயர் கொண்ட சொற்பிரயோகம் காணப்படுகின்றது. குளக்கோட்டு மன்னனனால் மானியமாக வழங்கப்பட்ட நிலப்பகுதிகள் பலவும், பராமரிப்பின்றிக் காடுகளாக மாறியுள்ளன. பிற்காலத்தில் இந்நிலங்கள் ஆட்சியாளரால் கைப்பற்றப்பட்டு, ஆட்சியாளரின் குடியேற்ற நிலங்களாக மாற்றப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஈழத்தை ஆண்ட தமிழ் மன்னர்கள், அவர்கள் செய்த திருப்பணிகள், அவர்கள் வாழ்ந்த காலம், ஆட்சி செய்த நிலப்பரப்பு, என்பன போன்ற முக்கியமான தகவல்களை அறிந்து கொள்வதற்கு இவ்வாறான ஆலயங்களின் வரலாறுகள் பெரிதும் உதவுகின்றன. எனினும், அக்காலத்திலே வாழ்ந்தோர் தம்மையும், தம்மைச் சார்ந்தோர் புகழ் பாடவும் எடுத்துக் கொண்ட முயற்சியில், நாட்டின் வரலாற்றையோ அன்றி, ஆலய வரலாறுகளையோ தெளிவாக எழுதி வைக்க முன்வரவில்லை என்பதை, ஆதிகோணநாயகர் ஆலய வரலாற்றோடு நிலவும் பல்வேறுவிதமான கருத்துக்கள் தெளிவாக்கியுள்ளன. இவ்வாறான வரலாறுகளைக் கற்றறிந்தோர் காய்தல், உவத்தலின்றி ஆய்வு செய்தால், தமிழர் தாயக பூமியின் ஆதிவரலாறு, தமிழர்களின் சமூக வரலாறு என்பன தெள்ளெனப் புலப்பட வாய்ப்புண்டு.

"வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி."

*வளரும்...*

SHIVA SAI DURGA ASTROLOGICAL CENTER
Pandit: Kumara swamy






Most Powerful Spiritual Healer
We can Handle any Problem
25 வருடங்கள் அனுபவமுள்ள மற்றும் 8 தலைமுறைகளாக ஜோதிடம் பார்பவர்
உலகத்தில் சூரிய சந்திர நவக்கிரக மகிமையினாலே
இன்ப துன்பங்கள், நன்மை தீமை பற்றி விபரம் குறுவார்
Remove Black Magic,Witchcraft, Obeya,Evil Spirits
Bad Luck & Jadoo & Give 100%,Life Long Protection
கை பார்த்து. முகம் பார்த்து அருள்வாக்கு சொல்லப்படும். Photo பார்த்து
ஜாதகம் பார்த்து, குறிப்புப் பார்த்து ஆரோக்கியம், மனநிம்மதி, லக்சுமி கடாட்சம் கிடைக்கவும்,
இராசி, நட்சத்திரம் பார்த்து நடந்தது, நடப்பது, நடக்கப்போவது பற்றிச் சொல்லப்படும்.
செய்வினை கோளாறு, பேய்பிசாசு தொந்தரவா, எதிரிகள் தொந்தரவா, கண் திருஸ்டி, நாகதோசம், காதல் விவகாரங்கள், தொழில், மனை அபிவிருத்தி, வாகனப் பொருத்தம், காதலர் ஒற்றுமை போன்றவற்றிற்கும், வேறு பிரச்சனைகளுக்கும் உடனடியாக தீர்வு சொல்லப்படும்
எந்தப் பிரச்னையாக இருந்தாலும் 9 நாட்களில் தீர்வு காண்பார்
Are you depressed & Lonely? All Religions welcome. 100% Guaranteed Result
Call for Appointments/Walk ins Welcomed 647-766-9775
2607 Eglinton Ave E Scarborough, M1K 2S2,
UPSTAIRS ERRA MARKET, EGLINTON & BRIMLEY

- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்



# #36 சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்



தமிழ்ச் சினிமாவின் காலத்தை சி.மு, சி.பி அதாவது சிவாஜிக்கு முன், சிவாஜிக்குப் பின் என்று பிரித்துக் கொள்வோம்! சிவாஜி ஐயா 1952இல் அறிமுகமாகிய பின் ஆண்டுக்கு 40 அல்லது 45 திரைப்படங்கள் தமிழில் தயாராகி வெளியாகும்போது அவற்றுள் ஆண்டுக்கு எட்டு அல்லது ஒன்பது படங்கள் சிவாஜி நடித்த படங்களாகும். தமிழில் தயாராகும் படங்களில் ஐந்தில் ஒரு பங்கு அதாவது 20 விழுக்காடு சிவாஜி படங்களாகும். சிவாஜி அவர்களது ஆரம்ப காலப் பதினைந்து ஆண்டு காலகட்டம் சினிமா தொழிலை நம்பி முதலீடு செய்தவர்களது பொற்காலமாகும்!

அதாவது, தமிழ் பட உலகின் வியாபாரத்தில் மேலே குறிப்பிட்டதுபோல் ஐந்தில் ஒரு பங்கு சிவாஜியை நம்பியே நடந்து வந்தது. அக்கால கட்டத்தில் நடிகர் திலகம் பங்கேற்று நடித்த படங்களில் பெரும்பாலானவை 100 நாட்களை கடந்தவை என்பதும் வெள்ளிவிழாக் கொண்டாடியவை என்பதும் தமிழ் சினிமா வரலாற்றைப் புரட்டினால் தெரியவரும். ஆகவே ஒரு காலகட்டத்தில் சிவாஜி அவர்களை தமிழ்சினிமாவின் பொன் முட்டையிடும் வாத்து என்று குறிப்பிடலாம். தானும் வாழ்ந்து தன்னை நம்பி முதலீடு செய்பவர்களையும் வாழவைத்த கற்பகவிருட்சம் சிவாஜி அவர்கள் ஆவார்!

1952ல் ஆரம்பித்து 1964 இற்கிடையில் 13 ஆண்டுகளில் நூறு படங்களில் நடித்து முடித்து விட்டார். கதாநாயகனாகவும் சில படங்களில் எதிர்மறை பாத்திரங்களில் நடித்த ஒருவரின் இமாலய சாதனை இது. 1964 சிவாஜி ஐயாவும், நடிகையர் திலகம் சாவித்திரியும் இணைந்து இயக்குனர் - வசனகர்த்தா, கலைஞர் ஏபி நாகராஜனால் தயாரிக்கப்பட்டு வெளிவந்தது நடிகர் திலகத்தின் நூறாவது படமான "நவராத்திரி".

நடிகர் திலகத்திற்கும், நடிகையர் திலகத்திற்கும் மிகவும் புகழ் சேர்த்த வெற்றிப்படமாகும்!

நவராத்திரி படத்தில்.... முற்றிலும் மாறுபட்ட வேடமாக ஒன்பது பாத்திரங்களில் நடித்து சாதனை படைத்தார்! அவர் ஒருவராலேயே நவரசங்களையும் வெளிப்படுத்தி நடிக்க முடியும் என நிரூபித்தார். எந்த காலத்து ரசிகர்களும் ரசித்து பார்த்து மெய்மறக்கும் வகையில் அமைந்த ஒப்பற்ற நடிப்பு காவியம். பிரான்ஸ் அரசு குறிப்பாக நடிகர் திலகத்தின் "நவராத்திரி" படத்தை மையமாக வைத்துதான் அவருக்கு பின்னாளில் "செவாலியே விருது" வழங்கியது!

1964 ஆண்டில் வெளியான நடிகர் திலகத்தின் சொந்தப் படமான "புதிய பறவை", பத்மினி பிக்சர்ஸின் "கர்ணன்" பீம்சிங் இயக்கத்தில் "பச்சை விளக்கு" பி எஸ் வீரப்பா வின் "ஆண்டவன் கட்டளை" கே எஸ் கோபாலகிருஷ்ணனின் "கை கொடுத்த தெய்வம்" மற்றும் "முரடன் முத்து" என எல்லாமே வெற்றிப் படங்களாகும்.



எட, நம்ம சிவாஜி ஐயா முதல் 13 வருடங்களுக்கிடையில் யாருமே சாதிக்காமல் 100 படங்கள் நடித்து விட்டாரே என மகிழ்ந்து, 100வது படமான "நவராத்திரி" விழாவை எப்படி கொண்டாடுவது என திட்டமிட்டோம்! ஆண்டுக்குச் சராசரி எட்டு படங்கள் வீதம் நடித்து பதிமூன்று ஆண்டுகளில் பல்வேறு கதாபாத்திரங்களில் தனது திறமையை நிரூபித்தது மாத்திரமல்ல இந்திய எல்லை கடந்து ஆசிய - ஆப்பிரிக்க - அமெரிக்கா வரை அழைக்கப்பட்டு இந்திய சினிமாவுக்கு புகழும் பெருமையும் பெற்றுத்தந்த நடிகர் திலகம் அவர்களை கொண்டாட வேண்டுமல்லவா!

1964இல் நான் 17 வயது பள்ளி மாணவன். என்னால் என்ன செய்ய முடியும்? நண்பர்கள் சிலரைச் சேர்த்துக் கொண்டு எங்கள் வீட்டுக்கு அருகில் இருந்த "யாழ் தியேட்டர்" சினிமா கொட்டகை முதலாளியையும் மேனேஜரையும் சந்திப்பது என முடிவாயிற்று. "நடிகர் திலகம்" அவர்களின் 100வது படமான "நவராத்திரி" காங்கேசன்துறை யாழ் தியேட்டரில் வெளியிடப்படும் நாளில் தியேட்டர் முகப்பில் காட்சிக்கு வைத்த கட்டவுட்டை மேலும் அலங்கரிப்பது என்றும், "சிவாஜி" புகழ் பாடும் துண்டுப்பிரசுரம் ஒன்றை மக்களுக்கு வினியோகிப்பது என்றும் நண்பர்கள் நாங்கள் முடிவு செய்தோம். தியேட்டர் முதலாளி எங்களுக்கு மிகவும் அறிமுகமானவர். இலங்கையின் புகழ்பெற்ற கல்விமான் ஹண்டி பேரின்பநாயகம் அவர்களின் சகோதரர் திரு ஹண்டி ராஜகாரியார் ஆவார்.. மனேஜர் சுருவிலூர் திரு தளையசிங்கம் அவர்களும் எங்கள் குடும்பத்திற்கு வேண்டியவர். அவர்கள் இருவரினதும் சம்மதம் பெற்று எங்களூரில் ஒலிபெருக்கியுடன் மணவறைச் சோடினை செய்யும் தோழர் பாஸ்கரன் - தையிட்டி சத்தியநாதன் - நவீனன் (தற்போது லண்டனில் வசிக்கிறார்) மேலும் இரு சிவாஜி ரசிகர்கள் துணையுடன் தெல்லிப்பளை குகன் அச்சகத்தில் சிவாஜி புகழ் பாடும் வசனகவிதை என்னால் எழுதப்பெற்று 1000 பிரதிகள் அச்சாகின! மாவிலைத் தோரணம், வாழை மரம், செவ்விளநீர் குலைகளுடன் ஜிகினா துண்டுகளும் சேர்த்து அழகான அலங்கார வளைவுகள் தயாராகின. எங்கள் வீட்டு திருமண வைபவம் போன்று "நவராத்திரி" வெளியீட்டை கொண்டாடியதை இப்போது நினைத்தாலும் வேடிக்கையாக உள்ளது! இச்சம்பவத்தை நினைவூட்டுவது போல் என்னுடைய 65வது வயதில் 32 ஆண்டுகளுக்குப் பின் இலங்கையில் எங்கள் ஊர் சென்ற போது ஒரு அன்பர் என்னை அடையாளம் கண்டு "என்னை நினைவிருக்கிறதா? சிவாஜி படமான "நவராத்திரி" வெளியிடும்போது சோடினை செய்தோமே! என நினைவூட்டிய போது அவர் கைகளை எடுத்து கண்களில் ஒற்றிக் கொண்டேன்.. மறக்க முடியாத நினைவு அது!

அட, நமது சிவாஜி அவர்கள் 100 படங்கள் நடித்து முடித்து விட்டாரே!.. ஆஹா... எவ்வளவு அற்புதமான பாத்திரப் படைப்புகள்... யாம் பெற்ற இன்பம் பெறுக அனைவரும் என்று "நவராத்திரி" திரைப்பட வெளியீட்டை பிரமாதப்படுத்தி தியேட்டரை கலகலப்பாக்கி விட்டோம். சுயநலமில்லாத தூய அன்பை சிவாஜியிடத்தும், நடிப்பு கலையையும், திரைப்படத் துறையையும் நேசிப்பவர்கள் தான் இப்படியான காரியங்களில் ஈடுபடமுடியும். பாலாபிஷேகம் - தீபாராதனை செய்வதில் எங்களுக்கு உடன்பாடில்லை!

இனிவரும் இதழ்களில் நடிகர் திலகம் அவர்களைப் பற்றி அவருடன் மிக நெருக்கமாக பணிபுரிந்தும், நட்புரிமை பாராட்டியும் வருகின்ற கலைஞர்கள், சக நடிகர்கள், இயக்குனர்கள் கூறியவற்றை பார்ப்போம். அந்த வரிசையில் நடிகர் திலகம் அவர்களுடன் மிக நெருக்கமானவர் "பராசக்தி" காலத்திலிருந்தே அவருடன் இணைந்து பல படங்களில் குணச்சித்திர பாத்திரமேற்று நடித்த வரும் சிவாஜி அவர்களை வைத்து "வடிவுக்கு வளைகாப்பு" "மக்களைப் பெற்ற மகராசி" ஆகிய படங்களை கலைஞர் ஏபி நாகராஜனுடன் இணைந்து தயாரித்தவருமான "கலைமாமணி" விகே ராமசாமி கூறியவற்றை இங்கு பதிவு செய்வோம்.



"நாட்டுக்கு ஒரு நல்ல தலைவன் கிடைப்பது போல் சினிமா உலகிற்கு ஒரு நல்ல கலைஞன் கிடைத்தார்", 1952ஆம் வருடம், அந்த ஆண்டு கலையுலகிற்கு ஒரு பொன்னான ஆண்டு! அவர் நடித்த முதல் படம் "பராசக்தி" அந்த பராசக்தியின் அருள் முதல் படத்திலேயே கிடைத்தது. 47 ஆண்டுகளாக இன்று வரை நிலைத்து நின்ற பெருமை நடிகர் திலகத்திற்கு தான் கிடைத்தது. 1999 வரை நீடிக்கிறதென்றால் அவர் நடிப்பு திறமையை பொறுமையும் எதையும் ஒளிவு மறைவு இல்லாமல் பேசும் குணமும் அவர் செய்கின்ற தர்மமும் அவரைப் பெற்ற பெற்றோர்கள் செய்த புண்ணியமும் நடிகர் திலகத்தின் பூர்வ ஜென்ம புண்ணியமும் அவரை இந்த நிலைக்கு உயர்த்தியது என்றால் மிகையாகாது!

நடிப்பு அவருடைய உயிர் மூச்சு. நடிப்பதற்காகப் படப்பிடிப்பு தளத்திற்கு வந்துவிட்டால் அந்த இடத்தைத் தெய்வம் இருக்கும் கலைக்கோயிலாகவே மதித்தார். படப்பிடிப்புக்கு ஒப்பனையோடு படமெடுக்கும் புளோருக்குள் நுழைந்து படப்பிடிப்பை நிறுத்திய பிற்பாடுதான் வெளியில் வருவார். எக்காரணத்தைக் கொண்டும் முடியும் வரை வெளியே வர மாட்டார். இது போன்ற முறையை வேறு எந்த நடிகரிடத்தும் காணக்கிடைக்காத தொழில் பக்தியாகும்!

தான் நடிக்கும் காட்சி முடிந்து அடுத்தவர்கள் காட்சி நடிக்கும் போதும் கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருப்பார். அதில் ஏதாவது குற்றம் குறை இருந்தால் உடனே எழுந்து வந்து குறைகளை எடுத்துச் சொல்லி நிவர்த்தி பண்ணும் ஆற்றலும் திறமையும் அவருக்கு நிறையவே இருந்தது. எந்த காட்சியை எடுத்தாலும் அதில் ஒன்றி விடுவார். இவர் நடிக்கும் போது உடன் நடிப்பவர்கள் படத்தை இயக்குகின்ற இயக்குனர்கள், ஒளிப்பதிவாளர்கள் அத்தனைபேரும் இவர் நடிப்பை, வசனம் பேசும் முறையைப் பார்த்து பிரம்மிப்பார்கள்!

புளோரே பின் டிராப் சைலன்ஸ் ஆக இருக்கும். இப்படி அவர் நடிக்கும் காட்சிகள் கண்கொள்ளா காட்சிகள் ஆகவே அமையும். அவர் நடிக்க வந்த காலம் தான் சினிமாவுக்கு ஒரு பொற்காலம். தினமும் ஸ்டூடியோக்கள் திருவிழாக்கோலம் கொண்டிருந்தது. இவர் நடித்த அத்தனை படங்களும் பெரும் புகழும் செல்வமும் கொட்டிக் கொடுத்து கலை உலகமே செல்வச் செழிப்போடு கொடிகட்டிப் பறந்தது. இவர் நடித்த படங்களை பாமரனிலிருந்து படித்தவன் வரை பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போன காலம். அந்தப் படங்களை விஞ்ஞானத்தின் உதவியால் இன்றும் டிவியில் போட்டு போட்டு பார்த்து பரவசம் கொள்கிறார்கள். இளைஞர்களிடம் இப்போது ஒரு மாற்றம் தெரிகிறது. இவர் நடித்த "வீரபாண்டிய கட்டபொம்மனை" பார்த்துவிட்டு இப்படியும் ஒரு நடிப்பு வசனம் இதைப்போல இனி எவராலும் நடிக்க முடியாது பேசவும் முடியாது என்று என்னிடம் நேரிலும் தொலைபேசியிலும் பல இளைஞர்கள் சொல்லக் கேட்டு என் மனம் நடிகர் திலகத்தின் நடிப்பு எந்த தலைமுறையையும் ஈர்க்கும் சக்திவாய்ந்தது என்று எண்ணி எண்ணி ஆனந்தக் கண்ணீரால் பூரித்துப் போகிறேன்!

அடுத்த இதழில்... இயக்குனர் - தயாரிப்பாளர் "முக்தா" சீனிவாசன் சிவாஜி பற்றி என்ன சொன்னார்..?

காட்சிகள்.. நினைவுகள் விரியும்.
வீணை மைந்தன்.

# இவ்வார ராசிபலன்

**05-03-2021 வெள்ளி தொடக்கம் 11-03-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** சினமும், குணமும் சீராக அமையக்கூடிய சிறப்பான வாரம். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். சொத்து சேர்க்கை உண்டு. உழைப்பில் கவனம் தேவை. கோரிக்கை நிறைவேறும். மனை வாங்கும் யோகம் உண்டு. பொருளாதார வளம் மேம்படும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: தேவி செல்வநாயகி, அதிர்ஷ்ட எண் 1,8,2,5
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,A




**ரிஷபம்:** வேண்டாத நபர்களை விலக்கி வைக்க வேண்டிய விவேகமான வாரம். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். ஜீவராசிகளுக்கு உணவு அளித்தால் யோக பலன் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பிரம்ம சக்தி அம்மன், அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M




**மிதுனம்:** புதிய பாதையில் அடியெடுத்து வைக்கக்கூடிய அற்புதமான வாரம். புதிய வாய்ப்புகள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெருமைகள் சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பணத் தேவை அதிகரிக்கும். எதிர்பார்த்த வி'யம் தாமதமாகும். புகழ் கூடும்.. அந்தஸ்து உயரும். உறவினர் ஒன்றுமை ஏற்படும். பொறுப்புகள் சிறப்பு சேர்க்கும். தனவரவு உண்டு. மனகசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஜலகண்டேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 8,2,5,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y, D




**கடகம்:** தட்டிப்போன வாய்ப்புகள் தானாகக் கிடைக்கக்கூடிய நல்ல வாரம். முகப் பொலிவு கூடும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். சுறுசுறுப்பு பெருகும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாய்வழி உறவில் கவனம் தேவை. பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். அலைபேசியால் அலைச்சல் அதிகமாகும். கலவரமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். மத வழிபாடு மாற்றம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 7,4,5,2
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,N




**சிம்மம்:** வயதுக்குத் தகுந்த வளம் கிடைக்கக்கூடிய நலமான வாரம். தனவரவு பெருகும். விபரீத எண்ணம் விலகும். பேச்சில் நிதானம் தேவை. புதிய நட்பு உருவாகும். பழைய கடன் தீரும். உதவும் குணம் அதிகரிக்கும். சாதகமான சூழ்நிலைகள் உருவாகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். உடல் நிலையில் கவனம் தேவை. உறவினர் வருகை உண்டு. வணிகத் தொழில் வளம் கூடும். பழைய பாக்கி வசூலாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மருதகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,2,1,6
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,S




**கன்னி:** வழக்கத்திற்கு அதிகமான வரவுகள் கிடைக்கக்கூடிய நல்ல வாரம். உற்சாகம் அலை மோதும். பணக்கட்டுப்பாடு அவசியம். மாற்றத்தை விரும்புவீர்கள். தோற்றம் தெளிவு கூடும். ஏற்றங்கள் அமையும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும். உத்தியோக இடமாற்றம் உண்டு. ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கைலாசநாதப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 3,0,7,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,L




**துலாம்:** உறவுப் பெண்களால் உதவி கிடைக்கக்கூடிய உத்தமமான வாரம். தேக ஆரோக்கியம் கூடும். உத்தியோக உயர்வு உண்டு. மன அமைதி கூடும். பணவரவு உண்டு. பயணத்தடை ஏற்படும். கூட்டுத் தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். தொழில் மேன்மை உண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். கல்வியில் கவனம் தேவை. இடமாற்றம் உண்டு. தடுமாற்றம் ஏற்படும். எதிர்ப்புகள் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சரஸ்வதி தேவியார், அதிர்ஷ்ட எண்: 4,5,3,0
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,A




**விருச்சிகம்:** மன அழுத்தமும் ரண வேதனையும் விலகக்கூடிய மகத்தான வாரம். விரக்திகள் மறையும். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புத வாய்ப்பு கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்பு கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கல்வி ஈடுபாடு அதிகரிக்கும். பணப்பிரச்சனை தீரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 8,1,7,6
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,Y




**தனுசு:** முத்தாய்ப்பான முன்னேற்றங்களை சந்திக்கக்கூடிய வாரம். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவுப் போகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஜலகண்டேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 4,1,7,8
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

'ராஜயோகம்'

**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மகரம்:** விருப்பங்கள் நிறைவேறி திருப்பங்கள் நடக்கக்கூடிய வாரம். எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பெயர், புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். பொதுப் பணிகளில் ஆர்வம் ஏற்படும். திருமணத் தடைகள் நீங்கும். புதுத் தொழிலை துவங்கும் வாய்ப்பு உள்ளது. வெளியூர் பயணம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். எண்ணிய காரியம் கை கூடும். புண்ணியஸ்தலம் செல்வீர்கள்.
வழிபட வேண்டிய தெய்வம்: தேவி செல்வநாயகி, அதிர்ஷ்ட எண்: 9,4,0,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R




**கும்பம்:** பொறுமையுள்ள பெண்களுக்கு பெருமை சேரக்கூடிய அருமையான வாரம்.. கடன் சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பணநடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். அணிமணிகள் சேரும். பெண்களுக்கு யோகம் கூடும். பணப்புழக்கம் சரளமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஓம்கார சுயம்புலிங்கம், அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**மீனம்:** வேண்டாத நபர்களை விலக்கி வைக்க வேண்டிய விவேகமான வாரம்.. வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். ஜீவராசிகளுக்கு உணவு அளித்தால் யோக பலன் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பிரம்ம சக்தி அம்மன், அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

ஜீவன் முக்தி (பகுதி )107

# எதை இழந்திருக்கிறீர்கள் என்பதே தெரியாதது. கொடுமை!

இன்று வாழ்க்கை முறையால் கற்பனைகளும், கனவுகளும் குழந்தைகளுக்குள்ளே திணிக்கப்படுகின்றன. அந்த மாதிரியான வாழ்க்கை முறையைத்தான் நீங்களும் வாழுகின்றீர்கள். அதையே உங்கள் குழந்தைகளுக்கும் அமைத்துத் தந்திருக்கிறீர்கள்.



டி.வி. இன்டநெர். மஞ்சள் பத்திரிகை என இவையெலலாம் குழந்தைகள் வாழ்கின்ற சமுகத்திற்குள், பரவலாக, இலவசமாகச் சுதந்திரமாகப் புழங்குவதும் ஒரு மிகப் பெரிய கொடுமை. இது மனித குலத்திற்கு எவ்வளவு பெரிய கொடுமை இழைக்கிறது என்பது உங்களுக்குத் தெரியாது. ஒரு பிறவிக் குருடருக்கு, அவர் எதை இழந்தார் என்பதைப் புரியவைக்கமுடியாது. அது போன்றே, குழந்தைகளைப் பிறவியிலேயே குருடாக்கும் விதமாகத்தான், இன்றைய சமுதாயம் இயங்கிக் கொண்டிருக்கிறது. காமமும், கற்பனைகளும் குழந்தைகளுக்குச் சென்று சேருகின்ற மாதிரியான சமுதாயத்தைத்தான், நாம் உருவாக்கி வைத்து இருக்கிறோம்.

பாவம், இன்றைய குழந்தைகளுக்கு வெகுளித்தன்மையோடு, திறந்த கண்களோடு, தூய்மையான கண்களோடு, இந்த உலகத்தைப் பார்ப்பதற்கான வாய்ப்புக்கூட இல்லாமல் போய்விட்டது. குழந்தைகளே தெரிந்து கொள்ளுங்கள்! உங்களுடைய முப்பாட்டனுக்கு இருந்த சுதந்திரம், இன்று உங்களுக்கு இல்லை. இந்த உலகத்தைத் திறந்த கண்களோடு, எளிமையான கண்களோடு பார்க்கின்ற சுதந்திரம், இல்லாமல் போய்விட்டது. நீங்கள் பிறவி-க் குருடராக வளர்க்கப்படுகிறீர்கள். பிறவிக் குருடனுக்குத்தான் உண்மையைப் புரியவைக்க முடியாது. அவர் எதை இழந்தார் என்பது புரியாது. அதற்காக உண்மையையே குருடாக்க முடியாது.

----

அன்று பெங்களூரில் தியான சத்சங்கம். நாங்கள் சென்ற வாகனம் கோளாறாகிவிட்டதால் ஆஸ்ரமத்திற்கு திரும்பி வர, பக்தர் ஒருவர் தன்னுடைய காண்டஸா காரில் வரும்படி கேட்டுக் கொண்டார்.

எனவே கண்டஸாகாரில் ஏறி உட்கார்ந்தபடி அங்கிருந்த பக்தர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டிருந்தோம். காரின் பக்கவாட்டில் இருந்து கையை எடுப்பதற்குள் காரின் கதவு சாத்தப்பட்டது. கதவிடுக்கில் சிக்கிய கட்டைவிரல் 'சதக்' என நசுங்க, வலியும், எரிச்சலும் அந்த இடத்தில் அதிகரித்துக் கோண்டே போனது. கொஞ்ச நேரத்திலேயே அந்த எரிச்சலும், வலியும் மறைந்து போனது. அடுத்தடுத்த வேலைகளைப் பாரக்க ஆரம்பித்து விட்டோம். என்று ஆஸ்ரம பிரம்மச்சாரிகளிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னோம். வலியை கூட பரவசமாக்கும் சக்தி விழிப்புணர்விற்கு உண்டு.

***பரமஹம்ஸ நித்தியானந்தர் சுவாமிகள் வழங்கிய அமுத மொழிகள்***

மேலதிக தொடர்புகளுக்கு: (416) 439-2080

# BEST INDIAN ASTROLOGER & PSYCHIC

## Pandit: VEERANANDA

காசியில் இருந்து வருகை தந்துள்ளார்

31 வருடங்கள் அனுபவமுள்ள மற்றும் 11 தலைமுறைகளாக ஜோதிடம் பார்பவர்

உலகத்தில் சூரிய சந்திர நவக்கிரக மகிமையினாலே

இன்ப துன்பங்கள், நன்மை தீமை பற்றி விபரம் குறுவார்






**MOST POWERFUL SPIRITUALIST**

Family, Money, Childless, Health, Depression, Negativity, Husband Wife, Relationship, Marriage, Enemy, Court, Jealousy, Business, Work,Curses

- கை பார்த்து, முகம் பார்த்து அருள்வாக்கு சொல்லப்படும். புகைப்படம் பார்த்து
- ஜாதகம் பார்த்து, குறிப்புப் பார்த்து ஆரோக்கியம், மனநிம்மதி, லக்சுமி கடாட்சம் கிடைக்கவும்,
- இராசி, நட்சத்திரம் பார்த்து நடந்தது, நடப்பது, நடக்கப்போவது பற்றிச் சொல்லப்படும்.
- செய்வினை கோளாறு, பேய்பிசாசு தொந்தரவா, எதிரிகள் தொந்தரவா, கண் திருஸ்டி,
- நாகதோசம், காதல் விவகாரங்கள், தொழில், மனை அபிவிருத்தி, வாகனப் பொருத்தம்,
- காதலர் ஒற்றுமை போன்றவற்றிற்கும், வேறு பிரச்சனைகளுக்கும் உடனடியாக தீர்வு சொல்லப்படும்
- ஏந்தப் பிரச்னையாக இருந்தாலும் 5 நாட்களில் தீர்வு காண்பார

**Removes Black Magic, Jadoo, Vodoo, Obeya, Witchcft, Jinn Curses, & Gives 100% Protection**

- சர்க்கரை வியாதி
- ஆஸ்துமா
- தீராத கை-கால் வலி
- அல்சர்
- தோல் வியாதி
- அலர்ஜி
- மூட்டு வலி
- உடல் பருமான்
- அதிகரிக்க – குறைக்க
- காக்கா வலிப்பு
- ஆண்மை குறைவு
- ஞாபக சக்தி குறைவு
- மூலம்
- சிறுநீர்க் கோளாறு
- பெண்களுக்கான
- மாதவிடாய் பிரச்சனைகள்
- நரம்புத் தளர்ச்சி
- சரவாங்கி
- வாயுக்கோளாறு
- தலைவலி
- கழுத்து வலி
- முகப்பரு, தேமல்
- வெண்குட்டம்
- வாதம்
- மஞ்சல் காமாலை
- முடி உதிர்வு, உட்டணம்
- பக்கவாதம்
- நரம்பு வாதம்

எந்தவித பக்கவிளைவுகளும் கிடையாது நம்பி வாரீர் நலமுடன் வாழ்வீர் **ஆயுர்வேத சிகிச்சை**

**Call For Appoinment: 647-858-3355**

**1101 Victoria Pank Ave, # 3 , Scarborough ON M4B 2K2**

**Opp. NO FRILLS, ( VICTORIA PARK & ST CLAIR AVE )**

# அன்பின் தொனி - 602

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம் - ஜெபத்தின் வல்லமை.**

**கர்த்தரின் பிரசன்னத்தினால் பர்வதங்கள் மெழுகுபோல உருகிற்று,**

கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார், பூமி பூரிப்பாகி, திரளான தீவுகள் மகிழக்கடவது. மேகமும் மந்தாரமும் அவரைச் சூழ் ந்திருக்கிறது, நீதியும் நியாயமும் அவருடைய சிங்காசனத்தின் ஆதாரம். அக்கினி அவருக்கு முன்சென்று, சுற்றிலும் இருக்கிற அவருடைய சத்துருக்களைச் சுட்டெரிக்கிறது. அவருடைய மின்னல்கள் பூச்சக்கரத்தைப் பிரகாசிப்பித்தது, பூமி அதைக் கண்டு அதிர்ந்தது. கர்த்தரின் பிரசன்னத்தினால் பர்வதங்கள் மெழுகுபோல உருகிற்று, சர்வ பூமியினுடைய ஆண்டவரின் பிரசன்னத்தினாலேயே உருகிப்போயிற்று. வானங்கள் அவருடைய நீதியை வெளிப்படுத்துகிறது, சகல ஜனங்களும் அவருடைய மகிமையைக் காண்கிறார்கள். சொரூபங்களை வணங்கி, விக்கிரகங்களைப்பற்றிப் பெருமைபாராட்டு கிறயாவரும் வெட்கப்பட்டுப் போவார்களாக, தேவர்களே, நீங்களெல்லாரும் அவரைத் தொழுதுகொள்ளுங்கள். சீயோன் கேட்டு மகிழ்ந்தது, கர்த்தாவே, உம்முடைய நியாயத்தீர்ப்புகளினிமித்தம் யூதாவின் குமாரத்திகள் களிகூர்ந்தார்கள். கர்த்தாவே, பூமி முழுவதுக்கும் நீர் உன்னதமானவர், எல்லா தேவர்களிலும் நீரே மிகவும் உயர்ந்தவர். கர்த்தரில் அன்பு கூருகிறவர்களே, தீமையை வெறுத்துவிடுங்கள், அவர் தம்முடைய பரிசுத்தவான்களின் ஆத்துமாக்களைக் காப்பாற்றி, துன்மார்க்கரின் கைக்கு அவர்களைத் தப்புவிக்கிறார். நீதிமானுக்காக வெளிச்சமும், செம்மையான இருதயத்தாருக்காக மகிழ்ச்சியும் விதைக்கப்பட்டிருக்கிறது. நீதிமான்களே, கர்த்தருக்குள் மகிழ்ந்து, அவருடைய பரிசுத்தத்தின் நினைவுகூரு தலைக் கொண்டாடுங்கள். - **சங்கீதம் 97: 1- 12**

**அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்**

கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள், அவர் அதிசயங்களைச் செய்திருக்கிறார், அவருடைய வலதுகரமும், அவருடைய பரிசுத்த புயமும், இரட்சிப்பை உண்டாக்கினது. கர்த்தர் தமது இரட்சிப்பைப் பிரஸ்தாபமாக்கி, தமது நீதியை ஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாக விளங்கப்பண்ணினார். அவர் இஸ்ரவேல் குடும்பத்துக்காகத் தமது கிருபையையும் உண்மையையும் நினைவுகூர்ந்தார், பூமியின் எல்லைகளெல்லாம் நமது தேவனுடைய இரட்சிப்பைக் கண்டது. பூமியின் குடிகளே, நீங்களெல்லாரும் கர்த்தரை நோக்கி ஆனந்தமாய் ஆர்ப்பரியுங்கள், முழக்கமிட்டுக் கெம்பீரமாய்ப் பாடுங்கள். சுரமண்ட லத்தால் கர்த்தரைக் கீர்த்தனம்பண்ணுங்கள், சுரமண்டலத்தாலும் கீதசத்தத்தாலும் அவரைக் கீர்த்தனம்பண்ணுங்கள். கர்த்தராகிய ராஜாவின் சமுகத்தில் பூரிகைகளாலும் எக்காள சத்தத்தாலும் ஆனந்தமாய் ஆர்ப்பரியுங்கள். சமுத்திர மும் அதின் நிறைவும், பூச்சக்கரமும் அதின் குடிகளும் முழங்குவதாக. கர்த்தருக்கு முன்பாக ஆறுகள் கைகொட்டி, பர்வதங்கள் ஏகமாய்க் கெம்பீரித்துப் பாடக்கடவது. அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார், பூலோகத்தை நீதியோடும் ஜனங்களை நிதானத்தோடும் நியாயந்தீர்ப்பார்.
**- சங்கீதம் 98: 1- 9**

**எங்கள் தேவனாகிய கர்த்தாவே, நீர் அவர்களுக்கு உத்தரவு அருளினீர்**

கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார், ஜனங்கள் தத்தளிப்பார்களாக, அவர் கேருபீன்களின் மத்தியில் வீற்றிருக்கிறார், பூமி அசைவதாக. கர்த்தர் சீயோனில் பெரியவர், அவர் எல்லா ஜனங்கள்மேலும் உயர்ந்தவர். மகத்துவமும் பயங்கரமுமான உமது நாமத்தை அவர்கள் துதிப்பார்களாக, அது பரிசுத்தமுள்ளது. ராஜாவின் வல்லமை நீதியில் பிரியப்படுகிறது, தேவரீர் நியாயத்தை நிலைநிறுத்துகிறீர், நீர் யாக்கோபில் நியாயமும் நீதியும் செய்கிறீர். நம்முடைய தேவனாகிய கர்த்தரை உயர்த்தி, அவர் பாதபடியிலே பணியுங்கள், அவர் பரிசுத்தமுள்ளவர். அவருடைய ஆசாரியரில் மோசேயும் ஆரோனும், அவர் நாமத்தைப்பற்றிக் கூப்பிடுகிறவர்களில் சாமுவேலும், கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள், அவர் அவர்களுக்கு மறுஉத்தரவு அருளினார். மேகஸ்தம்பத்திலிருந்து அவர்களோடே பேசினார், அவர்கள் அவருடைய சாட்சிப்பிரமா ணங்களையும் அவர் தங்களுக்குக் கொடுத்த கட்டளையையும் கைக்கொண்டார்கள். எங்கள் தேவனாகிய கர்த்தாவே, நீர் அவர்களுக்கு உத்தரவு அருளினீர், நீர் அவர்கள் கிரியைகளினிமித்தம் நீதி சரிக்கட்டினபோதிலும், அவர்களுக்கு மன்னிக்கிற தேவனாயிருந்தீர். நம்முடைய தேவனாகிய கர்த்தரை உயர்த்தி, அவருடைய பரிசுத்த பர்வதத்திற்கு நேராகப் பணியுங்கள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் பரிசுத்தமுள்ளவர்.
**- சங்கீதம் 99: 1-9**

**கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றென்றைக்கும் உள்ளது**

பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள். மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனைசெய்து, ஆனந்தசத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள். கர்த்தரே தேவனென்று அறியுங்கள், நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார், நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம். அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள். கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றென்றைக்கும், அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது. - **சங்கீதம் 100: 1-5**

**தீங்கான காரியத்தை என் கண்முன் வைக்கமாட்டேன்**

இரக்கத்தையும் நியாயத்தையும் குறித்துப் பாடுவேன், கர்த்தாவே, உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன். உத்தமமான வழி யிலே விவேகமாய் நடப்பேன், எப்பொழுது என்னிடத்தில் வருவீர்! என் வீட்டிலே உத்தம இருதயத்தோடு நடந்துகொள் ளுவேன். தீங்கான காரியத்தை என் கண்முன் வைக்கமாட்டேன், வழி விலகுகிறவர்களின் செய்கையை வெறுக்கிறேன், அது என்னைப் பற்றாது. மாறுபாடான இருதயம் என்னைவிட்டு அகலவேண்டும், பொல்லாதவனை அறியமாட்டேன். பிற னை இரகசியமாய் அவதூறு பண்ணுகிறவனைச் சங்கரிப்பேன், மேட்டிமைக் கண்ணனையும் பெருநெஞ்சுள்ளவனையும் பொறுக்கமாட்டேன். தேசத்தில் உண்மையானவர்கள் என்னோடே வாசம்பண்ணும்படி என்கண்கள் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கும், உத்தமமான வழியில் நடக்கிறவன் என்னைச் சேவிப்பான். கபடுசெய்கிறவன் என் வீட்டுக்குள் இருப்பதி ல்லை, பொய்சொல்லுகிறவன் என் கண்முன் நிலைப்பதில்லை அக்கிரமக்காரர் ஒருவரும் கர்த்தருடைய நகரத்தில் இராத படி வேர்அறுப்புண்டுபோக, தேசத்திலுள்ள அக்கிரமக்காரர் யாவரையும் அதிகாலமே சங்கரிப்பேன். - **சங்கீதம் 101: 1-8**

*தொடரும்*

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**

- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**

- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL – SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# Carefirst Family Health Team


## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com



Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca





25 வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்

ADVICE FROM SOMEONE YOU CAN TRUST
Life insurance • Critical illness insurance • RESP
Kosalai Kumaraguruthasan*
647-981-1041
kosalai.kumaraguruthasan@sunlife.com
www.sunlife.ca/kosalai.kumaraguruthasan
Sun Life
Life's brighter under the sun



உதயம் 1300 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 5, 2021

# 1996-05-03 வெள்ளிக்கிழமைஅன்று கனடா ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயத்தில் கனடா உதயன் முதலாவது இதழ் வெளியிடப்பெற்றது




1996ம் ஆண்டு ஆயல மாதம் 3ம் திகதி கனடா ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயத்தில் கனடா உதயன் முதலாவது இதழ் வெளியிடப்பெற்றதை கனடா உதயன் ஆசிரிய பீடத்திற்கு மகிழ்ச்சியோடு ஞாபகப்படுத்திய ஊடக நண்பர் தற்போதைய கனடா 102.7 குஆ பண்பலை வானொலி நிலையத்தின் அதிபர் நடா ராஜ்குமார் அவர்களுக்கு எமது ஆசிரிய பீடத்தின் நன்றி.

சில நாட்களுக்கு முன்னர் எமது உதயன் பிரதான அலுவலகத்திற்கு ஒரு கடித உறையை தற்போதை 102.7 குஆ பிரதிநிதியும் கலைஞருமான ஸ்ரீமுருகன் கொண்டு வந்து எம்மிடம் கையளித்தார். அதை ஆர்வத்துடன் திறந்தபோது இங்கே காணப்படும் ஒரு குறிப்பும் அன்பளிப்பு ஒன்றும் இருந்தது.

(உள்ளே விபரமான செய்தி 16ம் பக்கத்தில்)




## ஒன்றாறியோ அரசாங்கம் 150 மில்லியன் டொலர்களை மாகாணத்தின் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மேலதிக வழங்குகின்றது



கோவிட்-19 தொற்றுநோயின் நிதிச் செலவுகளுக்கான தீர்வுக்கென நகராட்சி போக்குவரத்துத் துறைகளுக்கு உதவ ஒன்றாறியோ அரசாங்கம் 150 மில்லியன் டொலர்களை மேலதிக நிதியத்தினூடாக வழங்குகின்றது. இந்த நிதி, ஒன்றாறியோ அரசும் மத்திய அரசும் முன்னர் பாதுகாப்பான மீள்தொடக்க ஒப்பந்தத்தின் மூலம் வாக்களித்த 2 பில்லியனை விடமேலும் கூடுதலான நிதியாக உள்ளதுடன், நகராட்சிகள் முக்கியமான போக்குவரத்து சேவைகளை தொடர்ந்தும் வழங்க உதவியாக அமையும்.

(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)

## ஒன்றாரியோ பாடசாலைகளில் அதிகளவு கோவிட் சோதனைகளைச் செய்வதற்கான வளங்கள் இருந்தும் மிகக் குறைவாகவே அவை பயன்படுத்தப்படுகின்றனவாம்



ஒன்றாரியோ பாடசாலைகளில் அதிகளவு கோ-விட் சோதனைகளைச் செய்வதற்கான வளங்கள் இருந்தும் மிகக் குறைவான எண்ணிக்கையே செய்யப்படுகின்றன ஆனால் அந்த திறனின் பெரும்பகுதி பயன்படுத்தப்படாமல் உள்ளது. என்றும் எதிர்க்கட்சியான என்டிபி குற்றஞ்சாட்டியுள்ளது

(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)

## கனடிய சிறைச்சாலைகளில் அதிகளவு பழங்குடி சார்ந்த குற்றவாளிகளும் கறுப்பினத்தைச் சேர்ந்த குற்றவாளிகளுமே தண்டனையை அனுபவிக்கின்றார்கள்



கனடிய சிறைச்சாலைகளில் அதிகளவு பழங்குடி சார்ந்த குற்றவாளிகளும் கறுப்பினத்தைச் சேர்ந்த குற்றவாளிகளுமே தண்டனையை அனுபவிக்கின்றார்கள் என்ற உண்மையை அண்மையில் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கையின் மூலம் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளதாகவும் நீதித் துறை சார்ந்த சில நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன

இதில் ஆச்சரியம் என்னவென்றால், கனேடிய மக்கள்தொகையில் ஐந்து சதவீதத்தை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்துகின்ற , பழங்குடியினத்தைச் சார்ந்த வயதில் அதிகரித்தவர்கள் கனடாவின் மொத்த சிறைக் கைதிகள் தொகையில் 30 சதவீதத்தினராக உள்ளனர். அதே நேரத்தில் கனடிய மக்கள் தொகையில் வெறும் மூன்று வீதத்தை மட்டுமே கொண்டுள்ள கறுப்பினத்தைச் சார்நத வயதில் அதிகரித்தவர்கள் கனடிய சிறைச்சாலைகளில் உள்ள குற்றவாளிகளில் ஏழு சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் என்றும் கணிப்பிடப்டுகின்றது

(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)

## ஸ்காபுறோவில் கென்னடி-எக்ளிங்கடன் சந்திப்பில் அமைந்துள்ள சங்கர் அன் கோ நிறுவனம் வழங்கும் பரிசுப் பொருட்கள்




கென்னடி-எக்ளிங்கடன் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள சங்கர் அன் கோ நிறுவனத்தில் மிக்சி, கிரைன்டர்கள் றைஸ் குக்கர்கள் பிரசர் குக்கர்கள் ஆகியன விற்பனைக்கு போதிய கையிருப்பு உள்ளன. அவற்றுள் மிக்சி அல்லது கிறைண்டர் வாங்குபவர்களுக்கு இங்கே படத்தில் காணப்படும் அப்பச் சட்டி, குழிப்பலகார அச்சு மற்றும் வாசனைத் திரவியங்கள் வைக்கும் வசதியான மூடியோடு கூடிய கிண்ணம் போன்ற சமையலறை உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படும். இந்தச் சலுகை இரண்டு வாரங்களுக்கு மட்டுமே என்று நிர்வாகத்தினர் அறியத்தந்துள்ளனர்.

சிவராத்திரிக்குத் தேவையான பொருட்களும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்

---

-தொலைபேசி எண்கள்: 416 759 5100 - 416 759 4916

